வெளியீடு: 25-8-2003 Issued: 25-8-2003

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, ஜனவரி 28, 2003 – தொகுதி 34 – எண் 2

Tuesday the 28th January, 2003 – Volume 34 – No. 2

D
V211,31'N03
N03.34.2
184533

...பேரவைச் செயலகம், சென்னை - 600 009

...sembly Secretariat, Fort St. George,
Chennai - 600 009

[Price Rs. 3.00

**28-01-2003**

**உள்ளடக்கம்**


| | | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | **வினாக்கள்— விடைகள்—** | |
| | உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. .. | 5-40 |
| 2. | **தகவல் கோரல்—** | |
| | (அ) ஆளுநர் உரையின் தமிழாக்கம்—அவையில் | 40-44 |
| | வாசிக்காதது .. .. .. | 46-47 |
| | | 49-51 |
| | (ஆ) உறுப்பினர் உரிமை பாதிப்பு .. .. | 44-46 |
| 3. | **அறிவிப்பு—** | |
| | மாற்றுத் தலைவர்கள் பட்டியல் .. .. .. | 47 |
| 4. | **அறிக்கை அளித்தல்—** | |
| | அரசு உறுதிமொழிக் குழு .. .. .. | 47 |
| 5. | **ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும்** .. .. | 48-49 |
| | **தீர்மானத்தின் மீது விவாதம்—** .. .. .. | 52-125 |
| | டாக்டர் சி. விஜயபாஸ்கர் .. .. .. | 52-68 |
| | *டாக்டர் க. பொன்முடி .. .. .. | 69-91 |
| | *திரு. கு. ஜெயக்குமார் .. .. .. | 91-105 |
| | *திரு. சி. சிவசாமி .. .. .. | 105-125 |
| 6. | **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—** .. .. | 125-128 |


53-460—1

தமிழ்நாடு ஆவணக காப்பகம்
184533
சென்னை-600 008
லகம்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**தை 14, சித்ரபானு - திருவள்ளுவர் ஆண்டு 2034**

**2003 ஜனவரி 28, செவ்வாய்க்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை

மாற்றுவார் ஆற்றலின் பின்"

பசியைப் பொறுத்துக்கொள்ளும் நோன்பைக் கடைப்பிடிப்பதைவிட, பசித்திருக்கும் ஒருவருக்கு உணவு அளிப்பதே சிறந்ததாகும்.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 1, திரு. வெ. ஏழுமலை, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

1—

**சாலையைச் செப்பனிடுதல்**

***3300 —திரு. வெ. ஏழுமலை:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 ஜனவரி 28

(அ) செஞ்சி தொகுதி, செயங்கொண்டான், ரெட்டணை சாலையைச் செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) செஞ்சி தொகுதி, செயங்கொண்டான் - பேரணைச் சாலை 0/0 முதல் 13/660 வரை NABARD திட்டத்தின் கீழும், ரெட்டணை கீழ்மாம்பட்டு சாலை ஆண்டுப் பராமரிப்புத் திட்டத்தின் கீழும் செப்பனிடப்பட்டுள்ளன.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி, தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது செஞ்சி தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் பணிவான வணக்கத்தினையும், நன்றியினையும் புரட்சித் தலைவி பாதங்களில் சமர்ப்பித்து, செயங்கொண்டான் - பேரணை சாலையில், கீழ்மாம்பட்டு, ஈச்சூர், மரூர், நாகந்தூர் ஊராட்சிகளிலிருந்து மாணவ, மாணவிகள் பக்கத்தில் இருக்கின்ற அணிலாடி மேல்நிலைப் பள்ளிக்கு வருகின்ற காரணத்தால், அந்தச் சாலையைச் செப்பனிட இந்த நிதியாண்டில் நிதி ஒதுக்கி, ஆவன செய்யப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரெட்டணை-கீழ்மாம்பட்டு சாலையானது, கி.மீ. 6/0 முதல் 12/8 நீளம் கொண்ட தார் போடப்பட்ட மாவட்ட இதரச் சாலையாகும். இச்சாலையில் கி.மீ. 7/0 முதல் 8/0 வரை நல்ல நிலையில் உள்ளது. கி.மீ. 6/0 முதல் 7/0 மற்றும் 8/0 முதல் 12/8 வரை மழையின்போது ஏற்பட்ட குண்டு குழிகளை ஆண்டுப் பராமரிப்புப் பணிக்கான திட்டத்தின்கீழ் தார் நொடிகள் போடப்பட்டு வருகின்றன. இச்சாலையை முழுமையாக மேம்பாடு செய்யத் தோராயமாக ரூ.27.50 இலட்சம் தேவைப்படும். வரும் நிதியாண்டில் இப்பணி முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



2003 ஜனவரி 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 2, திரு. டி.பி.எம். மைதீன்கான், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

2—

## பார்வையாளர்கள் அறைக்குக் கூடுதல் வசதி

***23267—திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாளையங்கோட்டை மத்திய சிறைச்சாலையில் பார்வையாளர்கள் காத்திருக்க இருக்கைகள் கொண்ட தனி இடம், கழிப்பிட வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம்.

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாளையங்கோட்டை மத்திய சிறைச்சாலையில் விசாரணைக் கைதிகள் மற்றும் தண்டனைக் கைதிகளைப் பார்ப்பதற்காக பார்வையாளர்கள் தினசரி நூற்றுக்கணக்கான பேர் வந்து, பார்வையிடுகிறார்கள். தினசரி அங்கே பல மணி நேரம் காத்துக்கொண்டிருக்கிற சூழ்நிலை இருக்கிற காரணத்தாலும், அவர்கள் நிழலுக்கு ஒதுங்கக்கூட இடவசதி இல்லாத காரணத்தாலும், பல நேரங்களில், காலையிலே வந்தவர்கள் மாலை வரை காத்திருக்கின்ற காரணத்தாலும், கழிப்பிட வசதி இல்லையென்ற காரணத்தாலும், அவற்றை இந்த அரசு கட்டித் தருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சிறை விதிகள் தொகுப்பு 2, விதி 527-ன் படி ஒரு சிறைவாசியை மூன்று பார்வையாளர்கள் ஒரே நேரத்தில் நேர்காணல் செய்யலாம். பாளையங்கோட்டை மத்திய சிறையில் சிறைவாசிகளை நேர்காணல் செய்ய தினமும் சராசரியாக ஐம்பதுக்கும் அதிகமான பார்வையாளர்கள் சிறைக்கு வந்து செல்வதால், அவர்கள் தங்கி இளைப்பாற கழிவறை வசதிகளுடன்கூடிய பார்வையாளர்கள் அறை அமைப்பதற்கு பொதுப் பணித் துறையிடமிருந்து ரூ.8.40 இலட்சத்திற்கு திட்ட மதிப்பீடுகள் பெறப்பட்டு, அரசின் பரிசீலனையில் இருந்தபோது, கழிவறை வசதிகளுடன்கூடிய மேற்படி பார்வையாளர்கள் அறையை ரூ.5 இலட்சத்து 47 ஆயிரம் செலவில் கட்டித் தர திருநெல்வேலி கிருத்துவப் பேராயர் தானே முன்வந்து அனுமதி கோரியதால், அவருக்கு, பாளையங்கோட்டை மத்திய சிறை வளாகத்திற்குள் சிறைவாசிகளைப் பார்க்க வரும் பார்வையாளர்களுக்கு ரூ.5.47 இலட்சம் செலவில் கழிவறை வசதிகளுடைய ஓய்வு அறையைக் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்க ஆணையிட்டுள்ளது.

பாளையங்கோட்டை மத்திய சிறை வளாகத்திற்குள் உள்ள சிறைவாசிகளைப் பார்க்க வரும் பார்வையாளர்களுக்காகக் கட்டப்படும் கழிவறையுடன்கூடிய ஓய்வு அறையைக் கட்டித் தருவது தொடர்பாக எந்தவிதமான விளம்பரமும் சிறைத் துறை நிர்வாகத்திற்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் செய்யக்கூடாது என்றும், திருநெல்வேலி தென்னிந்திய கிருத்துவப் பேராயர், கட்டடம் தன்னால் கட்டப்பட்டது என்பதற்காக அவை மீது எவ்வித உரிமையும் கோரக்கூடாது என்பதோடல்லாமல், எந்தவிதமான மதச் சின்னங்களோ, பிரச்சாரங்களோ பொறிக்கக்கூடாது என்ற நிபந்தனைகளுடன் அரசு அனுமதி வழங்கி ஆணையிட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 10-05*

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே தங்குவதற்கான இடம், மாண்புமிகு அமைச்சர் சொன்னது போல ஒரு பார்வையாளர் அறை அமைக்கப்பட்டிருந்தாலும் இன்னும் தண்ணீர் வசதிகளுடன்கூடிய கழிப்பறை கட்டுவதற்கான எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு



வருகிறேன். அதேநேரத்தில் பாளையங்கோட்டை சிறைச்சாலையில் பெரும்பாலும் பல மணி நேரம் காத்திருக்கக்கூடிய சூழ்நிலை உள்ளதால் அங்கே இருக்கின்ற நிருவாகம் உடனடியாக பார்வையிடுவதற்காக வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே நான் இந்த மன்றத்திலே சொன்னதுபோல பாளையங்கோட்டையில் மத்திய சிறைச்சாலை மிகப் பெரியதாக இருந்தாலும்கூட அங்கே மகளிருக்கென தனியாக சிறைச்சாலை இல்லை; அதை இந்த அரசு கவனிக்குமா? பரிசீலனை செய்யுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலியில் கிருத்துவப் பேராயர் அமைப்புக்கு 7-1-2003 அன்று ஆணைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. நடவடிக்கை மேற்கொள்வதற்கும் துரிதப்படுத்துவதற்கும் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுவார்கள். அங்கு அதிகப்படியான அடிப்படை வசதிகள் பார்வையாளர்களுக்குத் தேவையிருப்பின் அரசு ஆய்வு செய்யும் என்றும், மகளிருக்குத் தனி சிறைச்சாலை அமைக்கப்படுமா என்ற மாண்புமிகு உறுப்பினருடைய கேள்விக்கு, அரசு ஆய்வு செய்யும் என்றும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 3, திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

**3—**

**சட்டக் கல்லூரி**

***18719—திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் சட்டக் கல்லூரி அமைக்க அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2003 ஜனவரி 28

(அ) இல்லை

(ஆ) எழவில்லை.

**திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொன்னார்கள். தமிழக அரசுக்குக் கடுமையான நிதி நெருக்கடி இருந்துவரும் இந்தச் சூழ்நிலையிலும் கடந்த ஆட்சிக் காலத்தில் பெயரளவில் மட்டுமே இருந்து வந்த குமரி மாவட்ட மருத்துவக் கல்லூரியைச் செயல்படுத்திட ரூபாய் ஆறு கோடி ஒதுக்கீடு செய்து தந்த மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு கன்னியாகுமரி மாவட்ட மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அம்மா அவர்கள் அரசு, கல்வி அறிவு மிகுந்த குமரி மாவட்ட ஏழை மாணவர்களின் நலன் கருதி வரும் கல்வி ஆண்டிலாவது கன்னியாகுமரி மாவட்டத்தில் சட்டக் கல்லூரியைக் கொண்டு வர மறு பரிசீலனை செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் சென்னை, மதுரை, கோவை, திருநெல்வேலி, திருச்சி போன்ற ஐந்து இடங்களில் சட்டக் கல்லூரிகள் செயல்பட்டுக்கொண்டு வருகின்றன. கடுமையான நிதி நெருக்கடி இருக்கின்ற சூழ்நிலையில் ஒரு சட்டக் கல்லூரி ஆரம்பிக்கப்படுவது என்றால் வருடத்திற்கு மட்டும் தொடர் செலவினமாக (Recurring Expenditure)-ஆக ரூ.10 இலட்சமும், தொடரச் செலவினமாக (Non-Recurring Expenditure) ரூ.16 இலட்சமும் தேவைப்படுகின்றது. அதுமட்டுமல்லாமல், திருநெல்வேலியிலிருந்து கன்னியாகுமரிக்குச் செல்லும்பொழுது ஏறக்குறைய 80-லிருந்து 90 கிலோ மீட்டர் distance இருக்கின்ற நிலையில் அங்கு இருக்கின்ற மாணவர்கள் திருநெல்வேலி சட்டக் கல்லூரியைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்ற கருத்தினையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும் அரசு புள்ளிவிவரப்படி 100 சதவீதம் படித்தவர்கள் நிறைந்த மாவட்டம் என்கிற பெருமையைப் பெற்றிருக்கிறது. ஆனால் என்னுடைய மாவட்டத்தின் மிக முக்கியமான கோரிக்கை



2003 ஜனவரி 28]

என்னவென்று சொன்னால் அங்கே எந்தவிதமான Professional Course கல்லூரிகளும் இதுவரைக்கும், அரசுத் தரப்பிலே இல்லை. அந்த மாவட்டத்திலே மருத்துவக் கல்லூரி வேண்டும் என்று பல காலம் வேண்டுகோள் வைக்கப்பட்டது. இப்போது அதற்கான அனுமதியைத் தந்த தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் அதற்குப் பெரும் முயற்சிகளை மேற்கொண்ட நம்முடைய சுகாதாரத் துறை அமைச்சரையும் நான் இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மாவட்டத்திலே ஒரு சட்டக் கல்லூரியை நிறுவ வேண்டுமென்ற கோரிக்கை தொடர்ச்சியாக வெகு காலமாக இருந்து வருகிறது. 80 கிலோ மீட்டர் தூரம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் நெல்லைக்கும், குமரி மாவட்டத்திற்கும். நெல்லை மாவட்டத்தில் இல்லாத Professional Course கல்லூரிகளே கிடையாது. எல்லா Professional Course கல்லூரிகளும் நெல்லை மாவட்டத்தில் அரசுத் தரப்பிலே இருக்கின்றன. வாழ்த்துக்கள். அதுபோல் கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் தனி கவனமும் சிறப்புப் பார்வையும் ஏற்படுத்தி கன்னியாகுமரி மாவட்டத்திலே ஒரு சட்டக் கல்லூரியை மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் அம்மாவிடம் கேட்டு அடுத்த ஆண்டாவது தொடங்கித் தருவதற்குப் பெருந்தன்மையோடு முன்வருவார்களா என்பதை உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத்திற்கு ஒரு Professional Course கல்லூரி ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. நிதி நிலைமை சீரடைந்த பிறகு உறுப்பினருடைய கருத்துக்கள் பற்றி யோசிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 4, திரு. இரா. திருமாவளவன், மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்.

**கட்டட வசதி**

4—

***18807—திரு. இரா. திருமாவளவன்:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2003 ஜனவரி 28

*கடலூர் மாவட்டம், மங்களூர் தொகுதி, திட்டக்குடியிலுள்ள நடுவர் நீதிமன்றத்திற்கு நிரந்தரக் கட்டடம் நடப்பு நிதியாண்டில் கட்டப்படுமா?*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இப்பொருள் குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மங்களூர் தொகுதி, திட்டக்குடியில் 1988-லிருந்து குற்றவியல் வழக்கு மன்றமும், 1996-லிருந்து உரிமையியல் வழக்கு மன்றமும் இயங்கி வருகின்றன. வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகிற அந்த வழக்கு மன்றத்தில் 25-க்கும் மேற்பட்ட அமைச்சுப் பணியாளர்களும், 25-க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்களும் ஒரே அறையிலேயே இருந்து பணியாற்ற வேண்டியிருக்கிறது; தங்களுடைய கடமைகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. அங்கே வருகின்ற பொதுமக்கள், வழக்கறிஞர்கள், அமைச்சுப் பணியாளர்கள் ஆகிய நூற்றுக்கணக்கானவர்களுக்கு ஒரே ஒரு கழிப்பறை மட்டும்தான் உள்ளது. இந்த நிலையில் அங்கே தனி குற்றவியல் வழக்கு மன்றமும், தனி உரிமையியல் வழக்கு மன்றமும் வேண்டுமென்று கோரி கடந்த 10 ஆண்டுகளாக மக்கள் போராடி வருகிறார்கள்; வழக்கறிஞர்கள் போராடி வருகிறார்கள். பல்வேறு அமைப்புகள் போராடி வருகின்றன. மேலும் அங்கே வழக்கறிஞர்களுக்கு என்று தனி அறையோ, அரசு வழக்கறிஞர்களுக்கு என்று தனி அறையோ ஒதுக்கப்படவில்லை; இடம் இல்லை. ஆகவே இந்த நிலையில் உயர் நீதிமன்றம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே அங்கே தனி வழக்கு மன்றத்தைக் கட்ட வேண்டுமென்று பரிந்துரை செய்திருக்கிறது. அதற்காக வழக்கறிஞர்கள் தங்களுடைய சொந்தச் செலவிலே, சங்கத்தின் சார்பிலே 50 சென்ட் நிலத்தை வாங்கி வைத்திருக்கிறார்கள். அரசு மேலும் 50 சென்ட் நிலம் வழங்க இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே உடனடியாக அங்கே உயர்நீதிமன்றத்தினுடைய பரிந்துரையின் அடிப்படையில் தனியே குற்றவியல் வழக்கு மன்றமும், உரிமையியல் வழக்கு மன்றமும், திட்டக்குடி அருகேயுள்ள இளமங்கலம் என்ற இடத்திலே கட்டுவதற்கு இந்த நடப்பு நிதியாண்டிலே அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



2003 ஜனவரி 28]

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல கடந்த காலங்களில் இருக்கின்ற சிரமங்கள் முழுமையாக அகற்றப்பட வேண்டுமென்கிற முனைப்போடு தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒருங்கிணைந்த ஒரு புரபோசல், கருத்துருவை உயர்நீதிமன்றத்திடமிருந்து பெற்று மத்திய அரசுக்கு—140 கோடி ரூபாயில் ஒரு கருத்துருவை அனுப்பியிருக்கிறார்கள். அந்தக் கருத்துருவின் அடிப்படையில் இரண்டு நினைவூட்டுக் கடிதங்கள்கூட மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டும் 50 சதவிகித நிதியுதவிகூட இதுவரையில் அவர்கள் தரவில்லை. எனவே இந்தச் சூழ்நிலையில் தனித்தனியாக கட்டடம் கட்டுவதைவிட phased manner-ல் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் அனைத்து நீதிமன்றக் கட்டடங்களும் முழுமையான அளவுக்கு வசதிகளைப் பெறவேண்டும் என்கிற முனைப்போடு மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. திட்டக்குடியைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள். 50 சென்ட் நிலத்தை அவர்கள் வைத்திருப்பதாகச் சொன்னார்கள். இது அரசின் கவனத்திற்கு வரவில்லை. சென்னை உயர் நீதிமன்றத்தின் கருத்தின் அடிப்படையில்தான் நாம் செயல்பட முடியும். உயர் நீதிமன்றத்தினுடைய பதிவாளர் அவர்கள் நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். எனவே மீதி 50 சதவிகித நிலம் அந்த நிலமாகத்தான் நிச்சயமாக இருக்கும் என்று கருதுகிறேன். அப்படி இருக்கின்ற பட்சத்தில் நம்முடைய வழக்கறிஞர்கள் கையகப்படுத்திய 50 சென்ட் நிலம் மற்றும் அரசுக்கு இன்னும், கட்டடம் கட்டுவதற்கு எவ்வளவு நிலம் தேவைப்படுகிறதோ, அந்த இடத்தையும் பெற்று அந்த இடத்திலே நம்முடைய தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அவர்களைக் கொண்டு உரிய நிதி பெற்று கட்டடம் கட்டித் தருவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

**திரு. இரா. திருமாவளவன்:** நடப்பு நிதியாண்டிலேயே இதைக் கட்டித் தருவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல, உயர்

[2003 ஜனவரி 28

நீதிமன்றப் பதிவாளர் அவர்களுடைய கருத்தைப் பெற்றுத்தான் நடவடிக்கை எடுக்கப்படும். அந்த 140 கோடி ரூபாயிலே, இந்தக் கருத்துரு இல்லை. தற்போது மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளை ஏற்று உயர் நீதிமன்றப் பதிவாளருடைய கருத்துக்களைப் பெற்று மத்திய அரசினுடைய நிதி உதவி கோரி அனுப்பப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 5, திரு. எஸ். தாமோதரன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**5—**

## கோயில் கும்பாபிஷேகம்

***20793—திரு. எஸ். தாமோதரன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருதுநகர் ஒன்றியம், கோல்வார்பட்டி பஞ்சாயத்திலுள்ள அருள்மிகு மீனாட்சி அம்மன் கோயிலைப் புதுப்பித்து கும்பாபிஷேகம் செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விருதுநகர் மாவட்டம், விருதுநகர் ஒன்றியம், கோல்வார்பட்டி பஞ்சாயத்தில் உள்ள மீனாட்சி அம்மன் கோயிலைப் புதுப்பித்து கும்பாபிஷேகம் செய்ய அரசால் இந்த ஆண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதற்கண் எங்களது காங்கிரஸ் கட்சியின் சார்பிலே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்னுடைய புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். நடப்பு ஆண்டிலே நல்ல மழை பெய்து நாடு சுபிட்சமாக வர அன்னை மீனாட்சிஅம்மனை வேண்டிக்கொண்டு இந்தக் கேள்வியை நான் கொடுத்துள்ளேன். கோல்வார்பட்டி கிராமத்திலேயுள்ள அருள்மிகு மீனாட்சிஅம்மன் கோயில் சுமார் 800, 900 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டு மிகவும் நல்ல முறையிலே உள்ளது. ஆனால் இது கடந்த பல ஆண்டுகளாக பராமரிக்கப்படாமல் இருந்துள்ளதால் தூர்ந்துபோய் உள்ளது. இங்கு சென்ற ஆண்டிலிருந்து ஒரு கால பூஜை நடைபெறுகிறது. இந்தத் திருக்கோயிலை முற்றிலுமாக புனரமைத்து கும்பாபிஷேகம் செய்தால் இந்தப் பகுதி மக்களுக்கு மிகவும் பயன் உள்ளதாக இருக்கும் என்பதை கூறிக்கொள்கிறேன். மேலும் இந்து அறநிலையத் துறை சம்பந்தப்பட்ட கோயில் நிலங்களுக்கு தற்போது மின்சார மீட்டர் பொருத்தி கட்டணம் வசூல் செய்து வருகிறார்கள். ஒரு ஏக்கர் நிலத்திற்கு சுமார் 2,000 ரூபாய் வரை கட்டவேண்டியுள்ளது. (மணியடிக்கப்பெற்றது).





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாமோதரன், கோல்வார்பட்டி மீனாட்சி அம்மன் கோயிலோடு நில்லுங்கள்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திட்டப்படி ஆலயங்களும் கல்விச் சாலைகளும் நன்றாக இருந்தால்தான், ஓர் ஆட்சி நன்றாக இருக்கும் என்ற அடிப்படையில் பல்வேறு ஆலயங்களில் திருப்பணிகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையில் விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், கோல்வார்பட்டி அருள்மிகு சொக்கநாதசுவாமி திருக்கோயில் இத்துறையின் ஆளுகைக்குட்பட்ட பட்டியலைச் சேராத திருக்கோயிலாகும். சாத்தூர் அருள்மிகு வெங்கடாஜலபதி திருக்கோயில் செயல் அலுவலர் தக்காராக நியமனம் செய்யப்பட்டு 14-9-2001-ல் பொறுப்பு ஏற்று உள்ளார்.

ஏற்கெனவே எட்டயபுரம் ஜமீன்தார்கள் பொறுப்பில் நிருவாகம் இருந்துள்ளது. அதற்கு 450 ஏக்கர் நிலத்திற்குமேல் இருந்துள்ளது. 1-1-1952-ல் கோல்வார்பட்டி அணைக்கட்டு கட்டுவதற்காக 399 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்துள்ளனர். எஞ்சியிருந்த 54 ஏக்கர், 72 சென்ட் நிலத்தை பல்வேறு கால கட்டங்களில் பல நபர்கள் அனுபவித்து வருகிறார்கள். உடனடியாக விசாரணை செய்து நிலங்களை மீட்க அதிகாரிகளுக்கு உரிய உத்தரவுகளை அரசு வழங்கி உள்ளது. தற்போது வருவாய் ஏதும் இல்லாமல் ஒருகால பூஜைத் திட்டத்தின்கீழ் இந்த ஆலயத்தில் பூஜை நடைபெற்று வருகிறது.

[2003 ஜனவரி 28

தற்போது கோயில் திருப்பணிகள் செய்ய சுமார் ரூ.20 இலட்சம் வரை செலவாகும். திருக்கோயிலைச் சுற்றிலும் பின்தங்கிய வகுப்பினர் அதிகம் வசிக்கின்றனர். இருப்பினும் அருகில் உள்ள நகர்ப்பகுதியில் வசிக்கும் ஆன்மீகத்தில் பற்றுள்ள செல்வந்தர்களை அணுகி திருப்பணிக் குழு அமைத்து நிதி ஆதாரம் பெருக்கி, நிதி ஆதாரத்தின் அடிப்படையில் விரைவில் திருப்பணிகள் செய்து கும்பாபிஷேகம் நடத்த இந்த அரசு முயற்சிக்கும் என்பதைத் தங்கள் மூலமாக பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய நடவடிக்கைகளுக்காக எங்கள் சட்டமன்றத் தொகுதி மக்கள் சார்பிலே மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல அந்தப் பகுதிகளிலுள்ள எல்லா விவசாயிகளும் கட்டாயமாக இந்த மீட்டர் கட்டணத்தை....(மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 6, திரு. கா.பூ. முனுசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.

**6—**

### சுகாதார நிலையங்கள்

***9849—திரு. கா.பூ. முனுசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டேனிடா திட்டத்தின்கீழ் தருமபுரி மாவட்டத்தில் துணை சுகாதார நிலையங்கள் பல கட்டிமுடிக்கப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவற்றை விரைவில் கட்டி முடிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.



2003 ஜனவரி 28]

(ஆ) டேனிடா திட்டத்தின்கீழ் தருமபுரி மாவட்டத்தில் 2001 மார்ச் வரை கட்டி முடிக்கப்படாமல் இருந்த 169 துணை சுகாதார நிலையங்களை, மாவட்ட ஆட்சியரின் நேரடி மேற்பார்வையில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மூலமாகக் கட்டி முடிக்க மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு மேற்கொண்ட தீவிர முயற்சிகளின் காரணமாக 5 துணை சுகாதார நிலையங்கள் தவிர தற்போது அனைத்தும் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. அந்த 5 சுகாதார துணை நிலையங்களும் இந்த ஆண்டு மார்ச் இறுதிக்குள் கட்டி முடிக்கப்பட்டுவிடும்.

**திரு. கா. பூ. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்ட ஏழை எளிய மக்களின் சமூகப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை சீரமைக்கும் வகையில் தருமபுரி மாவட்டத்திற்கான ஒட்டுமொத்த வளர்ச்சித் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு வருவதற்காக மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மாவட்ட மக்களின் சார்பாகவும், எங்களின் சார்பாகவும் நன்றியைக் காணிக்கையாக்குகிறோம்.

அடுத்ததாக, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் முதல் கேள்விக்கு மகிழ்ச்சியான பதிலைக் கூறியிருக்கிறார். மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து அமர்கிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம் எல்லா நிலைகளிலும் தொடர்ந்து பின்தங்கியிருக்கின்ற வறட்சியான மாவட்டம். இந்தப் பின்தங்கிய மாவட்டத்தினுடைய கிராமப்புறத்திலே இருக்கக்கூடிய மக்கள் சுகாதார வசதியைப் பெறுவதற்காக எல்லா கிராமங்களிலும் துணை சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுமா? இப்போது 169 துணை சுகாதார நிலையங்கள் கட்டி முடிக்க ஆவன செய்யப்பட்டு 5 நிலுவையில் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அது முடிந்த பிறகு அந்த மாவட்டத்திலே இருக்கக்கூடிய எல்லா கிராமங்களுக்கும் துணை சுகாதார

[2003 ஜனவரி 28

நிலையங்கள் கட்டி முடிக்கப்படுமா என்பதையும், இத்திட்டத்தை அரசு விரைவாக அமல் நடத்துமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5,000 மக்கள் தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் அமைப்பதற்கு அரசு உத்தேசித்து அந்த அடிப்படையிலே துணை சுகாதார நிலையங்கள் துவக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டபடி ஏற்கெனவே கட்டி முடிக்கப்பட்ட துணை சுகாதார நிலையங்கள் தவிர இன்னும் 32 துணை சுகாதார நிலையங்கள்தான் தருமபுரி மாவட்டத்திலே கட்டப்பட இருக்கின்றன. அவையும் மிக விரைவிலே கட்டி முடிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 7, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.

**7—**

### மருத்துவமனையில் பயிற்சி

***18465—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1993 ஆம் ஆண்டு, தொற்றுநோய் மருத்துவமனையில் ஏழை எளிய மாணவர்களுக்காகத் தொடங்கப்பட்ட பல்நோக்கு சுகாதாரப் பணியாளர்களுக்கான பயிற்சி மற்றும் செவிலியர் உதவியாளர்களுக்கான பயிற்சி அளிக்கும் திட்டம் தற்போது நடைமுறையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தண்டையார்பேட்டை தொற்றுநோய் மருத்துவமனையிலே தொடங்கப்பட்ட அந்தப் பயிற்சித் திட்டம் நிறுத்தப்பட்டுவிட்டது. அது தொடருவதற்கான வாய்ப்பு இல்லை.



2003 ஜனவரி 28]

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, தண்டையார்பேட்டையில் அமைந்திருக்கின்ற தொற்று நோய் மருத்துவமனையில் 1993 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சியிலே பணிபுரிகின்ற ஊழியர்களின் குடும்பங்களிலே இருக்கின்ற பிள்ளைகளுக்கும் மாநகராட்சியிலே பயிலுகின்ற மாணவ மாணவியருக்கும் தொடங்கப்பட்ட பயிற்சிக்கான திட்டம் இது. டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக்குப் பிறகு இத்திட்டமானது நிறுத்தப்பட்டுவிட்டது. இத்திட்டத்தால் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக்காலத்தில 500-க்கும் மேற்பட்ட ஏழை எளிய மாணவ மாணவியருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் இன்று பல்வேறு அரசாங்க மருத்துவமனைகளிலும் அப்போலோ போன்ற தனியார் மருத்துவமனைகளிலும் பணிபுரிந்து அவர்களுடைய குடும்பங்களுடைய வறுமையைப் போக்குவதற்கு உறுதுணையாக இருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இப்படிப்பட்ட பயனுள்ள திட்டத்தை நடப்பு நிதியாண்டிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துவக்க முன் வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993 ஆம் ஆண்டில் 56 மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக சென்னை மாநகராட்சியின் உத்தரவின் பேரில் பல்நோக்கு சுகாதாரப் பணியாளர்களுக்கான இந்தப் பயிற்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் இப்படி பயிற்சி ஆரம்பிப்பதற்கு முன்னால் பொது சுகாதாரத் துறை மற்றும் தமிழ்நாடு நர்சிங் கவுன்சில் ஆகியவற்றின் அனுமதியை அவர்கள் பெற்றிருக்க வேண்டும். அப்படிப் பெறாத காரணத்தினாலே அந்தப் பயிற்சிக்குள்ளான மாணவர்கள் பாதித்துவிடக் கூடாது என்பதற்காக பொது சுகாதாரத் துறை இயக்குநரகம் அந்த 56 மாணவர்களுக்கும் தேர்வெழுத அனுமதித்து அவர்களுக்குப் பட்டயமும் வழங்கப்பட்டுவிட்டது. இந்தத் திட்டம் நிறுத்தப்பட்டதற்குக் காரணம், தண்டையார்பேட்டை தொற்று நோய் மருத்துவமனை மாநகராட்சியினுடைய கட்டுப்பாட்டுக்கு உட்பட்டது. அங்கே அந்தப் பயிற்சியைப் பெறுவதற்கான வசதி வாய்ப்புகள் இல்லாத காரணத்தினாலே அந்தத் திட்டம் நிறுத்தப்பட்டுவிட்டது. இருந்தாலும், பொது சுகாதாரத் துறையின் மூலமாக தற்போது இராமநாதபுரம், நாகப்பட்டினம், திருநெல்வேலி,

சேலம், சென்னை, காஞ்சிபுரம் ஆகிய 6 மாவட்டங்களில் இந்தப் பயிற்சி நடத்தப்பட்டு வருகின்றது. இந்தப் பயிற்சியின் மூலம் பயிற்சி பெறுகிறவர்கள் சென்னை மாநகராட்சியிலே பணிபுரிவதற்குத் தகுதியானவர்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, தண்டையார்பேட்டையில் அமைந்திருக்கின்ற தொற்று நோய் மருத்துவமனையானது ஆசிய துணைக் கண்டத்திலேயே மிகவும் பிரசித்திபெற்ற அனைத்து வசதிகளுடன் கூடிய மருத்துவமனையாகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முறையான அனுமதி பெறாததால் இந்தத் திட்டம் கைவிடப்பட்டதாக அறிவித்திருந்தார்கள். மீண்டும் அதற்குண்டான முறையான அனுமதியைப் பெற்று நடப்பு நிதியாண்டிலேயே—மனித உயிர்க்கொல்லி நோய்களான மலேரியா, காலரா போன்ற நோய்களைக் கண்டறிவதற்கு உதவும் இப்பயிற்சிக்கான—இந்த வகுப்பினை உடனடியாகத் தொடங்குவதற்கு முன் வருவாரா என்பதை மீண்டும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** போவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொற்று நோய் மருத்துவமனையிலே மீண்டும் பயிற்சி பெறவேண்டும் என்று சொன்னால், அதற்கு அடிப்படையான அந்த வசதி வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொண்டு, மாநகராட்சி முறையாக அரசுக்கு விண்ணப்பிக்குமேயானால், அரசு அதைப் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 8, திரு. சோ. இராசேந்திரன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

°—

**மாணவியர் விடுதி**

**•11097—திரு. சோ. இராசேந்திரன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் பள்ளி மாணவிகளுக்கான ங்கும் விடுதி அமைக்க அரசு முன்வருமா?





**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழகத்தின் ஒட்டுமொத்தமான மக்களின் ஆதரவைப் பெற்று திராவிடத்தின் ஒளிவிளக்காக, நாளைய இந்தியத் திருநாட்டின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கும் தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, கோடிக்கணக்கான தொண்டர்களில் என்னை அடையாளம் கண்டு, அமைச்சர் பொறுப்பைக் கொடுத்ததற்காக என் சார்பாகவும், தொகுதி மக்களின் சார்பாகவும் என் நன்றியை முதலில் தெரிவித்துக் கொண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கோவில்பட்டியில் புதிய மாணவியர் விடுதிகள் திறக்கும் திட்டம் அரசின் ஆய்வில் இல்லை.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி நகரம் என்பது வளர்ந்து வருகின்ற ஒரு பெரிய நகரமாகும். அங்குள்ள அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் கிட்டத்தட்ட 2,000 மாணவிகள் கல்வி பயின்று வருகின்றார்கள். பெரும் பகுதி கிராமப்புற ஏழை எளிய மாணவிகள் கல்வி பயில்கின்ற கோவில்பட்டி நகரத்தில் தற்போது ஆதிதிராவிடர் மகளிர் விடுதி என்பது அரசின் சர்ர்பிலே நடத்தப்பட்டு வருகின்றது. அந்த விடுதியிலே கிட்டத்தட்ட 172 மாணவியர் தங்கி கல்வி பயில்கின்றார்கள். போதிய இடவசதி இல்லாத காரணத்தினாலும், பள்ளி மாணவர்கள் விடுதியிலே தங்கிப் படிப்பதற்கு இட ஒதுக்கீடு என்பது குறைந்த அளவிலே உள்ளதன் காரணமாக, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் சார்பாக புதிதாக மாணவர் விடுதி அமைக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இருக்கின்ற நிதிநெருக்கடியில் தனியார் கட்டடங்களில் இயங்கி வரும் விடுதிகளுக்குப் போதிய அடிப்படை வசதிகளுடன் அரசு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கும், அரசின் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வரும் விடுதிகளுக்கு போதிய அடிப்படை வசதிகள் செய்வதற்கும் அதிக நிதி ஒதுக்கப்பட்டு இருப்பதால் அரசின் நிதிநிலையைக் கருத்திற்கொண்டு புதிய விடுதிகள் திறப்பது என்பது தற்போது சாத்தியம் இல்லை.

[2003 ஜனவரி 28

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பாண்டிலே சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலே இருந்து அந்த விடுதிக்கு என்று நிதி ஒதுக்கீடு செய்துள்ள அடிப்படையிலே அரசினுடைய பங்களிப்பாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தேவையான வசதிகள் செய்து கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து கொடுப்பதாகச் சொன்னார்கள். சட்டமன்ற உறுப்பினர் நிதியில் இருப்பது புதிய விடுதிகள் தொடங்குவதற்கு அல்ல; விடுதிகள் கட்டுவதற்காகத்தான். ஆனால், இவர் புதிய விடுதிகள் தொடங்குவதற்காகக் கேள்வி கேட்டிருக்கிறார். நிதி ஒதுக்கி இருந்தால், அங்கே அவர் தொகுதியில் ஏதாவது ஒரு கட்டடம் கட்டுவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளப்படும் என்பதை உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 9, திரு. கே.சி. கருணாகரன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**9—**

### தனித் தொழில் தீர்ப்பாயம்

***27627—திரு. கே.சி. கருணாகரன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்திலும் தமிழ்நாட்டின் இதரப் பகுதிகளிலும் உள்ள பஞ்சாலைகளின் பிரச்சினைகளைத் தீர்க்க இத்தொழிலுக்கென தனித் தொழில் தீர்ப்பாயம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஏற்கெனவே ஒரு சிறப்பு தொழில் தீர்ப்பாயம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



2003 ஜனவரி 28]

*முற்பகல் 10-30*

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி 6 மாதங்களுக்கு முன்னாலே எழுப்பப்பட்டது. 2001 ஆம் வருடம் ஆகஸ்ட் மாதத்தில் தமிழகம் முழுவதும் பஞ்சாலைத் தொழிலாளர்களுடைய வேலை நிறுத்தம் நடைபெற்றதைத் தொடர்ந்து நம்முடைய அரசு ஓர் இடைக்கால நிவாரணத்திற்கான 10(பி) அரசு ஆணையைப் பிறப்பித்தது. அதைப் பெரும்பாலான ஆலை முதலாளிகள் அமல்படுத்தாமல் வழக்குமன்றம் போய் நிலுவையில் இருந்தது. 3 ஆண்டுகாலமாக பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கான சம்பள ஒப்பந்தம் ஏற்படவில்லை. அதையொட்டித்தான் வேலை நிறுத்தம் நடைபெற்றது. ஆகவே இரண்டு இலட்சம் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட, 18,000-க்கும் மேற்பட்ட சிறிய, பெரிய ஆலைகளைக் கொண்ட இந்தத் தொழிலுக்கு ஒரு தனித் தீர்ப்பாயம் ஏற்படுத்த வேண்டுமென்ற கேள்வி அதிலிருந்து வந்தது. அமைச்சர் அவர்கள் இங்கே தீர்ப்பாயம் அமைக்கப்பட்டதாகச் சொன்னார்கள். மகிழ்ச்சி. அதனுடைய நடவடிக்கைகளை வேகப்படுத்துவதற்கும் பஞ்சாலைத் தொழிலாளர்களுடைய சம்பளப் பிரச்சினைகளை, இதர கோரிக்கைகளைத் தீர்ப்பதற்கும் இந்தத் தீர்ப்பாயம் நடவடிக்கைகள் எடுப்பதை உறுதிப்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்ப்பாயம் உரிய நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுத்து வருகிறது. தொழிற் சங்கங்களின் கேட்பு மனுக்கள் பெறப்பட்டு இருக்கின்றன. அந்தக் கேட்பு மனுக்கள் எல்லாம் 1,692 தொழில் அதிபர்களுக்கு அனுப்பப்பட்டு இருக்கின்றன. அவை பெறப்படாமல் திரும்ப வரப்பெற்ற அந்த மனுக்கள் பத்திரிகைகளின் மூலம் விளம்பரப்படுத்தப்பட்டு தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. எனவே இந்த அரசு, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையில் அமைந்திருக்கிற தமிழக அரசு, தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்குகின்ற இந்தப் பிரச்சினையில் தனிக் கவனம் செலுத்தி செயல்பட்டுக் கொண்டு வருகிறது என்பதை உங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** அமைச்சர் அவர்களுக்கு நன்றி. இந்தத் தீர்ப்பாயத்தின் மூலமாக ஏற்கெனவே

[2003 ஜனவரி 28

அமைக்கப்பட்டிருக்கக்கூடிய முத்தரப்புக் குழுக்கள் அவற்றின் மாதாந்திரக் கூட்டங்களை நடத்துவதற்கும் அதன் மூலமாக உரிய ஆய்வுகளைச் செய்து, அறிக்கைகளைப் பெற்று, அரசு அமைச்சரவையில் ஆய்வு செய்வதும், அந்த ஆய்வுகளின் அடிப்படையில் இந்தத் தீர்ப்பாயம் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குமான தொடர் நடவடிக்கைகளை உறுதிப்படுத்த முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தரப்புக் குழுக்கள் என்பது, வேறு; இந்த தீர்ப்பாயம் என்பது வேறு. முத்தரப்புக் குழுக்கள் என்பது, அந்தந்த மாவட்டங்களில் உள்ள மூடப்பட்டிருக்கின்ற ஆலைகளைத் திறப்பதற்குரிய சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து அரசுக்கு அதனுடைய அறிக்கையைத் தந்து, அதன் மூலமாக ஆலைகளைத் திறப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் அமைக்கப்பட்டவைதான் இந்த முத்தரப்புக் குழுக்கள். அந்தக் குழுவின் அறிக்கையை விரைவாக அரசுக்குத் தர வேண்டும் என்றும், மாதம் ஒரு முறையாவது அந்தக் குழு கூடி, அரசுக்கு அறிக்கையை வழங்க வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இப்போது அறிவுரைகள் வழங்கியிருக்கிறது. இந்தப் பஞ்சாலைத் தொழிலாளர்கள் சம்பந்தமாக, இந்தப் பிரச்சினைகள் சம்பந்தமாக தொடர்ந்து தொடர் நடவடிக்கைகளை, இந்தத் தீர்ப்பாயத்தினுடைய தலைவர் நீதிபதி திரு. சௌந்திரபாண்டியன் அவர்கள் எடுத்து வருகிறார்கள் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *10*, திரு. கே. ஆறுமுகம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**10—**

### சேமிப்புக் கிடங்கு

***1582—திரு. கே. ஆறுமுகம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 ஜனவரி 28]

*(அ)* காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றிய வளாகத்தில் விதைகளைச் சேமிக்கும் புதிய கிடங்கு அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், திட்ட மதிப்பு எவ்வளவு?

*(இ)* இத்திட்டம் எப்போது நிறைவேறும்?

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ)*, *(ஆ)* மற்றும் *(இ)* காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றிய வளாகத்தில் விதைகள் சேமிக்கும் புதிய கிடங்கு அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று விவசாயிகளினுடைய வாழ்க்கை கேள்விக்குறியாகிக் கொண்டிருக்கிறது. வறட்சியினாலும், பாசனத்திற்குத் தண்ணீர் இல்லாததினாலும் விவசாயம் செய்த பயிர் முழுவதும் காய்ந்து வீணாகிவிடுகிறது. அதைப்போலவே, சில நேரங்களில் விவசாயிகள் தரமான விதைகளைப் பயன்படுத்தாத காரணத்தாலே விவசாயம் செய்த பயிர் முழுவதும் நாசமாகிவிடுகிறது. உதாரணத்திற்கு, பருத்தி பயிரிட்ட விவசாயி, அதை நன்றாக வளர்த்து, அது காய்க்க வேண்டிய நேரத்தில் முழுமையாகக் காய்க்காமல், வெறும் செடியாகவே இருக்கின்றபோது, அந்த விவசாயியின் வாழ்க்கை கேள்விக்குறியாகி, ஒருசில குடும்பங்கள் பலியாகின்ற நிலையை எல்லாம் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அந்த வகையில் இப்போது தரமான விதைகளை, நேர்த்தி செய்யப்பட்ட விதைகளைக் கொடுப்பது நம்முடைய கடமையாக இருக்கிறது. விவசாயத்தையே முழுமையாக நம்பி வாழக்கூடிய எவ்விதத் தொழில் வசதியும் இல்லாத காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியப் பகுதியிலே விதைப் பண்ணை வளாகம் அமைக்க அரசு முன்வருமா? அது நடப்பாண்டில் அமைக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2003 ஜனவரி 28

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தில் விதைகளை சேமிக்கவும், அவற்றை விவசாயிகளுக்கு வழங்கவும் கிட்டத்தட்ட 200 மெட்ரிக் டன் கொள்ளளவு உள்ள விதைகள் இருப்பு மையம் இருக்கிறது. அத்துடன் அந்த ஒன்றியப் பகுதியிலேயே ஒரு துணை மையமும் இருக்கிறது. பருவ காலங்களுக்கேற்ப இடுபொருட்கள் அதன் மூலமாக வழங்கப்படுகின்றன. தரமான விதைகள் அந்த மையங்களின் மூலமாக வழங்கப்பட்டு வருகின்றன என்பதைத் தங்களின் மூலமாக இந்தப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன், இது திருக்கழுக்குன்றம் பற்றியது.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதைகள் என்று பொதுவாக இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. விதைகள் என்று சொல்கிறபொழுது, சான்றிதழ் பெற்ற certified seed-ஐப் பற்றிச் சொல்கிறார்களா அல்லது Parent Material- ஐச் சொல்கிறார்களா என்பதை தங்களின் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சான்றிதழ் பெற்ற விதைகளைத்தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 11, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**11—**

### நெற்களங்கள்

**•17296—திரு. நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியில் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் அனைத்துக் கிராமங்களிலும் அறுவடை நெற்களங்கள் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?



2003 ஜனவரி 28]

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சீர்காழி தொகுதியில், அனைத்துக் கிராமங்களிலும் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் அறுவடை நெற்களங்கள் கட்டிக்கொடுக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியிலுள்ள ஒவ்வொரு ஊராட்சியிலும் நெல் அறுவடை செய்யும் காலங்களில் நெற்களங்கள் இல்லாத காரணத்தினால் நெற்கதிர்களை போக்குவரத்துச் சாலைகளில் வைத்துத்தான் கதிர் அடிக்கிறார்கள். இதனால் பெருமளவில் போக்குவரத்துக்கு இடர்ப்பாடு ஏற்படுவதுடன், சாலைகளில் செல்லும் பொதுமக்களின் கண்களில் தூசு பட்டு, பாதிப்புக்கு உள்ளாகின்றனர். மேலும் நெல்லின் தரமும் குறைவாகக் காணப்படுகின்றது. எனவே எனது சீர்காழி தொகுதியிலுள்ள அனைத்து ஊராட்சிகளிலும் வேளாண்மை விற்பனைக் குழுவின் உதவியுடன் நெற்களங்கள் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் மூலமாக சீர்காழி தொகுதியில் செம்பன்இருப்பு மற்றும் மாதானம் பகுதிகளில் இரண்டு நெற்களங்கள் இந்த நிதியாண்டில் கட்டித்தரப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 12, செல்வி க. பாலபாரதி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

[2003 ஜனவரி 28

12—

### பெண்கள் விடுதி

***16269—செல்வி க. பாலபாரதி:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல்லில் அரசு சார்பாக முதியோர் அல்லது உழைக்கும் பெண்கள் விடுதி உருவாக்க அரசு பரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திண்டுக்கல் மாவட்டத்தில் மத்திய அரசு நிதியுதவியுடன் 4 முதியோர் இல்லங்களையும், இரண்டு உழைக்கும் பெண்கள் விடுதிகளையும் தொண்டு நிறுவனங்கள் நடத்தி வருவதால், இம்மாவட்டத்தில் அரசு சார்பாக முதியோர் அல்லது உழைக்கும் பெண்கள் விடுதி உருவாக்க கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக திண்டுக்கல்லில் மட்டுமல்லாது, நமது சமூகத்தில் பெண் சிசுக்களை, ஆண் சிசுக்களைக்கூட இன்றைக்கு பெற்றோர்கள் கைவிடக்கூடிய சூழ்நிலை உருவாகி வருகிறது. அந்தக் குழந்தைகள் வளர்ந்து பெரியவர்கள் ஆனதற்குப் பின்பு, தங்களது பெற்றோர்களைக் கைவிடக்கூடிய ஒரு சமூக நெருக்கடிக்கு ஆளாகி வருகிறார்கள். இது தமிழகத்தில் மட்டுமல்ல, உலக அளவிலே நிகழ்ந்து கொண்டு வருகிறது. ஆகவே முதியோர்களைப் பாதுகாப்பதற்கான கடமை குழந்தைகளுக்கு மட்டுமல்ல, அரசுக்கும் இருக்கிறது. ஆகவே அதை மாநில அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் என்பது என்னுடைய கருத்து. அந்தக் கருத்திலிருந்துதான் திண்டுக்கல்லில் மாநில அரசினுடைய நிதி உதவியோடு கூடுதலாக முதியோர் இல்லம் அமைக்கப்படுமா என்பதை கொள்கை அளவில் எதிர்காலத்தில் பரிசீலிப்பீர்களா என்ற கேள்வியினை உங்கள் முன்னால் வைக்கிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது 8 மாவட்டங்களில், 9 முதியோர் இல்லங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. எஞ்சிய மாவட்டங்களில் ஒரு மாவட்டத்திற்கு ஒரு இல்லம் என்ற வகையில், ஒரு வருடத்திற்கு 4 இல்லங்கள் வீதமாக அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதலமைச்சர், மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். முதியோர்களைக் கவனிப்பதற்காக இதுவரைக்கும், உணவீட்டுச் செலவினமாக 250 ரூபாய் மட்டும் வழங்கப்பட்டு வந்ததை மனித நேயம் மிக்க தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் 500 ரூபாய் வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டு, அதுவும் வழங்கப்பட்டு வருகிறது.



2003 ஜனவரி 28]

எல்லாவற்றிற்கும் மேலாக, முதியோர்களைக் கண்ணியத்துடனும், மரியாதையோடும் நடத்தவேண்டும் என்கிற அளவில் மத்திய அரசின் அறிவுறுத்தலுக்கு இணங்க— மாநில அளவில் முதியோர்களுக்கான ஒரு கொள்கை வெளியிடப்பட வேண்டும் என்கின்ற அறிவிப்பைக் கேட்டு—இந்தியாவிலேயே நம்முடைய தமிழகத்திலேதான் முதன்முதலில் முதியோர்களுக்கான கொள்கை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடுவதற்குத் தயார் நிலையில் உள்ளது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-40*

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழைக்கும் பெண்கள் தமிழகத்தில் இன்றைக்கு இலட்சக்கணக்கில் இருக்கிறார்கள். அரசுத் துறைகளில் மட்டுமல்லாது, தனியார் துறைகளிலும் பணிபுரிகிறார்கள். இவர்கள் ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்திற்குச் சென்று பணிபுரிகிறபோது, அவர்களுக்குத் தங்கும் இடம் என்பது ஒரு பெரும் பிரச்சினையாக இருக்கிறது. வாடகை வீடு எடுப்பதற்கு தனியாக ஒரு பெண் செல்கிறபோது, அவர்களுக்கு அந்த வாடகை வீடு கிடைப்பதில் சிரமம் இருக்கிறது. அதேபோல அலுவலகத்தில் இருக்கக்கூடிய ஒரு ஆண் அதிகாரியோ, ஒரு பெண் அதிகாரியோ அவர்களுக்கு வாடகை வீடு பிடித்துக் கொடுப்பதிலும், உதவி செய்வதிலும் சிரமம் இருக்கிறது. ஆகவேதான் உழைக்கக்கூடிய பெண்களுக்கு, மாவட்டங்களில் அரசு இல்லம் அல்லது அரசு விடுதி என்பது இன்றைக்குத் தேவைப்படுகிறது. சில தனியார் நிறுவனங்கள் மத்திய அரசின் உதவியோடு உழைக்கும் பெண்களுக்கான விடுதிகளை நடத்துகிறார்கள். ஆனால் 2 மாத ஊதியத்தைப் பெற்றால்தான் ஒரு மாத வாடகையைக் கொடுக்கமுடியும் என்ற அளவிற்கு கடுமையான வாடகை இருக்கிறது. நம்முடைய தமிழகத்தில்

[2003 ஜனவரி 28

மகளிருக்கான காவல் நிலையங்கள் அதிகரிக்கின்றன. அதேபோன்று பெண்களுக்கான சுகாதார வளாகங்கள் கட்டப்படுகின்றன. அதேபோன்று மாவட்டந்தோறும் சட்டமன்ற உறுப்பினர்கள் நிதியிலிருந்து உழைக்கும் பெண்களுக்கான விடுதி கட்டப்படவேண்டும் என்பதை கொள்கை அளவில் அரசு பரிசீலிக்குமா என்ற கேள்வியைக் கேட்க விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறையின்கீழ் மொத்தம் 8 அரசு பணிபுரியும் மகளிர் விடுதிகள் செயல்படுத்தப்படுகின்றன. தனியார் தொண்டு நிறுவனங்களால் 89 பணிபுரியும் மகளிர் இல்லங்கள் நடத்துவதற்கு மத்திய அரசு, தமிழக அரசின் உதவியோடு மானிய உதவி வழங்கியுள்ளது. அதைத்தவிர தொண்டு நிறுவனங்கள் அரசினுடைய அனுமதியைப் பெறாமல்கூட பல்வேறு பகுதிகளில், நகர்ப்புறங்களில் இதுபோன்ற விடுதிகளை நடத்திக் கொண்டிருக்கின்றன. எனவே உழைக்கும் மகளிரை மனதிலேகொண்டு—மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய யோசனை, நல்ல யோசனை—எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களும் இதற்குச் சம்மதிப்பார்களேயானால், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, இதை அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 13, திரு. ப. பொன்னம்பலம், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

**13—**

## மாணவிகளுக்கு விடுதி

***20608—திரு. ப. பொன்னம்பலம்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு ஒன்றியம், சமயநல்லூர் தொகுதி, இளமனூரில் ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் பயிலும் மாணவிகளுக்கு தங்கும் விடுதி கட்டித் தரும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?



2003 ஜனவரி 28]

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புதியதாக மாணவ, மாணவியர் விடுதிகள் தொடங்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் காவல் தெய்வம், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் நல்லாட்சி நடைபெறுகிறது. தமிழகத்தில் வாடகைக் கட்டடங்களில் செயல்படுகின்ற ஆதிதிராவிடர் மாணவ, மாணவியர் விடுதிகளை எந்த ஆட்சியிலும் இல்லாத வகையில், சொந்தக் கட்டடங்களில் மாற்றி அமைப்பேன் என்று உறுதியளித்த அம்மா அவர்கள் அதைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதை ஆதிதிராவிட மக்களும், மாணவ, மாணவிகளும் வாழ்த்துகிறார்கள். சமயநல்லூர் தொகுதியில் ஆதிதிராவிட மாணவர் இல்லங்கள் நிறைய உள்ளன. அதுபோல் பெண்களுக்கென்றே இளமனூர் ஆதிதிராவிடர் மாணவியர் பள்ளியிலும், சத்திரப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளி, காஞ்சரம்பேட்டை, நல்லமணி மேல்நிலைப் பள்ளி, ஊமச்சிகுளம் உயர்நிலைப் பள்ளி ஆகிய பள்ளிகளை இணைத்து மாணவியர் விடுதி கட்டிக் கொடுக்க அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் சமயநல்லூர் தொகுதியில் 11 விடுதிகள் இருக்கின்றன. அதில் 8 விடுதிகள் அரசு சொந்தக் கட்டடங்களிலும், 3 விடுதிகள் வாடகைக் கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. அந்த மூன்று விடுதிகளுக்கும் அரசு சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு இடத் தேர்வுகள் செய்யும் பணி தற்போது விரைவாக நடந்து வருகிறது. அதிலும் குறிப்பாக, நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள், வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்ற அனைத்து விடுதிகளுக்கும் சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார்கள். நம்முடைய உறுப்பினர் அவர்கள், பெண்களுக்குப் புதிதாக விடுதிகளைத் தொடங்க

[2003 ஜனவரி 28

வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சர் அம்மா அவர்கள், முதலமைச்சராகப் பொறுப்பேற்ற உடனேயே பெண்கள் கல்வியில் உயர வேண்டும் என்பதற்காக, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின ப்ளஸ் 1, ப்ளஸ் 2 படிக்கின்ற மாணவிகளுக்கு, இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, புரட்சிகரமான திட்டத்தை, இலவசமாக மிதிவண்டி வழங்கும் திட்டத்தை அறிவிப்பு செய்து, இரண்டு ஆண்டுக்குள்—கடந்த ஆண்டு 56,525 மிதிவண்டிகளும், இந்த ஆண்டு 47,980 மிதிவண்டிகளும்—1,04,505 மிதிவண்டிகளை வழங்கியிருக்கிறார்கள். அதற்கான செலவு, ஏறக்குறைய 15 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, மாணவிகளுக்கு முதுநிலை பட்ட மேற்படிப்பு வரை இலவசமாக—மகளிருக்கு—கல்வி கற்றுக் கொடுக்க வேண்டும் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அதுபோல கல்லூரிகளில் பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு படிக்கின்ற மாணவ மாணவியர்களுக்கு, கல்விக் கடனை முழு மானியமாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, தமிழ்நாட்டில் முழு மானியமாக ஆக்க வேண்டுமென்று சொல்லி அதற்காக 5 கோடி ரூபாயை வழங்கியிருக்கிறார்கள். இப்படி அள்ளி அள்ளிக் கொடுக்கிற வள்ளலின் வாரிசாக நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு விளங்கி வருகிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையும் கனிவோடு கவனத்தில் கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 14, திரு. க. முருகவேல் ராஜன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**14—**

## பேருந்து வசதி

***6622—திரு. க. முருகவேல் ராஜன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, சத்தியவாடி கிராமத்திற்குப் பேருந்து வசதி இல்லை என்பதால் தடம் எண் 29 பேருந்து திண்டிவனத்தில் இருந்து சத்தியவாடி கிராமம் வழியாகச் சென்றுவர அரசு ஆவன செய்யுமா?



2003 ஜனவரி 28]

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திண்டிவனத்திலிருந்து வெள்ளிமேடுபேட்டை, காட்டேரி, இராமலிங்கபுரம், தெய்யார் மார்கமாக இயக்கப்பட்டு வரும் டி-29 நகரப் பேருந்தின் நடைகளை கொடியம், தாதாபுரம், சத்தியவாடி, செங்கேணிக்குப்பம், இராமலிங்கபுரம் வழியாக கோரிக்கைப்படி தடமாற்றம் செய்தால் தட நீளம் 9.2 கிலோமீட்டர் கூடுதலாகும். இதனால் 5 கட்டண நிலைகளும், அதற்கேற்ற நிலையில் பயண நேரமும் கூடுதலாகும். எனவே மேற்கண்ட காரணங்களால் டி-29 நகரப் பேருந்தின் நடைகளைச் சத்தியவாடி வழியாக தடமாற்றம் செய்ய இயலாத நிலை உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய திருவண்ணாமலை மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். அதுவும் வந்தவாசி தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி என்பது தாங்கள் அறிந்ததே. நான் சத்தியவாடி, அருங்குணம் வழியாக திண்டிவனத்திலிருந்து இயக்குகிற தடம் எண் 29 பேருந்தை வந்தவாசி வழியாகத் திருப்பி அனுப்ப முடியுமா என்று இங்கு வினா எழுப்பியிருக்கிறேன். நிலைமை என்னவென்று சொன்னால், சத்தியவாடி, அருங்குணம் பகுதியிலிருந்து வந்தவாசிக்குப் போக வேண்டுமென்று சொன்னால், அவர்கள் மேல்மாபுரம் கூட்டுரோடு வந்து, திண்டிவனம் போய் வந்தவாசிக்கு வர வேண்டும்; ஒன்று. இல்லையென்றால், வெள்ளிமேடுபேட்டையிலிருந்து செல்ல வேண்டும். வந்தவாசிக்குப் போவதற்கு அந்த மக்கள் பேருந்திற்காகக் காத்திருந்து, கிட்டத்தட்ட 20 கிலோமீட்டர் கூடுதலாகப் பயணம் செய்ய வேண்டியிருக்கிறது. ஆனால் திண்டிவனத்திற்குப் போவதற்கு மட்டும்தான் 25, 25ஏ என்கிற பேருந்து வருகிறதே தவிர, அங்கிருந்து வந்தவாசி போவதற்கு எந்த வசதியும் இல்லை. மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக 22-ஜி என்கிற பேருந்து, செஞ்சியிலிருந்து சென்னைக்குச் சென்ற பேருந்து நான் சொல்கின்ற சத்தியவாடி, அருங்குணம் என்கிற கிராமங்கள் வழியாகச் செல்லும்படியான நிலைமை இருந்தது. அதன்மூலமாக, மேல்மாவலங்கை, தாதாபுரம், சத்தியவாடி, அருங்குணம், தெய்யார், செம்பூர், வந்தவாசி போன்ற எல்லாப் பகுதி மக்களும் பயன்பெற்று வந்தார்கள். ஆனால் இன்றைக்கு சத்தியவாடிக்கு டபிள்யு-9 என்கின்ற ஒரு பேருந்து இயக்கப்படுகிறது. ஆனால் நிலைமை என்னவென்றால், பெயர்ப் பலகையிலே சத்தியவாடி, அருங்குணம் கிராமத்திற்கு வருகிறது என்று

குறிப்பிடப்பட்டிருக்கிறதே தவிர, அந்தக் கிராமத்திற்கு அந்தப் பேருந்து வருவதேயில்லை. நாவல்வாடி என்ற கிராமம் வரைக்கும் வந்து செல்கிறது. எனவே இன்றைக்கு நான் சொல்கிற சத்தியவாடி-அருங்குணம் பகுதியிலே வாழ்கின்ற மக்கள் ஒரு தீவிலே வாழ்வதைப்போல் இருக்கிறார்கள். இந்த அரசு கட்டணத்தை உயர்த்த வேண்டும், அடிப்படை வசதிகளை...

*முற்பகல் 10-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *முருகவேல் ராஜன் என்ன செய்ய வேண்டும்?*

**திரு. க. முருகவேல் ராஜன்:** எங்களுடைய கோரிக்கை என்னவென்றால், தூரம் அதிகமாக இருக்கிறது, அதிக ஸ்டேஜ்கள் இயக்க வேண்டியிருக்கிறது என்பதற்காக, அந்தக் காரணத்தைச் சொல்லி நாம் பேருந்துகளை இயக்காமல் விட்டுவிடுவோம் என்று சொன்னால், அந்தப் பகுதியிலே வாழக்கூடிய மக்கள், அதிலும் பின்தங்கிய பகுதியிலே வாழக்கூடிய மக்கள், பள்ளிக்குப் போகின்ற குழந்தைகள், கல்லூரிக்குப் போகிறவர்கள்கூட போக முடியாத நிலைமையிருக்கிறது. எனவே மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அந்த வழியாக, பேருந்தைத் திருப்பி திண்டிவனத்திலிருந்து வந்தவாசி வரைக்குமான தடம் எண் 29-ஐ அந்த வழியாக அனுப்ப முடியவில்லையென்றால்கூட, டபிள்யு-9 பேருந்தையாவது- சத்தியவாடி-அருங்குணத்திற்கு ஒதுக்கப்பட்ட பேருந்து அதுவரை வரும் என்கின்ற உறுதியையாவது- தருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திண்டிவனத்திலிருந்து சத்தியவாடி கிராமம் வழியாக அந்தப் பேருந்து சென்று வர அரசு ஆவன செய்யுமா என்றுதான் கேட்டு இருந்தார். அதன் அடிப்படையிலே திண்டிவனத்திலிருந்து சத்தியவாடி கிராமத்திற்கு வழித் தட எண் டி-10 மூலமாக, திண்டிவனம், திண்டிவனத்திலிருந்து கொடியம், தாதாபுரம் சத்தியவாடி வழியாக வேப்பங்கரணை வரை 6 நடைகள் செல்கின்றன. அதேபோல வழித்தட எண் டி-29 மூலமாக திண்டிவனத்திலிருந்து கொடியம், தாதாபுரம், சத்தியவாடி வழியாக செங்கேணிக்குப்பம் என்ற ஊருக்கு 4 நடைகள் இயக்கப்படுகின்றன. அதேபோல டி-25 திண்டிவனத்திலிருந்து கொடியம், தாதாபுரம், சத்தியவாடி, செங்கேணிக்குப்பம் வழியாக நல்லூர் வரை 4 நடைகள்





இயக்கப்படுகின்றன. அதேபோல ஜெயலட்சுமி என்கின்ற தனியார் பேருந்து மூலமாக, திண்டிவனத்திலிருந்து தாதாபுரம், சத்தியவாடி வழியாக சத்தியவாடி குறுக்கு ரோடு வரை 8 நடைகள் இயக்கப்படுகின்றன. ஆக மொத்தம் உறுப்பினர் கேட்ட அந்த சத்தியவாடிக்கு 22 நடைகள் தற்போது இயக்கப்பட்டு வருகின்றன. ஆகவே இந்தக் கிராமத்திற்கு தற்போதுள்ள போக்குவரத்து வசதியே போதுமானதாகக் கருதப்படுகிறது. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்த குறுக்கு ரோட்டில் 9.2 கி.மீ. தூரத்தை இணைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். அதையும் அரசு சிந்திக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 22 நடைகள் திண்டிவனத்திற்கு வண்டி போகிறது என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் அதிலிருந்து 8 கி.மீ. இருக்கக்கூடிய வந்தவாசி போவதற்கு பொது மக்கள் 22 கி.மீ. போய்த்தான் திரும்ப வேண்டுமென்று சொன்னால் அது எவ்வளவு கஷ்டமாக இருக்கும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சத்தியவாடிக்கு ஒதுக்கப்பட்ட தடம் எண் டபிள்யு-9 பேருந்து அந்த ஊருக்கு வருவதில்லை. வந்தவாசிக்குப் போகவேண்டியவர்கள் 22 கி.மீ. சுற்றிப் போகவேண்டியிருக்கிறது. எனவே அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட அந்தப் பேருந்தாவது அந்தக் கிராமத்திற்கு வருவதற்கு அரசு ஆவன செய்யுமா? அதற்கு வழிவகை செய்யப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள வழித்தடங்களில் பேருந்துகள் வருவதில்லையென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதுகுறித்து உரிய நடவடிக்கை எடுத்து அந்தந்த வழித்தடங்களில் பேருந்துகள் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 15, திரு. கே.ஆர். இராமசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

15—

## கூடுதல் பேருந்து

**•9730—திரு. கே.ஆர். இராமசாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேவகோட்டை, சருகனி, பொன்னலக்கோட்டை, சூராணம் வழியாக கூடுதலாக அரசுப் பேருந்துகளை இயக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தேவகோட்டை, சருகனி, பொன்னலக்கோட்டை, சூராணம் வழியாக கூடுதல் பேருந்துகள் இயக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவகோட்டையிலிருந்து சூராணத்திற்கு இப்போது இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய பேருந்துகளினுடைய நடைகள் போதாத நிலை அங்கே ஏற்பட்டு இருக்கிறது. இப்போது பேருந்துகளின் கூரைகளிலே மக்கள் பயணம் செய்யக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதனால் உடனடியாக கூடுதல் நடைகளை அந்த வழித்தடங்களில் ஏற்படுத்துவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவகோட்டை, சருகனி, பொன்னலக்கோட்டை, சூராணம் வழியாக நாள் ஒன்றிற்கு காரைக்குடி அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் 12 நடைகளும், தனியார் பேருந்துகளினால் 6 நடைகளும் ஆக மொத்தம் 18 நடைகள் பேருந்து வசதியுள்ளது. இவ்வழித் தடங்களில் பயணம் செய்யும் பயணிகளின் அடர்வு 75% ஆகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பயணிகள் கூரைகளிலெல்லாம் அமர்ந்து பயணம் செய்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் அங்கே பயணிகள் அடர்வு 75



சதவீதம்தான் இருக்கிறது என்பதை நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். கோரிக்கை தடத்தில் தற்போது இயக்கப்படும் பேருந்து வசதியே போதுமான அளவிற்கு இருக்கிறது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை தடத்தில் கூடுதல் பேருந்துகள் இயக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-55*

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வழித்தடத்தில் இயங்கிக் கொண்டு இருக்கக்கூடிய பேருந்துகள் எல்லாம் பழைய பேருந்துகளாக இருக்கின்றன. உண்மையிலேயே அந்தப் பேருந்துகளின் கூரைகளிலே மக்கள் அமர்ந்து பிரயாணம் செய்வதை நான் நேரிலேயே பார்த்து இருக்கிறேன். எனவே தயவுகூர்ந்து நீங்கள் இந்த வழித்தடத்தில் கூடுதல் நடைகளை இயக்குவதற்கு ஏற்பாடு செய்ய முன்வருவீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழைய பேருந்துகள் இயக்கப்படுவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்புதான் இப்படிப்பட்ட நிலைகளையெல்லாம் மாற்றி, படிப்படியாக இப்போது புதிய பேருந்துகள் வாங்கப்பட்டு, பழைய பேருந்துகளை மாற்றி புதிய பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதன் அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து அந்தப் பகுதியிலே ஓடுகின்ற பழைய பேருந்துகளை மாற்றுவதற்குரிய நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கூடுதல் வசதி கேட்டு இருக்கிறார்கள். இப்போது இருக்கின்ற வசதியே போதுமானதாக இருக்கிறது என்று அரசு கருதுகிறது. இருந்தாலும்கூட இன்னும் கூடுதல் பேருந்து வசதி வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதினாரானால் அதைப்பற்றியும் அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 16, திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

16—

**மின் உற்பத்தி**

**•20227—திரு. சி. சண்முகவேலு:**

*மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மரபு சாரா எரிசக்தி ஆதாரங்களைக் கொண்டு உடுமலைப்பேட்டை பகுதியில் மின்சாரம் தயாரிக்க அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டில் காற்று சக்தியிலிருந்து மின்சாரம் தயாரிப்பதற்கு எல்லா நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வந்துள்ளது. இதற்காக 67 காற்று அளவிடும் நிலையங்கள் நிறுவப்பட்டு, காற்றின் வேகம் பதிவு செய்யப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு, அந்த இடங்கள் காற்றாலைப் பண்ணைகள் நிறுவுவதற்கு உகந்ததாக அறிவிக்கப்படுகிறது. அவற்றில் ஒன்று உடுமலைப்பேட்டை தாலுகாவில் அந்தியூரில் நிறுவப்பட்டது. அங்கு காற்றின் வேகம் மணிக்கு 19.1 கி.மீ. என்று நிர்ணயிக்கப்பட்டு அந்த இடம் காற்றாலைப் பண்ணை நிறுவுவதற்கு உகந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த இடத்தில் தனியார் முதலீட்டாளர்களால் இதுவரை 74 காற்றாலை இயந்திரங்கள் மூலம் 27 மெகாவாட் மின்சாரம் தயாரித்து மின் கட்டமைப்புக்கு வழங்கப்பட்டுள்ளது. உடுமலைப்பேட்டை தாலுகாவில் மொத்தமாக எடுத்துக்கொண்டால் 547 காற்றாலை இயந்திரங்கள் நிறுவப்பட்டு 154 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கப்படுகிறது. இது தமிழ்நாட்டின் மொத்தத் திறனான 860 மெகாவாட்டில் 17 விழுக்காடு ஆகும். ஆகவே உடுமலைப்பேட்டை பகுதி, தனியார் முதலீட்டாளர்கள் காற்றாலைப் பண்ணைகள் நிறுவுவதற்கு மிக உகந்த இடமாக உள்ளது. ஆகவே இந்தப் பகுதியில் காற்று சக்தி மூலம் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் எதுவும் இல்லை.

மேலும் உடுமலைப்பேட்டை தாலுகாவில் உபரி தாவரக் கழிவுகளின் அளவை தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் ஆய்வு செய்து, அங்கு





9 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் உள்ளது என மதிப்பீடு செய்துள்ளது. இதனடிப்படையில் தனி நபர்கள் புதிய திட்டம் தயாரித்து மின் உற்பத்தி செய்ய முன் வந்தால் அரசு உதவிகள் செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடுமலைப்பேட்டை பகுதியிலே தனியார் காற்றாலைகள் மூலமாக மின் உற்பத்தி செய்யக்கூடிய வாய்ப்புகள் அதிகமாக உள்ளன; அரசு மூலமாக செய்யக்கூடிய சூழ்நிலை இல்லை என்று கூறினார்கள். இருப்பினும் தமிழ்நாட்டில். காற்றாலைகள், காற்று மூலமாக மின் உற்பத்தி செய்யக்கூடிய காற்றாலைப் பண்ணைகள் பெருகி உள்ளன. இந்த நிலையில் தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறு பகுதியைப்போல எங்கள் பகுதியிலும் அதிகமான யூனிட் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய காற்றாலை இயந்திரங்களை அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தித் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலைகள் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகியவை மூலம் என்னுடைய தொகுதியிலுள்ள நாவடப்பு, தளிஞ்சி, மஞ்சப்பட்டி போன்ற மலைவாழ் மக்கள் அதிகமாக வாழ்கின்ற கிராமப் பகுதிகளைப் புதுப்பிக்கக்கூடிய வகையிலே சோலார் விளக்கு, சூரிய ஒளி பம்ப் நிறுவ அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூரிய சக்தியைப் பயன்படுத்துவது பற்றிக் கூறும்போது, சூரிய ஒளி மின்சாதனங்களான லாந்தர்கள், வீட்டு விளக்குகள், தெரு விளக்குகள் ஆகியவற்றை தொலைதூரப் பிரதேசங்களில் பயன்படுத்த நல்ல சாத்தியக்கூறுகள் உள்ளன. அதேபோல் சூரிய வெப்ப சக்தியை, விவசாய உற்பத்திப் பொருள்களான தானியங்கள், பழ வகை ஆகியவற்றை உலர்த்துவதற்குப் பயன்படுத்தலாம். தனியார் முதலீட்டாளர்கள்...

[2003 ஜனவரி 28

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பதிலுரையை முடிக்கிற வரைக்கும் கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** சூரிய வெப்ப சுடுகாற்று அல்லது உலர வைக்கும் அமைப்புகளை நிறுவ முன்வருவார்களேயானால், அதற்காக தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம், அந்தத் திட்டங்களுக்கு ஒப்புதல் தர தேவையான உதவிகளை அளிக்கும். மேலும் சூரிய சக்தியிலிருந்து மின்சாரமும் தயாரிக்க முடியும். ஆனால் அதற்குக் கூடுதல் செலவாகிறது. ஒரு யூனிட் மின்சாரம் தயாரிக்க ரூ.10 செலவாகிறது. ஆனாலும் மேற்கூரையில் சோலார் மின்மாற்றிகள் மூலம் மின்சாரம் தயாரித்து, மின் விளக்குகள் மற்றும் கம்ப்யூட்டர்கள் இயங்கப் பயன்படுத்தலாம். ஒரு கிலோவாட் திறன் கொண்ட மின் நிலையம் அமைப்பதற்கு ரூ.3.50 இலட்சம் செலவாகும். வணிகம் அல்லாத நிறுவனங்களுக்கு இந்த மின் நிலையம் அமைப்பதற்கு மத்திய அரசு 50 விழுக்காடு மானியம் 2001-2002 வரை வழங்கியுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஞ்சிய வினாக்கள் பிறிதொரு நாளில் எடுத்துக்கொள்ளப்படும். வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### (அ) ஆளுநர் உரையின் தமிழாக்கம்-அவையில் வாசிக்காதது

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....



2003 ஜனவரி 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் ஒருவர் சொல்லுங்கள். (குறுக்கீடு) குமாரதாஸ் ஓர் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார். இப்போது நான் அதற்குப் பதில் சொல்லப்போகிறேன். (குறுக்கீடுகள்) அவர் கொடுத்தது இருக்கிறது, உட்காருங்கள். இப்போது நான் அதற்குப் பதில் சொல்லப்போகிறேன். (குறுக்கீடுகள்) குமாரதாஸ் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அறிவிப்பு வந்திருக்கிறது. பதில் சொல்லப்போகிறேன். (குறுக்கீடுகள்) கடந்த 22 ஆம் தேதி வந்திருக்கிறது. பதில் சொல்லப்போகிறேன். (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய கவனத்திற்கு 2 பிரச்சினைகளைக் கொண்டுவர விரும்புகிறேன். ஒன்று, நடந்து முடிந்த ஒரு நிகழ்வு. இன்னொன்று, நடந்து கொண்டிருக்கிற ஒரு பிரச்சினை. நடந்து முடிந்த நிகழ்வு என்பது, ஆளுநர் உரை இந்த மாமன்றத்தில் படிக்கப்பட்ட நேரத்தில், மேதகு ஆளுநர் அவர்கள் ஆங்கிலத்திலே ஆளுநர் உரையை படித்து முடித்த பிறகு, தமிழில், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், அதுபற்றி நான் விளக்கம் சொல்லவிருக்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** நான் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், அதைத் தமிழிலும் படிப்பது வழக்கம். தமிழ்நாடு சட்டமன்றத்தில், தமிழிலும் ஆளுநர் உரை படிக்கப்பட்டது என்ற ஒரு நல்ல திட்டத்தை இந்த மாமன்றத்திலே அறிமுகப்படுத்தியவர் முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் என்பதை நான் மறக்கக்கூடியவன் அல்ல. ஆனால் அவருடைய திட்டம் இன்றைக்குக் கைவிடப்பட்டிருக்கிறது. ஒருகால், அவருடைய திட்டம் கைவிடப்பட்டதா? அல்லது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கு விளக்கம் சொல்லப் போகிறேன் நான். (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** அதோடு இணைத்து ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நேரம் இல்லை என்று சொல்லியிருக்கிறீர்கள். நான் ஆச்சரியப்பட்டேன். தமிழுக்கு இடமில்லை என்பதைத்தான், 'இடக்கரடக்கல்' என்ற இலக்கணத்தின் அடிப்படையில் நேரம் இல்லை என்று சொன்னீர்களா என்பதைத் தாங்கள் அறிவிக்க வேண்டுகிறேன். இரண்டாவது....

[2003 ஜனவரி 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அதற்கு விளக்கம் சொல்லிவிடுகிறேன்.

**திரு. துரைமுருகன்:** இன்னொன்றையும் நான் சொல்லிவிடுகிறேன். அதற்கும் சேர்த்து பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கு நான் பதில் சொல்லிவிடுகிறேன். *(குறுக்கீடு)*

**திரு. துரைமுருகன்:** அதேபோல் இரண்டாவது, இங்கே நடந்து கொண்டிருக்கிற பிரச்சினை. நம்முடைய மாநிலத்தில் உற்பத்தியாகி, கேரளாவிலே ஓடி வருகிற பவானி ஆற்றின் குறுக்கே, கேரள அரசு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பவானி ஆறு பற்றி ஆளுநர் உரையிலே வருகிறது. *(குறுக்கீடு)* அதுபற்றி விளக்கம் சொல்ல வாய்ப்பு இருக்கிறது. *(குறுக்கீடு)*

**திரு. துரைமுருகன்:** அதற்கு நான் தனியாக தீர்மானம் கொடுக்க முடியாது. இப்போது சொல்கிறேன். ஆனால், கேரள அரசு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதைப்பற்றி தீர்ப்பு நான் சொல்லிவிடுகிறேன். *(குறுக்கீடுகள்)* திரு. குமாரதாஸ், நீங்கள் எழுப்பிய பிரச்சினைக்குப் பதில் சொல்கிறேன். அதற்குப் பிறகு வாய்ப்புத் தருகிறேன். *(குறுக்கீடுகள்)* அதற்குப் பிறகு வாய்ப்புத் தருகிறேன். *(குறுக்கீடுகள்)*

**திரு. பரிதி இளம்வழுதி:** நான் கொடுத்ததையும் சேர்த்துச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *23-1-2003* அன்று ஆளுநர் உரையின்போது, ஆளுநர் உரையின் தமிழாக்கம், பேரவைத் தலைவரால் அவையில் வாசிக்கப்பெறாதது குறித்து தெரிவிக்கக் கோரி, டாக்டர் குமாரதாஸ் சட்டமன்ற உறுப்பினர் அவர்களும், இதே பொருள் குறித்து உரிமைப் பிரச்சினையாக திரு. பரிதி இளம்வழுதி அவர்களும், சட்டமன்ற உறுப்பினர் திரு. திருமாவளவன் அவர்களும் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதுகுறித்து ஏற்கெனவே பத்திரிகைகளுக்கு விளக்கமாகத் தெரிவித்துள்ளேன். இருந்தாலும் கீழ்க்கண்ட முடிவினை அவைக்குத் தெரிவிக்கிறேன்.

இந்திய அரசமைப்புச் சட்டம், பிரிவு 176-இன்கீழ் ஒவ்வோராண்டும் முதல் சட்டமன்றக் கூட்டத் தொடரில் ஆளுநர் அவர்கள் உரையாற்றுவார்கள். ஆளுநர் அவர்கள் எந்த மொழியில் உரையாற்ற வேண்டுமென்று, இந்திய அரசமைப்புச் சட்டத்திலோ அல்லது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளிலோ எதுவும் கூறப்படவில்லை. தமிழ்நாடு சட்டமன்றத்தைப் பொறுத்த அளவில், ஆளுநர் அவர்கள் ஆங்கிலத்திலேயே உரையை வாசிப்பது வழக்கம். அவர் உரையாற்றத் தொடங்கும்போது, அவர் உரையின் நகல், ஆங்கிலத்திலும், தமிழிலும் அச்சடிக்கப்பட்டு பேரவையிலேயே வழங்கப்பட்டு வருகிறது. எனவே முந்தைய காலகட்டங்களில் ஆளுநர் உரையின் தமிழாக்கம் மாண்புமிகு பேரவைத் தலைவர்களால் அவையில் வாசிக்கப்படவில்லை. பின்னர் 1977 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது 7-7-1977 அன்று ஆளுநர் உரை ஆற்றிய பின், முதன் முதலாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஆளுநர் உரையின் தமிழாக்கத்தை அவையில் வாசித்தார். அதன் பின்னரே இந்த முறை கடைப்பிடிக்கப்பட்டு வந்தது.





*முற்பகல் 11-05*

பிற மாநிலங்களான கர்நாடகம், ஆந்திரம், கேரளம், மேற்கு வங்காளம், பஞ்சாப், ஹரியானா, குஜராத், மேகாலயா, சிக்கிம், அருணாசல பிரதேசம் ஆகிய மாநிலங்களில் ஆளுநர் உரையின் மொழியாக்கம் அந்தந்த மாநிலங்களில் உள்ள ஆட்சி மொழிகளில் அவையில் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இவை மாண்புமிகு பேரவைத் தலைவர்களால் அவையில் வாசிக்கப்படுவது இல்லை. 23-1-2003 அன்று ஆளுநர் உரையின் தமிழாக்கம் பேரவையிலேயே உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது மட்டுமின்றி, இவ்வுரை பேரவைத் தலைவரால் அவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பேரவை பதிவேட்டிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே ஆளுநர் உரையின் தமிழாக்கம் பேரவைத் தலைவரால் வாசிக்கப்படாததால் அவையினுடைய் உரிமையோ அல்லது பேரவைத் தலைவரினுடைய உரிமையோ எந்த வகையிலும் மீறப்படவில்லை என்பதை பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரைமுருகன் அவர்கள் தமிழாய்ந்த தமிழர் இருக்கிறபோது இந்த அவையில் வாசிக்கப்படவில்லை; தமிழைப் புறக்கணிக்கிறார்கள் என்பதைப் போன்ற ஒரு கருத்தை அவர் சொன்னார். தமிழ் மட்டுமே ஓரளவுக்குத் தெரிந்த என்னை பேரவைத் தலைவராக, புரட்சித் தலைவி அவர்கள் ஆக்கியிருப்பதில் இருந்தே (மேசையைத் தட்டும்

ஒலி) தமிழுக்கு உரிய முக்கியத்துவத்தை அவர்கள் தருகிறார்கள் என்பது தெரிகிறது. நான் படித்ததாக அவைக் குறிப்பேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது; வாசிக்கப்பட்டதாக பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆளுநர் உரை நடைமுறை குறித்த அந்தக் குறிப்பேட்டிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே இது குறித்து பிரச்சினை எதுவும் இல்லை; உரிமை மீறல் எதுவும் இல்லை; மரபும் மீறப்படவில்லை; விதிமுறையும் மீறப்படவில்லை.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய கருத்துக்கு நான் மதிப்பு அளிக்கக் கடமைப்பட்டவன் என்று சொன்னாலும், தமிழிலே படிப்பது என்பது, இந்தச் சட்டமன்றத்தினுடைய உரிமை; சட்டப் பேரவையினுடைய உரிமை; சட்டப் பேரவை தமிழை ஆட்சி மொழியாகக் கொண்டிருக்கிற காரணத்தால், தமிழில் படிக்காமல் ஆளுநர் உரை முடிந்துவிடுமேயானால், தமிழுக்கு நாம் தர வேண்டிய முழு மதிப்பை தரத் தவறியதாகத்தான் உலகம் கருதும். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டுவந்த ஒரு முறையாக இருந்தாலும், அதைத் தொடர்ந்து காப்பாற்றி வந்திருக்கிறது. இனியாவது அடுத்த ஆண்டிலிருந்து தொடர்ந்து படிக்கப்படும் என்று சொன்னால்தான் இந்த அவையை தாங்கள் மதிப்பதாக நான் கருத முடியும். நான் கருதமுடியும் என்று சொல்வதற்கு, என்னுடைய மனப்பான்மை காரணமாக நான் அப்படித் தெரிவிக்கிறேன். தாங்கள் தயவுசெய்து அடுத்த ஆண்டு முதலாவது, இந்த அவையில் படிக்கப்படும் என்று சொன்னால், மரபு காப்பாற்றப்படுவதாக நான் உணருகிறேன். இந்த ஆண்டு எடுத்த முடிவுதான் அடுத்த ஆண்டும் என்றால், இப்போதே நாங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

### (ஆ) உறுப்பினர் உரிமை பாதிப்பு

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருந்தேன். சட்டப் பேரவை உறுப்பினருடைய உரிமைகள் பாதிக்கப்பட்டது குறித்து ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருந்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் உரையில் அதுபற்றிப் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எல்லாவற்றையும் பேசலாம். (குறுக்கீடுகள்) திரு. சிவபுண்ணியம் இன்றைக்குப் பேசப் போகிறார். எல்லோரும் பேசக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. (குறுக்கீடுகள்) நாட்கள் ரொம்பக் குறைவு.



**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது உறுப்பினர் சிவபுண்ணியம் சம்பந்தப்பட்டது என்றாலும்கூட இது அனைத்து உறுப்பினர்களும் சம்பந்தப்பட்ட பிரச்சினை என்றே நான் கருதுகிறேன். ஒரு சட்டப் பேரவை உறுப்பினருக்கே இதுபோன்ற ஒரு கதி ஏற்படுமேயானால்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. இன்னும் ஒத்தி வைக்கவில்லை; சிவபுண்ணியமே இன்றைக்குப் பேசப் போகிறார். (குறுக்கீடுகள்) பேசுவதற்கான வாய்ப்பு இருக்கிறது; (குறுக்கீடுகள்) பேசுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. அது ஒரு முக்கியமான பிரச்சினை; அதற்கு முதலமைச்சர் பதில் சொல்லப் போகிறார்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** தலைவர்கள் எல்லாம் பேசலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முக்கியமான இந்தப் பிரச்சினைக்கு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லப் போகிறார்கள். சிவபுண்ணியமே பேச இருக்கிறார். சிவபுண்ணியம் பேசும்போது பேசலாம்; அதுபற்றி ஒன்றுமில்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இதைத் தனியாக நீங்கள் எடுத்துக்கொண்டீர்களேயானால், நிச்சயமாக இதற்கு ஒரு பதில் வரும்; அந்தப் பதில் பதிவாகும்; மற்றவர்களுக்கும் தெரியும்; அதற்காகத்தான் இதைத் தனியாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்கிறேன்; வேறு ஒன்றுமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எப்படிப் பேசினாலும் பதில் நிச்சயமாக வரும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இந்தப் பிரச்சினையைக்கூட ஒத்திவைப்புத் தீர்மானமாக ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொன்னால், வேறு எந்தப் பிரச்சினையை ஏற்றுக்கொள்ள முடியும்? நள்ளிரவிலே ஒரு சட்டப் பேரவை உறுப்பினர் இல்லத்திற்குள் நுழைந்து காவல் துறை அச்சுறுத்துகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி. அவர்கள் நான் அனுமதித்த பிறகு பேச வேண்டிய விஷயங்கள் இவை. பேசுவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லிவிட்டேன். இன்றைக்கு எடுத்துக்கொள்ளக்கூடிய வாய்ப்பே இல்லை.

[2003 ஜனவரி 28

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஏன் அதை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதைத்தான் வலியுறுத்துகிறேன். (குறுக்கீடுகள்)

### (அ) ஆளுநர் உரையின் தமிழாக்கம்–அவையில் வாசிக்காதது— தொடர்ச்சி

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையைப் பொறுத்தவரையில் இந்த அவையினுடைய உரிமை என்ற முறையில் தமிழில் படிப்பதை ஒரு மரபாகத் தொடர்ந்து காப்பாற்ற இந்தப் பேரவைத் தலைவர் அவர்கள் முன்வருவார்களா என்ற கேள்வியை நான் எழுப்பினேன். ஆகவே இதைப் பொறுத்து திட்டவட்டமான ஒரு கருத்தை இந்த அவை எடுத்தாக வேண்டும்; ஆகவே தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேராசிரியர் அவர்களுக்கு நான் சொல்வது, அவையிலே நான் படித்ததாகக் கருதி அவைக் குறிப்பேட்டிலே பதிவு செய்யப்பட்டு இருக்கிறது. நான் படித்ததாகக் கருதி பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆளுநர் வருகை பற்றிய நடைமுறையிலும் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. ஆகவே நேரத்தின் நெருக்கடி கருதித்தான் நான் வாசிக்கவில்லையேதவிர வேறு ஒன்றும் இல்லை. (குறுக்கீடு) என்னுடைய தீர்ப்பைத் தந்து விட்டேன், அதற்குப் பிறகு ஒன்றும் இல்லை. பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடு) ஏற்கெனவே இதுகுறித்து தீர்ப்பு சொன்னதற்குப் பிறகு விளக்கம் இல்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஒரு வரி; ஒரே ஒரு வரி சொல்லி விடுகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, அவையில் படித்ததாகக் கருதி அது அவைக் குறிப்பில் ஏற்றப்பட்டு இருக்கிறது என்று சொல்கிறீர்கள். அவையிலேயே நீங்கள் இதைச் சொல்லியிருக்கலாம். இதை அவையிலே படித்ததாகக் கருதி ஆளுநர் உரையின் தமிழாக்கம் முழுவதும் அவைக் குறிப்பில் ஏற்றப்படுகிறது என்று அன்றைய தினமே சொல்லியிருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இனிமேல் அந்த முறை கடைப்பிடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எஸ்.ஆர்.பி. அவர்களுக்கு, இனிமேல் தாங்கள் குறிப்பிட்டதைப்போல நேரம் கருதி ஆளுநர் வாசித்ததற்குப் பிறகு, பேரவைத் தலைவர்





எழுந்து இதனுடைய தமிழாக்கத்தை நான் படித்ததாகக் கருதி அவைக் குறிப்பிலே ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அவையும் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன் என்கிற முறை இனிமேல் கடைப்பிடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) அதோடு விட்டு விடுங்கள்.

## 3. அறிவிப்பு

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9(1)-ன்கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் ஐந்தாவது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக நியமிக்கிறேன்:

(1) திரு. கே. பாண்டுரங்கன்

(2) டாக்டர் தே. குமாரதாஸ்

(3) திரு. லா. சந்தானம்

(4) திருமதி சி.எம். சூரியகலா

(5) திரு. சி. சிவசாமி

(6) திரு. வி. ஜெயராமன்

## 4. அறிக்கை அளித்தல்

### அரசு உறுதிமொழிக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கையை அளித்தல். அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2002-2003 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் ஏழாவது அறிக்கையை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

[2003 ஜனவரி 28

(எதிர்க் கட்சித் தலைவர் மற்றும் ஒருசில தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர். மற்ற தி.மு.க. உறுப்பினர்கள் அவையில் கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

[இந்திய தேசிய காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்டு) மற்றும் இந்திய கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.]

## 5. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் முன்மொழிதல். டாக்டர் சி. விஜயபாஸ்கர்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுக்கு கீழ்க்காணும் நன்றியுரை அளிக்கப்பெற வேண்டும்:

"2003 ஆம் ஆண்டு...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேராசிரியர் அவர்கள் வெளிநடப்புச் செய்துவிட்டு போய் விட்டார், தாங்களும் அதைப் பின்தொடர்ந்து போங்கள். ஆளுநர் அவர்கள் உரையைப் படிக்கிறபோது நீங்கள் வெளிநடப்புச் செய்துவிட்டு போய்விட்டீர்கள். நான் படித்தாலும் நீங்கள் வரப்போவது இல்லை. பின்னர் எதற்காக அதைப் போட்டு கிண்டிக் கிளறுகிறீர்கள்? போங்கள். டாக்டர் சி. விஜயபாஸ்கர்.

(உள்ளிருந்த எஞ்சிய தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுக்கு கீழ்க்காணும் நன்றியுரை அளிக்கப்பெற வேண்டும்:

"2003 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 23 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு@ தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்" என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வழிமொழிதல். திருமதி எஸ். ராஜம்மாள்.

@பக்கங்கள் 129 முதல் 169 வரை இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.



2003 ஜனவரி 28]

**திரு. ஜி.கே. மணி:** நான் பேசுவதற்கு அனுமதி கேட்டும் தாங்கள் மறுக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வழிமொழிதல். திருமதி ராஜம்மாள்.

**திருமதி எஸ். ராஜம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம் தொடங்குதல். டாக்டர் சி. விஜயபாஸ்கர்.

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் கோஷமிட்டுக் கொண்டே வெளிநடப்புச் செய்தனர்.)

**திரு. லா. சந்தானம்:** பேரவைத் தலைவர் அவர்களே...

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலாய் வளர்கின்ற தமிழகத்தினுடைய ஆணிவேராய், உலக மகளிரின் உதாரணச் சின்னமாய், கருணை எனும் சொல்லின் உண்மை உருவமாய், தென்னகத்துப் பேரொளியாய்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விஜயபாஸ்கர், கொஞ்சம் இருங்கள்.

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (அ) ஆளுநர் உரையின் தமிழாக்கம்—அவையில் வாசிக்காதது—தொடர்ச்சி

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 23 ஆம் தேதி அன்று மேதகு ஆளுநர் அவர்கள் ஆளுநர் உரையை வாசிக்கத் தொடங்குவதற்கு முன்பாகவே ஏதோ சாக்கு போக்கு சொல்லி வெளிநடப்புச் செய்த அத்தனை எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களும், அன்றையதினமே தமிழில் மேதகு ஆளுநரின் உரையை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாசிக்கவில்லை என்று காரணம் காட்டி, இன்றைக்கு மீண்டும் வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள். ஆகவே இந்த அரசு எதைச் செய்தாலும், செய்யாவிட்டாலும் இவர்களுடைய ஜனநாயகக் கடமையை ஆற்றுவதற்கு இவர்கள் தயாராக இல்லை. ஏதோ ஒரு காரணம் காட்டி வெளிநடப்புச் செய்ய வேண்டும் என்ற

திட்டத்தினுடனேயே இங்கே வந்து இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே இவர்களுடைய வெளிநடப்பைக் கண்டு மக்கள் ஏமாற மாட்டார்கள் என்பதை மட்டும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 11—15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம், சொல்லுங்கள்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழிலே, சட்டமன்றத்திலே....

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையினுடைய அமைதியைக் குலைக்கின்ற வண்ணம் வெளியில் அவர்கள் அவைக்கு உட்பட்ட பகுதியில் சத்தம் போடுவதைத் தடுக்க வேண்டும். காவலர்களை விட்டு அதைத் தடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காவலர்கள் அதைக் கவனிக்க வேண்டுகிறேன்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றத்திலே இனி வருகின்ற காலத்திலாவது இது, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டு வந்த ஒரு திட்டம் என்கின்ற முறையில் தமிழிலும் வாசிக்கப்படும் என்பதைத் தயவுகூர்ந்து முதலமைச்சர் அவர்களும், பேரவைத் தலைவர் அவர்களும் அறிவிக்க வேண்டும் என்று அன்போடு, பணிவோடு உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் பற்றிச் சிந்திப்போம் என்றுதான் இந்த நேரத்தில் என்னால் கூற முடிகிறது. இந்திய அரசியல் சட்டத்தில் மற்றும் தமிழக சட்டமன்றப் பேரவையின் விதிமுறைகளில், ஆளுநர் உரை வாசிக்கப்பட வேண்டும் என்றுதான் இருக்கிறதே தவிர அதே உரை இரண்டு முறை வாசிக்கப்பட வேண்டும் என்று எந்தச் சட்டத்திலும் இல்லை. ஏதோ தமிழில் ஆளுநர் உரையை வாசிக்காததால் இந்த அரசுக்கு தமிழ் மொழிமீது பற்று இல்லை என்று கூறுவது சரியல்ல. கர்நாடக சட்டமன்றத்தில் ஆளுநர் ஆங்கிலத்தில்தான் அவரது





உரையை வாசிக்கிறார். கன்னடத்தில் வாசிப்பது இல்லை. அதற்காக கர்நாடக மாநில அரசுக்கு கன்னட மொழிமீது பற்று இல்லை என்று கூற முடியுமா? அதேபோல் ஆந்திர பிரதேஷ் சட்டமன்றத்தில் ஆளுநர் அவர்கள், ஆங்கிலத்தில்தான் உரையை வாசிக்கிறார். தெலுங்கில் வாசிப்பது இல்லை. அதற்காக ஆந்திர மாநில அரசுக்கு தாய்மொழி தெலுங்கின்மீது பற்று இல்லை என்று கூற முடியுமா? இப்போது வெளிநடப்புச் செய்தார்களே, கம்யூனிஸ்ட் கட்சியினர் அவர்களுடைய கூட்டணி ஆட்சி செய்யும் மேற்கு வங்காளத்தில்கூட அங்குள்ள ஆளுநர் அவர்கள் ஆங்கிலத்தில்தான் உரையை வாசிக்கிறாரே தவிர வங்காள மொழியில் வாசிப்பது இல்லை. அதற்காக அவர்களுக்கு மொழிப் பற்று இல்லை, தாய் மொழிப் பற்று இல்லை என்று கூற முடியுமா? அரசுக்கு எத்தனையோ அலுவல்கள் இருக்கின்றன. அமைச்சர்களுக்கும், முதலமைச்சருக்கும் எத்தனையோ அலுவல்கள் இருக்கின்றன. ஆகவே ஒரே உரையை இரண்டு முறை வாசிக்க வேண்டுமென்று கூறுவது நியாயம் இல்லை. அது தேவையும் இல்லை என்று இந்த அரசு கருதுகிறது. ஆகவே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், இனி வருங்காலங்களில் மேதகு ஆளுநர் அவர்கள் உரையை வாசித்த பின்னர் அதனுடைய தமிழாக்கம் அவைக் குறிப்பேட்டில் பதிவு செய்யப்படும் என்று அறிவித்தாலே போதுமானது என்று இந்த அரசு கருதுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் சி. விஜயபாஸ்கர்.

**டாக்டர் க. பொன்முடி:** ஒரே ஒரு கிளாரிபிகேஷன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) வெளிநடப்புச் செய்துவிட்டு மறுபடியும் வந்து பேசுவதற்கு நான் அனுமதிக்க முடியாது. விஜயபாஸ்கர் பேசுங்கள். (குறுக்கீடு) அனுமதிக்க முடியாது உட்காருங்கள். அனுமதித்தால்தானே பேசப்போகிறீர்கள்? உட்காருங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆண்டும், மேதகு ஆளுநர் உரையை வாசிப்பதற்கு முன்பாக ஏதோ காரணத்தைச் சொல்லி வெளிநடப்புச் செய்வதை எதிர்க் கட்சியினர் ஒரு மரபாகவே கொண்டு உள்ளனர். இனி வரும் காலங்களில் அடுத்த ஆண்டு முதல் வெளிநடப்புச் செய்வதில்லை என்று அவர்கள் உத்தரவாதம் கொடுத்தால், இந்த அவையில் அமர்ந்து ஆளுநர் உரையைக் கேட்போம் என்று உறுதி அளித்தால் தமிழில் இங்கே வாசிக்கப்படும் என்ற உறுதியை நாங்களும் அளிப்போம். (மேசையைத் தட்டும் ஒலி)

[2003 ஜனவரி 28

## 5. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம். டாக்டர் சி. விஜயபாஸ்கர்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலாய் வளர்ந்த தமிழகத்தின் ஆணி வேராய் உலக மகளிரின் உதாரணச் சின்னமாய், கருணை எனும் சொல்லின் உண்மை உருவமாய், தென்னகத்து பேரொளியாய் நாளைய இந்தியாவின் நம்பிக்கையாய் விளங்கிக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தினை முன்மொழிகின்ற வாய்ப்பை அளித்த, நான் வணங்கும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் கோடானு கோடி நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு என் நன்றி உரையைத் தொடங்குகின்றேன்.

*முற்பகல் 11—20*

ஆளுநர் உரை என்பது வெறும் வார்த்தைக் குவியல்களாக, வறட்டுச் சித்தாந்தத்தில் வற்றிப்போன விளக்கங்களாக இல்லாமல், இன்னும் சொல்லப்போனால், காலம்போன கடைசியிலே சில பேர் எழுதித் தள்ளுகின்ற பயனற்ற கடிதத்தைப் போல் இல்லாமல், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த அரசு மக்களின் அடிப்படைத் தேவைகளை அணுகுவதிலும், ஆராய்ந்து அதைத் தீர்ப்பதிலேயும், போர்க்கால அடிப்படையிலே முயற்சி எடுக்கின்றது என்பதைத் தெரிவிக்கின்ற, நாட்டு மக்களுக்கு நல்ல பல புதிய திட்டங்களை அறிவிக்கின்ற, மக்களின் நலனில் நம் அரசின் தெளிவான பார்வையை வெளிப்படுத்துகின்ற, கொள்கைத் திரட்டாக, கருத்துக் குவியலாக, வரலாற்றுப் பெட்டகமாக, ஆளுநர் உரை அமைந்திருப்பதை நாங்கள் உளமார வரவேற்கக் கடமைப்பட்டுள்ளோம்.

கடந்த ஆட்சியாளர்களுடைய கையாடலிலே எஞ்சியிருப்பது என்ன என்று இங்கேயுள்ள மக்களுக்கும் தெரியும்; எங்களுக்கும் தெரியும். சட்டியையும், அகப்பையையும் சாட்சியாக வைத்துவிட்டு, உள்ளே இருப்பதை அள்ளிக் கொண்டுபோன வள்ளல்கள்தானே நீங்கள்! அன்று நீங்கள் விதைத்த சோகத்தை, அன்று நீங்கள் விதைத்த கஷ்டத்தை, அன்று நீங்கள் விதைத்துவிட்டுச் சென்ற



2003 ஜனவரி 28] [டாக்டர் சி. விஜயபாஸ்கர்]

துயரத்தை, இன்றைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு அறுவடை செய்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே பணிவோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையிலே நம்முடைய அரசு தன்னுடைய கடுமையான நடவடிக்கைகளால் பிரிவினை சக்திகளின் தலைதூக்கலை வேரோடு பிடுங்கி எறிகிறது. முளையிலேயே முற்றுப்புள்ளி வைத்தது என்பதற்கு ஒரு முத்தாய்ப்புத்தான் தருமபுரி மாவட்டத்திலே நக்சலைட்டுகளுடைய நடமாட்டத்தைக் கண்டறிந்து, அதனைச் செயலிழக்க வைத்த செயலாகும்.

'நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.'

என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறாரே, அந்த வள்ளுவருடைய வாக்கிற்கிணங்க, குற்றம் புரிந்தவர்களைத் தண்டிப்பதை மட்டுமே தலையாய நோக்கமாய்க் கொள்ளாமல், இதுபோன்ற சித்தாந்தவாதிகள் தலைதூக்குவதற்கு அடிப்படைக் காரணமான, ஆதாரமான, சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைச் சீரமைக்கின்ற வகையிலே, அவர்களுடைய வறுமையைப் போக்கிடும் வகையிலே, வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தரும் வகையிலே தருமபுரி மாவட்டத்திற்கு மட்டும் இப்பொழுது ஒட்டுமொத்த வளர்ச்சித் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது என்பது நம்முடைய தமிழக அரசினுடைய தொலைநோக்குப் பார்வையைப் பறைசாற்றியிருக்கிறது என்பதை நான் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

Unity in diversity எனப் பெருமை பொங்கச் சொல்லி மகிழ்ந்த இந்தியாவிலே, பயங்கரவாதம், தீவிரவாதம் ஆகியவற்றினுடைய வேர் ஊன்றப்படாமல் தடுப்பது இன்றைய நிலையிலே மிக மிக அவசியமாகும். பாரதி பாடியிருக்கிறாரே,

'முப்பது கோடி முகமுடை யாளுயிர்
மொய்ம்புற வொன்றுடை யாள்-இவள்
செப்பு மொழிபதி னெட்டுடையாள், எனிற்
சிந்தனை யொன்றுடை யாள்.'

என்று. அந்த வார்த்தைகளுக்கு வலுசேர்க்கும் வகையில் தீவிரவாதம், பயங்கரவாதத்தைத் தடுக்க மத்திய அரசு கொண்டு வந்த POTA என்று சொல்லக்கூடிய Prevention of Terrorism Act, சட்டத்தை அரசியல் மனமாச்சரியங்களைக் கடந்து மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பாராளுமன்றத்திலே வரவேற்றார்கள், நிறைவேற்றித் தந்துள்ளார்கள். Constitution of India என்று சொல்லக்கூடிய இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முதல் பக்கமான Preamble-ல் சொல்லியிருக்கிறார்கள், "We, the people of India, having solemnly resolved to constitute India into a Sovereign, Socialist, Secular, Democratic Republic," என்று. அந்த இறையாண்மையைக் காத்த, இந்திய துணைக் கண்டத்தின் ஆச்சரியம் எங்கள் அம்மா அவர்கள். அந்த இந்திய இறையாண்மையைக் காத்த இந்திய துணைக் கண்டத்தினுடைய அதிசயம் எங்கள் அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே நான் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய தேசத்தினுடைய ஒற்றுமைக்கு ஊறு விளைவிப்பவர்கள் யாராக இருந்தாலும், இந்தத் தேசத்தினுடைய பாதுகாப்பிற்குக் குந்தகம் விளைவிப்பவர்கள் யாராக இருந்தாலும், இந்தத் தேசத்தினுடைய இறையாண்மைக்குச் சவால் விடுபவர்கள் எவ்வளவு சக்தி படைத்தவர்களாக இருந்தாலும், நடவடிக்கை எடுப்பதிலே, அவர்களை ஒடுக்குவதிலே, அடக்குவதிலே இந்த அரசு எந்த நிலையிலும் பாரபட்சம் காட்டியதில்லை என்பதைத் தங்கள் வாயிலாக இந்த அவைக்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடை நீட்டிப்பு; Ban on LTTE, தமிழ் தேசியப் படை, T.N.R.T., தமிழ்நாடு விடுதலைப் படை, T.N.L.A. ஆகிய அமைப்புகளும் இன்றைக்குத் தடை செய்யப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரையிலே, நான்காவது பத்தியிலே மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகின்றார். 2002 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலே சட்டம் ஒழுங்கு மிகத் திறமையாகப் பராமரிக்கப்பட்டு வந்துள்ளது என்று குறிப்பிட்டிருக்கின்றார். ஆளுநரின் இந்த மகிழ்ச்சிக்குக் காரணம்-ஏனென்றால் கடந்த ஆட்சியைப்போல பெருகிப்போன மதக் கலவரம், ஜாதிக் கலவரம், இனப் பிரச்சினைகள், கொலைகள், கொள்ளைகள், குண்டு வெடிப்புகள், நதிக்கரையிலே ஏற்பட்ட மரணங்கள் இவைபோன்ற நிகழ்ச்சிகள் எல்லாம் இன்றைக்கு அடியோடு ஒடுக்கப்பட்டு, நசுக்கப்பட்டு-தமிழகம் இன்றைக்கு மீண்டும் ஓர் அமைதிப் பூங்காவாக புரட்சித் தலைவி அம்மாவினுடைய தலைமையின் கீழே உருவாகி வருகிறது. சமூக, சமய விழாக்கள் எல்லாம் இன்றைக்கு அமைதியான முறையிலே நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. சிவகங்கை மாவட்டத்திலே கண்டதேவி தேர் மட்டுமல்ல, தமிழகத்திலே இன்றைக்கு எல்லாத் தேர்களுமே அமைதியான முறையிலே ஓடிக் கொண்டிருக்கின்றன என்றால், அதுதான் எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வெற்றிக்கு அத்தாட்சியாகும் என்பதை இந்த அவையிலே நான் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.





மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த சில கடுமையான நடவடிக்கைகளை எல்லாம் ஆளுநர் அவர்கள் பெருமிதத்தோடு குறிப்பிட்டுள்ளார்கள் என்பதை நான் கோடிட்டுக் காட்ட விழைகின்றேன்.

முற்பகல் 11-25

கந்து வட்டி சீமான்களின் கோரப் பிடியில், ஏழை மற்றும் நடுத்தர வர்க்கத்தின் குரல்வளை நெரிக்கப்பட்டு வந்தது என்பது உங்களுக்குத் தெரியும். தகடு வாங்க, துட்டு வாங்கி, தங்கத்தை விற்று, வட்டி அடைத்தேன் என்றும், வசூலிக்கும் வட்டிக்கு தன்னையே அடகு வைத்து, ஒரு பக்கம் குண்டர்களின் மிரட்டல்கள், மறுபக்கம் வறுமையின் அச்சுறுத்தல், இவை இரண்டுக்கும் நடுவிலே பயந்து, கண்ணீரோடு மக்கள் புலம்பிய வேளையிலே, வட்டி அரக்கனை ஓர் இரும்புக் கரம் உச்சி பிடித்து உலுக்கியது என்றால் அது புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இரும்புக் கரம். கந்து வட்டியெனும் அரக்கன் இப்போது களையெடுக்கப்பட்டு வருவதால், பொருளியல் சார்ந்த குற்றங்கள் தடுக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு டாக்டர் அம்மா அவர்களின் இதுபோன்ற நடவடிக்கைகளால் சமூகப் பதட்டங்கள் தீர்க்கப்பட்டு வருகின்றன என்று மேதகு ஆளுநர் அவர்கள் பெருமையோடு குறிப்பிட்டுள்ளார்கள் என்பதை நான் நன்றியோடு கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று பரிசுச் சீட்டிலே சீரழிந்து போன, பாமர மக்களுடைய வாழ்க்கையைக் காக்க லாட்டரி ஒழிப்புச் சட்டத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்துள்ளார்கள். இலட்சங்களை நம்பி இலட்சியங்களைத் தொலைத்து, கோடிகளை நம்பி தெருக்கோடியில் தவித்த மக்களுக்கு, அரசுக்கு வருமான இழப்பு என்று தெரிந்திருந்தும் கூட, அடித்தட்டு மக்களுடைய அடிவயிற்றிலே கை வைக்க விடமாட்டேன் என்று சூளுரைத்து, இந்த குருட்டுப் பூனைக்கு, மிரட்டுப் பூனைக்கு மணி கட்டியதன் மூலம், தமிழகத்துத் தாய்மார்களின் கண்ணீரைத் துடைத்து அவர்களின் குடும்பத்தில், வாழ்க்கையில் ஒளியேற்றி வைத்தவர் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் தமிழக முதல்வர் டாக்டர் அம்மா அவர்கள், இன்றைக்கு வாழ்க்கையின் வரலாறாக, சரித்திரமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். காவல் துறையினரைக் கருணையுள்ளத்தோடு, தாயுள்ளத்தோடு, மனித நேயத்தோடு ஐந்து நாட்கள் கோட்டைக்கு அழைத்து குறைகளைக் களைந்து இன்றைக்கு சாதனை படைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆண்டவர்கள் வரிசையை இன்றைக்கு, நான் பார்க்கிறேன். திரு. சுப்பராயலு ரெட்டியார், திரு. பனகல் அரசர், டாக்டர் சுப்பராயன், திரு. பொப்பிலி ராஜா என்று தமிழகத்தை ஆண்ட முதலமைச்சர்கள் வரிசையை அன்றைக்கு ஆளுநர் அவர்கள் அழகாகச் சொல்லியிருக்கிறார்கள். "இதுவரை எந்த முதலமைச்சரும் எடுத்திராத மன உறுதியோடு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் பாராட்ட விழைகிறேன்" என்று மேதகு ஆளுநர் அவர்கள் மிக அழகாக பெருமிதத்தோடு சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அழகாகச் சொல்வார்கள். "None, but the Brave deserves the best" என்று சொல்கிறார், Dryden என்னும் அறிஞர். அந்த வார்த்தையை இன்றைக்கு நிஜமாக்கிக் கொண்டிருக்கிறார்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். 272 கோடி ரூபாய்க்கு காவல் துறையை நவீனமயமாக்கும் திட்டத்தைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அடுப்பூதிய பெண்களுடைய கைகளில் ஏ.கே.47 என்ற ஆயுதத்தைத் தந்து மகளிர் அதிரடிப்படை கண்ட அதிசயம் இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியிலே நிகழ்ந்துகொண்டிருக்கிறது. மகளிர் காவல் நிலையங்களை





வலுப்படுத்துதல், புதிய வாகனங்கள், புதிய தளவாடங்கள் என்று விரிகிறது நம் புரட்சித் தலைவி அவர்களின் தொலைநோக்குப் பார்வை. பாவம் சில குருடர்களின் கண்களுக்குத்தான் இந்தச் சாதனைகள் தெரியவில்லை. சில செவிடர்களுக்குத்தான் இந்தச் சாதனைகள் காதில் விழவில்லை. ஏனென்றால், தூங்குபவர்களை எழுப்பலாம், தூங்குபவர்களைப் போல் நடித்துக் கொண்டிருப்பவர்களை எழுப்ப முடியாது என்பது இந்த நாட்டிற்கு நன்றாகத் தெரியும் என்பதை இந்த நேரத்திலே நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றதிலிருந்து இன்றைக்கு எந்தச் சூழ்நிலையிலே, எந்த கஷ்டமான சூழ்நிலையிலே எத்தகைய நிதி நெருக்கடியான சூழ்நிலையிலே இந்த அரசை கஷ்டப்பட்டு நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பது நாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரியும். வெள்ளை அறிக்கையின் மூலம் அன்றையதினம் வெளிப்படுத்தினார்கள். தமிழ்நாடு தன் வரலாற்றிலேயே மிகக் கடுமையான வறட்சியைச் சந்தித்துக்கொண்டு வருகிறது.

தென்மேற்குப் பருவ மழை பொய்த்துவிட்டது. வடகிழக்குப் பருவ மழையும் நம்மை ஏமாற்றிவிட்டது. அண்டை மாநிலமோ இங்கே அநீதியை இழைத்துக் கொண்டிருக்கிறது. இயற்கையும் தன் பங்கிற்கு கையை விரித்துக்கொண்டிருக்கிறது. கடந்த ஆட்சியால் கருவூலம் வறண்டு, எதிர்காலம் இருண்டு போய்க் கிடக்கிற இந்த நேரத்திலும்கூட, ஒட்டிய வயிறும், ஒடிந்த தேகமுமாய், ஏங்கிக் கிடக்கும் நம் விவசாயப் பெருங்குடி மக்களின் துயரைத் துடைக்க புரட்சித் தலைவி அம்மா அவர்கள் போர்க்கால அடிப்படையில் எடுத்த நடவடிக்கைகள்தான் எத்தனை எத்தனை என்பதை நான் இந்த நேரத்தில் கணக்கிட்டுப் பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

ஜூன் 24, 2002 அன்று தஞ்சை பூமிக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நேரிலே சென்றார்கள். ஆய்வு செய்தார்கள், ஆலோசனை நடத்தினார்கள், அன்றைக்கே உத்தரவிட்டார்க்ள். 10 இலட்சம் விவசாயத் தொழிலாளர்கள் துயர் துடைக்க ரூ.164.18 கோடி நிவாரணப் பணிகளுக்கு வழங்க உத்தரவிட்டவர்தான் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அக்டோபர் 22, 2002 அன்று ஏறத்தாழ 10 இலட்சம் நிலமற்ற வேளாண் தொழிலாளர்களுக்கு ரூ.21 கோடி செலவில் தீபாவளிப்

பரிசுப் பொருட்கள் வழங்கி, தமிழகத்தினுடைய தாய்மார்களுடைய வயிற்றில் பாலை வார்த்தவர்தான் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே நன்றியோடு நினைவுகூறக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன். விவசாயிகளுக்கு இழப்பீடாக ஏக்கர் ஒன்றுக்கு ரூ.5000 வீதம் ஏறத்தாழ ரூ.400 கோடி நிவாரண உதவியாக அளிக்க அன்றைக்கே மத்திய அரசை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கோரியிருக்கிறார்கள்.

விவசாயக் குடும்பங்களுக்கு 2 இலட்சம் டன் அரிசி வேண்டுமென்று மத்திய அரசுக்கு இரண்டு மாதங்களுக்கு முன்பே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். நதிகளை இணைப்பதற்கான பணிக் குழுவை மத்திய அரசு அமைத்துள்ளதை நம்முடைய தமிழக அரசு வரவேற்றுள்ளது. நான் ஒன்றே ஒன்றை மட்டும் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

முற்பகல் 11-30

இன்றல்ல, நேற்றல்ல. 1984ஆம் ஆண்டிலேயே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாநிலங்களவை உறுப்பினராக இருந்தபோதே கங்கை-காவிரி இணைப்புத் திட்டம் குறித்து விரிவாகப் பேசியிருக்கிறார் என்று கவர்னர் உரையிலே கோடிட்டுக் காட்டியிருப்பது எங்களுக்கெல்லாம் பெருமையாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையை நிகழ்த்துவதற்கு முன்பே இருக்கையைக் காலி செய்தனர் சிலர் என்று இங்கே நாம் பேசிக்கொண்டிருந்தோம். காரணம் கேட்டால், வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டுமென்று கோரிக்கை வைக்கிறார்களாம். எதிர்த்து அரசியல் செய்யவேண்டும் என்ற எண்ணம் மட்டுமே அவர்களுக்கு. ஆளுநர் உரையிலே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சென்னையைத் தவிர எஞ்சிய 28 மாவட்டங்களையும் வறட்சி மாவட்டங்களாக அறிவிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது என்று சொல்லப்பட்டிருக்கிறது. தி.மு.க. தன்னுடைய காதுகளை செவிடாக்கிக்கொண்டு சட்டப் பேரவையினுடைய விதி 17-ஐ மறந்து, மறக்கத் தெரிந்து ஆளுநர் உரையை எதிர்த்து வெளியேறியது, அரசியல் கோமாளித்தனம் என்று இந்த நோத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆளுநர் உரையை அவமதித்துவிட்டு நீங்கள் மலிவான அரசியல் தேடுகிறீர்கள்; நீங்கள் மலிவான விளம்பரத்தைத் தேடிக்கொண்டிருக்கிறீர்கள். அழகாக தமிழில் ஒரு





பழமொழி சொல்வார்கள். 'அறுக்கத் தெரியாதவன் இடுப்பைச் சுற்றி 64 அரிவாள்களைத் தொங்கவிட்டுக்கொள்வானாம்.' அதேபோல இன்றைக்கு அவையிலே நின்று பேசுகின்ற தைரியம் இல்லாதவர்கள், அவையிலிருந்து விளக்கங்களைக் கொடுக்க முடியாதவர்கள், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முன்னாலே நின்று கருத்துகளை எடுத்துவைக்கத் தைரியம் இல்லாதவர்கள் எல்லாம் இன்றைக்கு வெளியிலே சென்று விளம்பரம் தேடிக்கொள்கிறார்கள். தொலைக்காட்சியிலே அறிக்கை விடுகிறார்கள். சட்டமன்றத்திற்கு வரத் தகுதி இல்லாதவர்கள் எல்லாம் இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களை, வெளியிலே நின்று எதிராக விமர்சனம் செய்பவர்களை எல்லாம் பார்க்கும்போது எங்களுக்கு வேடிக்கையாக இருக்கிறது; நடித்துக் கொண்டிருக்கிறீர்கள். நாடகம் ஆடிக்கொண்டிருக்கிறீர்கள். இன்றைக்கு சொல்லிக்கொண்டிருக்கிறீர்களே, தமிழ், தமிழ் என்று. நான் இந்த அவையிலே பகிரங்கமாகக் கேட்கக் கடமைப்பட்டிக்கிறேன். தமிழுக்காக எத்தனை உலகத் தமிழ் மாநாட்டை நீங்கள் நடத்தியிருக்கிறீர்கள்? மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் உலகத்தமிழ் மாநாடு கண்டு தமிழை வளர்த்தார். இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தன்னுடைய கடந்த கால ஆட்சியிலே தஞ்சையிலே மிகப் பெரிய உலகத் தமிழ் மாநாடு கண்டார். நீங்கள் தமிழினத் தலைவர் என்று தன்னைப் பறை சாற்றிக் கொண்டிருக்கிறீர்களே, தமிழுக்காக உயிரைக் கொடுப்போம் என்று பறை சாற்றுகிறீர்களே, அவை நடவடிக்கைகளுக்குப் பயந்து வெளியிலே விளம்பரத்தைத் தேடக்கூடிய நீங்கள் காவிரிப் பிரச்சினையைவிட கண்ணகி சிலைப் பிரச்சினைக்குத்தான் முக்கியத்துவம் கொடுத்துக்கொண்டிருக்கிறீர்கள் என்பது வேடிக்கையான ஒன்று, வெட்கமான ஒன்று என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அத்தனை பிரச்சினைகளிலும் கவனமாக நடவடிக்கைகளை மேற்கொண்டு, இன்றைக்கு ஒவ்வொரு வெற்றியாகப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்றால் வரலாறு பேசிக் கொண்டிருக்கிறது. இன்றைக்குத் தஞ்சை விவசாயிகளைக் காரணம் காட்டி, வறட்சியைக் காரணம் காட்டி, பட்டினிச் சாவு என்று உண்மைக்கு மாறான தகவல்களை எல்லாம் நீங்கள் சொல்லிக்கொண்டிருக்கிறீர்களே, வேதனையாக இருந்துகொண்டிருக்கிறது. இன்றைக்கு தஞ்சையில் நிலவக்கூடிய இந்த வறட்சி நிலைக்கு பகிரங்கக் காரணமே திராவிட முன்னேற்றக்

கழகத்தைச் சார்ந்த நீங்கள்தான் என்பதை ஆணித்தரமாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏனென்றால், 4-8-1971-லே போட்ட வழக்கை 7-7-1972-லே முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் வாபஸ் வாங்கிய பாவம்தான், பழிதான் இன்றைக்கு தஞ்சை விவசாயிகளை பரிதவிக்க வைத்திருக்கிறது என்பதை நான் அழுத்தந்திருத்தமாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆனால் அன்றைக்கு வழக்கை வாபஸ் வாங்கி நீதிமன்றத்தின் மூலம் துரோகம் இழைக்கப்பட்ட நேரத்திலே நீதிமன்றத்தின் மூலமாக கஷ்டம் இழைக்கப்பட்ட அந்தக் கொடுமையெல்லாம், இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதே உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று வெற்றியாக ஈட்டித் தந்திருக்கிறார்கள் என்றால் இதுதான் வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சி. அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கருணாநிதி இந்தத் தமிழகத்திற்கு இழைத்த துரோகத்திற்கு 30 ஆண்டுகளுக்குப் பின்னாலே அதே உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு வெற்றியைத் தேடித் தந்திருக்கிறார்கள். தஞ்சை விவசாயிகளுக்கு நன்மையைச் செய்துகொண்டிருக்கிறார்கள். தமிழைப் பற்றிப் பேசுவதற்கோ, தஞ்சையைப் பற்றி பேசுவதற்கோ உங்களுக்குத் தகுதியில்லை என்பதை ஆணித்தாமாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையிலே இன்று...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, நீங்கள் அப்புறம் பேசுங்கள்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** அவையிலே நின்று பேச முடியாதவர்கள் அறிக்கை விடுகிறார்கள் என்று சொன்னேன். என்னென்ன அறிக்கைகள் எல்லாம் விடுகிறார்கள் தெரியுமா? புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அத்துணை திட்டங்களையும், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அழகான அத்தனைத் திட்டங்களையும், 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று பாடினாரே வள்ளலார், அதுபோல வாடுகின்ற மனிதனைக் கண்டு, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திட்டம் போட்டால் திகைக்கிறார்கள், பதறுகிறார்கள், நாடகம் ஆடுகிறார்கள், குதிக்கிறார்கள், நயவஞ்சகத்தோடு குள்ளநரித்தனத்தோடு குறை சொல்கிறார்கள். இவர்களுக்கு வெளிநடப்பு என்பது வாடிக்கையாக ஆகிவிட்ட ஒன்று. ஆனால் மக்கள் இதை வேடிக்கை பார்க்க





மாட்டார்கள் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அழகாகச் சொன்னார்கள். மக்கள் உங்களுக்குப் பாடம் புகட்டுவார்கள். மக்கள் உங்களுக்கு நன்மையைச் சொல்லிக் கொடுப்பார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு மக்களுடைய நன்மையை மட்டுமே கருத்திலே கொண்டு நடைபெற்றுக்கொண்டிருக்கிற காரணத்தினாலேதான் இதுபோன்ற திட்டத்தைப் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாகத் தந்து கொண்டிருக்கிறார்கள். வறட்சியினுடைய முக்கிய திட்டமாக இன்றைக்கு மதிய உணவு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

*முற்பகல் 11-35*

'தனியொருவனுக்குணவிலையெனில், ஜகத்தினை யழித்திடுவோம்' சொன்னது பாரதி. தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை எனில் அவனுக்கு ஒரு வேளை உணவை அளித்தாவது, மதிய உணவை அளித்தாவது காப்போம் என்று செய்திருக்கிறார் இப்போது புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இந்த இருகூற்றிலும் என்ன வேறுபாடு இருந்து கொண்டிருக்கிறது. சிலர் இதை வேண்டாம் என்கிறார்கள். சிலர் இதை வீண் என்கிறார்கள். சிலர் இதை பயனற்ற திட்டம் என்று சொல்கிறார்கள். சிலர் வியாக்யானம் சொல்கிறார்கள். மீனைக் கொடுக்காதீர்கள், மீனைப் பிடிப்பதற்குத் தூண்டிலைக் கொடுங்கள் என்று சிலர் வியாக்யானம் சொல்கிறார்கள். சொன்னவர்களே, சிந்தியுங்கள். அந்தத் தூண்டிலைத் தூக்கவாவது அந்த ஏழைப் பங்காளனுக்குத் துடிப்பு இருக்க வேண்டாமா? மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்த இந்த மதிய உணவுத் திட்டத்தைக் குறை சொல்ல அவர்களுக்குத் தகுதி இல்லை என்பதை நான் இந்த நேரத்திலே அன்போடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒருவேளை உணவு என்ற உச்சபட்சத்திட்டம், ஏழையினுடைய வயிற்றுக் கதவை இரக்கத்தோடு தட்டிக்கொண்டிருக்கிறது என்பதை நான் பணிவோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பசித்தவருக்கு மாத்திரமே இன்னொருவரின் பசி தெரியும். நன்றாக வயிறு புடைத்தவருக்கு, நன்றாக வயிறு புடைக்க, முட்ட முட்ட சாப்பிடுகிறவர்களுக்கு, ஏ.சி. அறையிலே உட்கார்ந்து கவிதை எழுதுபவர்களுக்கு, கட்டுரை எழுதுபவர்களுக்கு, உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதுபவர்களுக்கு எல்லாம் இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) கொண்டு வந்த திட்டத்தை, ஏழையினுடைய வயிற்றுப் பசியைப்

போக்க எடுத்த நடவடிக்கையை குறை கூறுவதற்கு தகுதி இல்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உங்களுக்கு வாய்கிழிய பேசத்தான் தெரியும். உங்களுக்கு வாய்கிழிய குறை கூறத்தான் தெரியும். புரட்சித் தலைவி அம்மா அவர்களைப்போல, தொலை நோக்குப் பார்வையோடு திட்டங்களைத் தீட்ட நீங்கள் ஒருபோதும் கற்றுக்கொண்டதில்லை என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பாரதி சொல்லியிருக்கிறாரே,

"வயிற்றுக்குச் சோறிட வேண்டும்
இங்கு வாழும் மனிதர்க்கெல்லாம்
பயிற்று பல கல்வி தந்த
பாரை உயர்த்திட வேண்டும்" என்று.

இன்றைக்கு ஏழைகளுக்கு மதிய உணவு, ஆலயங்களில் அன்னதானம், அனைவருக்கும் கல்வி என தமிழகத்தை இன்று புரட்சித் தலைவி அவர்கள், புரட்சிக் கவிஞன் பாரதி சொன்னதைப் போல தமிழகத்தை நம்பர் 1 மாநிலமாக உயர்த்திடுகின்ற பாதையிலே பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மிளிர்ந்து கொண்டிருக்கிறார்கள்; ஒளிர்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்த்து நீங்கள் பயப்படுகிறீர்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயே வள்ளுவர் மிக அழகாகச் சொல்லியிருக்கிறார்.

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு"

என்று சொல்லியிருக்கிறாரே, அந்தக் குறளுக்கேற்ப புதிய 10-வது ஐந்தாண்டுத் திட்டம், நிதி நெருக்கடியிலே ஐந்தாண்டுத் திட்டம் என்பது எல்லாம் வெறும் கனவு, பகல் கனவு, கானல் நீர் என்று பலர் சொல்லிக் கொண்டிருக்கிற நேரத்திலே துணிவுடன், approval of the Union Planning Commission என்று சொல்லக்கூடிய மத்திய திட்டக் குழுவின் ஒப்புதலைப் பெற்று, ரூ.40 ஆயிரம் கோடி





ஒதுக்கீட்டில் தேசிய இலக்கிற்கு 2 ஆண்டுகளுக்கு முன்னாலேயே GSDP என்று சொல்லக்கூடிய ஒரு நபர் வரி வருமானம் இரு மடங்காக உயர வேண்டும் என்ற உன்னத தொலைநோக்குப் பார்வையோடு, ஐந்தாண்டுத் திட்டம் கண்ட இந்தியாவின் மார்க்ரட் தாட்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே நான் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

"சாத்தியம் என்பது வார்த்தையல்ல, செயல்" என்று சொல்வார்கள். வாய்ச் சொல் வீரர்களின் வாயடைக்க ஐந்தாண்டுத் திட்டம் கண்ட அம்மா அவர்களைப் பாராட்டிய மேதகு ஆளுநர் அவர்களுக்கு நான் இந்த நேரத்திலே நன்றியோடு நினைவு கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் தொலைநோக்குத் திட்டத்தை வெறும் அறிவிப்போடு விட்டுவிடாமல், இந்தத் தொலைநோக்குத் திட்டத்தை உங்களைப் போல வெறும் காகிதத்தோடு விட்டுவிடாமல் செயல்படுத்த வேண்டும் என்பதற்காக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நான்கு வழி அணுகுமுறையைப் பின்பற்ற முடிவு செய்திருக்கிறார்கள். 1. Innovative Development Initiatives. புதிய வளர்ச்சித் திட்டத்தை உருவாக்குதல். 2. Good Governance, சிறப்பான நிருவாகம். 3. Maintenance of Law and Order, சட்டம் ஒழுங்கைப் பராமரித்தல். 4. Fiscal reforms, நிதிச் சீர்திருத்தங்கள் என்ற இந்த நான்கு வழி அணுகுமுறையை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பின்பற்ற முடிவு செய்துள்ளார்கள் என்பது வரவேற்கத்தக்க அம்சமாகும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

2002 டிசம்பரில், National Development Council என்று சொல்லக்கூடிய தேசிய வளர்ச்சிக் குழுவினுடைய ஒப்புதலோடு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் Hon. Chief Minister's 15-Point Programme என்று சொல்லக்கூடிய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய 15 அம்சத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஐந்தாண்டுத் திட்டம் குறிப்பாக தொடங்கப்படுவதானது அன்னை அவர்களுடைய மாபெரும் சாதனை மணிமகுடத்திலே போற்றி பூஜிக்கப்பட வேண்டிய ஒன்று என்பதை இந்த நேரத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன். இத்தகைய நிதி நெருக்கடியான சூழ்நிலையில் தமிழகத்தை நொடித்துப் போக விடாமல், தமிழகம் அழிவுப் பாதையில் சென்றுவிடாமல் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொருளாதாரத்தில் தலைநிமிரச் செய்த அறிவாற்றல் வேறு எவருக்கும் இல்லை என்பதை இந்த நேரத்திலே நான் இங்கே அன்போடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பட்டங்களாள்வதுஞ் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்"

என்ற வைர வரிகளுக்கு அணி சேர்க்கும் விதமாக தமிழகத்திலே ஒரே சமயத்திலே வக்ஃபு வாரியத் தலைவர், சிறுபான்மை வகுப்பினர் நல ஆணையத் தலைவர், தலைமைச் செயலாளர் மற்றும் மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவர் என முக்கிய பதவிகளில் எல்லாம் இப்போது பெண்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்பது, முன் எப்போதும் இல்லாதது. முன்னுதாரணமாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்திலே உருவாக்கித் தந்திருக்கிறார்கள்.

*முற்பகல் 11-40*

"வீட்டுக் குள்ளே பெண்ணைப் பூட்டிவைப் போமென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்"

என்பதை நிரூபிக்க சுமார் 20 இலட்சம் மகளிரைக் கொண்ட 1.15 இட்சத்திற்கும் அதிகமான மகளிர் சுய உதவிக் குழுக்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலைமையில் சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன என்று மேதகு ஆளுநர் அவர்கள் தன்னுடைய உரையிலே பாராட்டி இருப்பதற்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

"It is not how much we give: but how much love we put into giving" என்று சொல்வார்கள். எவ்வளவு செய்தோம் என்பதைவிட, எவ்வளவு அன்போடு செய்தோம் என்பதுதான் முக்கியம் என்று நான் சொல்லவில்லை, அன்னை தெரசா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அன்னை தெரசா அவர்களால் பாராட்டப்பட்ட, அன்னை தெரசா அவர்களால் புகழப்பட்ட எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். மகளிர் உதவி அமைப்புகள் தொடங்குதல், நடமாடும் ஆலோசனை மையங்கள் தொடங்குதல், மகளிர் நீதிமன்றங்கள் அமைத்தல், மகளிர் அதிரடிப்படை, மகளிர் காவல் நிலையத்தை வலுப்படுத்தல் என்று மகளிர் மேல் கொண்ட அன்னையின் அன்பின் வெளிப்பாடுதான் இத்தனை திட்டங்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன்.



வேளாண்மைத் துறையின் செயல்பாட்டில் முன்னேற்றம் காண புதிய திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். Agri-clinical என்று சொல்லக்கூடிய அணுகுமுறை மூலம் ஆதாயம் தரத்தக்க பொருளாதார நடவடிக்கைகளை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்திருக்கின்றார்கள். Food for work என்ற அடிப்படையிலே இந்தியாவிலே முதன் முதலாக யாரும் செய்ய முடியாத திட்டத்தை இப்போது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தந்திருக்கிறார்கள்.

மழைநீர் சேமிக்கின்ற திட்டம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் தமிழகத்திலே முதன் முதலாக தொடங்கப்பட்டு இந்திய அரசு இந்தத் திட்டத்தை எடுத்து நடத்தக்கூடிய வகையிலே அற்புதமான திட்டங்களை உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

100 ஏக்கருக்குக் குறைவாக ஆயக்கட்டு கொண்ட கால்வாய்களை, குளங்களை தூர் வாரும் பணி வேலைக்கு உணவளிக்கும் திட்டத்தின்கீழ் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இதுமட்டுமின்றி 100 ஏக்கருக்கு மேற்பட்ட பொதுப் பணித் துறை சார்பாக இருக்கக்கூடிய குளங்களையெல்லாம், நீராதாரங்கள் தொகுப்புத் திட்டம் 2 என்று சொல்லக்கூடிய Water Resources Consolidation Project-II என்ற திட்டத்திற்கு இப்போது அனுமதி கோரியிருக்கிறார்கள்.

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1993-லேதான் Water Resources Consolidation Project-I என்ற திட்டத்திற்கு அனுமதியைப் பெற்றார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சென்னை மற்றும் திருப்பூரிலே Apparels Parks என்று சொல்லக்கூடிய ஆடை பூங்காக்கள்; குன்னூரிலே Tea Serve என்று சொல்லக்கூடிய ஏல விற்பனை மையம்; கச்சா வீடுகள் மேம்படுத்துதல்; பீடித் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டுதல்; Touch Screen Kiosks என்று சொல்லக்கூடிய அனைத்து வட்ட அலுவலகங்களிலும் தொடுதிரை தகவல் மையங்கள் உருவாக்குதல்; மற்றும் ஒரு குடும்பத் தலைவன் தன் வீட்டிலேயிருந்து கொண்டே, E-mail மூலமாக வில்லங்க சர்ட்டிபிகேட் பெறக்கூடிய மிகப் பெரிய கணினி புரட்சியையும் நலத் திட்டங்களையும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுத்திருக்கிறார்கள்.

புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தொலைநோக்குக் கனவான புதிய நிருவாக நகரம் உருவாக்கத் திட்டம்; மெரினா நகர்ப் பகுதியை புதுப்பிக்கின்ற திட்டம்; தேனி, வேலூர், கன்னியாகுமரியில் மருத்துவக் கல்லூரிகள் தொடங்கும் திட்டம் என திட்டங்களுடைய பட்டியல் நீண்டுகொண்டே இருப்பதால் அவற்றைச் சொல்ல பேரவைத் தலைவர் அனுமதி அளிக்கமாட்டார் என்பது எனக்குத் தெரியும். இருந்தாலும், நான் படித்த ஒரு கருத்தை, சுவையான கருத்தை இந்த அவையிலே சொன்னால் அது பொருத்தமாக இருக்கும் என்பதற்காக அந்தக் கருத்தை இந்த அவையிலே எடுத்து வைக்க விரும்புகிறேன்.

பகவத் கீதையிலே, சமஸ்கிருதத்திலே மிக அழகாக

"பவித்ராணாம் பவித்ரம் யோ மங்களானாம் ச மங்களம்

தைவதம் தேவதானம் ச பூதானாம்யோ(அ)வ்யய: பிதா"

என்று சொல்லியிருக்கிறார்கள். அதாவது 'சுத்தமான மனதுடன் செய்யும் எல்லாச் செயல்களிலும் நல்லதே பிரதிபலிக்கும். ஆனால் அந்த நல்ல செயலை யாராவது தவறாக நினைத்தால் அவர்களுக்கு அழிவே முடிவாகும்' என்று நான் சொல்லவில்லை; நாங்கள் சொல்லவில்லை; பகவத் கீதையிலே சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் அம்மா அவர்கள் நல்ல நோக்கத்தோடு நல்ல பல திட்டங்களை நாட்டின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் கொடுத்துக்கொண்டுள்ளார்கள் என 'மேதகு ஆளுநர் அவர்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பாராட்டி இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையை ஆன்றோர்கள் பாராட்டுகிறார்கள்; சான்றோர்கள் பாராட்டுகிறார்கள்; அறிவுசால் அறிஞர்கள் பாராட்டுகிறார்கள்; நல்லவர்கள் பாராட்டுகிறார்கள்; வல்லவர்கள் பாராட்டுகிறார்கள்; சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல் உள்ள நடுநிலையாளர்கள் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள்; ஏழைகள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் சில பேருக்கு பாராட்ட மனமில்லை. குறை சொல்லிப் பழக்கம். எதைச் சொன்னாலும் தாம் தூம் என்று குதிக்கின்ற பழக்கம். அவர்களுக்காகத்தான் பகவத் கீதையிலே இந்தக் கருத்தை தேடிப் பிடித்து இந்த அவையிலே பதிவு செய்ய வேண்டும் என்பதற்காக இன்றைக்கு இந்தக் கருத்தை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். நல்லவர்கள் செய்கின்ற காரியத்தை, நல்ல



காரியத்தை குறை சொன்னால் உங்களுக்கு அழிவு நிச்சயம் என்று பகவத் கீதையிலே உங்களுக்காக அன்றைக்கே எழுதப்பட்டுவிட்டது. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களுக்காக பகவத் கீதையிலே எழுதப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே நல்ல திட்டங்களை வரவேற்க பழகிக்கொள்ளுங்கள். நல்ல திட்டங்களை வாழ்த்த பழகிக்கொள்ளுங்கள். நல்ல திட்டங்களை நீங்கள் பாராட்டியே ஆக வேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் பணிவோடு சுட்டிக்காட்டி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய உரையினுடைய நிறைவாக ஒன்றே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும்.

*முற்பகல் 11-45*

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** ஆளுநர் உரை என்பது இன்றைக்கு சபைக்காக எழுதப்பட்ட சாதாரண வார்த்தைகள் அல்ல. புல்லுக்கு முலாம் பூசி முருங்கை என விற்பவர்களுடைய மத்தியில் இன்றைக்கு ஆளுநர் உரை கொள்கைத் திரட்டாக, கருத்துக் குவியலாக வரலாற்றுப் பெட்டகமாக, தமிழ்நாட்டின் வளமான எதிர்காலத்தைத் திறந்து விடும் வசந்தக் காற்றாக இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே மீண்டும் ஒரு முறை சொல்லிக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டத்தின் சார்பாக ஒரே ஒரு பணிவான கோரிக்கையை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விழைகிறேன். புதுக்கோட்டை மாவட்டத்திலே பல பகுதிகளிலே செயற்கை வைரத்திற்கு பட்டைத் தீட்டும் தொழில்கள் மிகச் சிறப்பாக ஒரு காலத்தில் நடைபெற்று வந்தன. இன்றைக்கு அன்னியச் சந்தையோடு போட்டி போட இயலாத காரணத்தாலே இந்தச் செயற்கை வைரத் தொழில்களில் ஈடுபட்டு வந்த பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் குறிப்பாக வீட்டிலே இருக்கக்கூடிய பெண்கள், மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் அந்தத் தொழிலில் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டு வேலைவாய்ப்பின்றி தவிக்கிற ஒரு சூழ்நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே அவர்களுக்கு மாற்று ஏற்பாடு செய்கிற வகையில் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு, கருணை உள்ளத்தோடு

புதுக்கோட்டை மாவட்டத்திலே செயற்கை வைரம் பட்டைத் தீட்டும் தொழிலுக்கு மீண்டும் புத்துயிர் கொடுக்க வேண்டுமென்று புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பாதம் வணங்கி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இடத்திலே—புதுக்கோட்டை அரசு மருத்துவமனையிலே ஒரு கோடி ரூபாய் செலவில் C.T. Scan-ஐ அளித்தீர்கள் தாயே, அதற்கு நன்றி தெரிவிக்கிறேன்—இன்றைக்கு அந்த அரசு மருத்துவமனையிலே I.C.U. என்று சொல்லக்கூடிய Intensive Care Unit-ஐ விரிவாக்கம் செய்ய வேண்டுமென்றும், Cardiology Unit என்று சொல்லக்கூடிய சிறப்பு சிகிச்சைப் பிரிவைத் தொடங்க தாங்கள் அனுமதி வழங்கவேண்டுமென்றும் இந்த நேரத்திலே மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்கு உள்ளடக்கிய கந்தர்வக்கோட்டை தாலுகா மருத்துவமனையை Accident Trauma Centre என்று சொல்லக்கூடிய விபத்துக்காய சிகிச்சை மையமாக ஆக்கி புரட்சித் தலைவி அவர்களுடைய உன்னதத் திட்டத்தில் புதுக்கோட்டையும் பங்கு பெறும் என்ற வகையிலே அந்தத் திட்டத்திலே கந்தர்வக்கோட்டையைத் தாங்கள் சேர்க்க வேண்டுமென்று பாதம் பணிந்து இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு மின்சாரச் சுடுகாடு என்பது இப்போதுள்ள சுற்றுப்புறச் சூழலுக்கு மிக அவசியமான ஒன்று. ஆகவே புதுக்கோட்டை நகராட்சிப்பகுதியிலே அந்த Electric burner என்று சொல்லக்கூடிய மின்சார சுடுகாட்டைப் பயன்படுத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

புதுக்கோட்டை மக்கள் பொழுதுபோக்கிற்கு வழியில்லாமல் மிகவும் கஷ்டப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. புதுக்கோட்டையிலே புதுக்குளம் என்ற ஒரு பகுதி இருக்கிறது. அந்தப் பகுதியை ரூ.50 இலட்சம் செலவில் சுற்றுலாத் துறையின் மூலமாக நவீனப்படுத்தி, மேம்படுத்தி, அழகுபடுத்தி புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கோட்டை புதுக்கோட்டை என்பதை நிரூபிக்கும் வகையிலே இன்னும் பல்வேறு திட்டங்களை அள்ளித்தர வேண்டுமென்று நான் பணிவோடு தெரிவித்துக்கொண்டு, மேதகு ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவித்து முன்மொழிகின்ற வாய்ப்பைக் கொடுத்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதத்தை வணங்கி விடைபெற்றுக் கொண்டு அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. பொன்முடி.

***டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாவிலும் தமிழ் படித்துச் சாதல் வேண்டும். என் சாம்பலும் தமிழ் மணந்து வேதல் வேண்டுமென்று சொல்லி இந்த வயதிலும் தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய கலைஞர் அவர்களை வணங்கி ஆளுநர் உரையிலே என்னுடைய கருத்துகளை எடுத்து வைக்க விரும்புகிறேன். தமிழகத்தில் வறட்சிக் கொடுமையால் தொடரும் பட்டினிச் சாவுகள் ஒரு பக்கம். கலைஞர் தந்த இலவச மின்சாரம் பறிபோய் விடுமோ என்று மீட்டர் பொருத்துவதைப் பார்த்து மீட்டர் வட்டிக்கு கடன் வாங்கக்கூடிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுவிடுவோமா என்று தவித்துக் கொண்டிருக்கிற விவசாயிகள் ஒரு பக்கம். கரும்புக்கு டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் கிடைக்குமென்று நம்பி ஏமாந்து, அன்று கலைஞர் ஆட்சியிலே கொடுக்கப்பட்ட தமிழக அரசினுடைய விலையும் குறைக்கப்பட்டு, நிறுத்தப்பட்டு, அது குறைந்து விட்டதே, இனி கரும்பே, பயிரிட முடியவில்லையே என்று, அது எப்போது கிடைக்கும் என்று, ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கிற விவசாயிகள் ஒரு பக்கம். ரேஷன் அரிசி விலையை எந்த காலகட்டத்திலும் நான் உயர்த்தவே மாட்டேன் என்று சட்டமன்றத்திலும் வாக்குறுதியைக் கொடுத்துவிட்டு, அந்த வாக்குறுதியை எங்கே கொடுத்தாலும் அங்கேயே அதை காற்றாய்ப் பறக்க வைப்பதுதான் எங்களுடைய வேலை என்று நிரூபிக்கும் வகையில் 3½ ரூபாய் அரிசியை 6 ரூபாயாக உயர்த்தி விட்டார்களே என்ற வேதனைக் குரலோடு ரேஷன் கடைக்கு முன்னால் திரண்டிருக்கிற தாய்மார்களின் வேதனைக் குரல் ஒரு பக்கம். அரசு ஊழியர்களாக ஆக்குவோம் என்று சொன்னார்கள். நாங்கள் அரசு ஊழியர்களாக மாறாவிட்டாலும் பரவாயில்லை, போக்குவரத்துக் கழகமாவது அரசிடம் இருக்குமா என்ற சந்தேகத்தைக் கிளப்பிவிட்டு, இன்று எங்களுக்கு போனசும் போனது, ஊதியம் நிர்ணயிக்க வேண்டிய ஊதிய நிர்ணயக் குழுவையும் நியமிக்கவில்லையே என்று போர்க்குரல் எழுப்பிக்கொண்டிருக்கக்கூடிய தொழிலாளர்கள் கூட்டம் ஒரு பக்கம். தொழிற்சாலைகள் மூடப்பட்டு 12 (3) ஒப்பந்தப்படி நவம்பர் மாதம் 2002-ல் திறக்கப்படும் என்று சொல்லி 1700 டன்லப் தொழிலாளர்கள் நீதிக்காக வீதிக்கு வந்து போராடுகின்ற போராட்டம் ஒரு பக்கம்.

அதுமட்டுமல்லாமல் அரசு ஊழியர்கள் கடந்த கால ஆட்சியிலே, கலைஞர் காலத்தில் கொடுக்கப்பட்ட சலுகைகளை நாங்கள் அதிகமாகக்கூட கேட்கவில்லை, கொடுத்த சலுகைகளைப் பறிக்காமல் இருந்து அவை தொடரக்கூடாதா என்ற வேதனைக் குரலோடு போராட்டம் நடத்தினால் ESMA பாயும் என்ற மிரட்டல் ஒரு பக்கம். இப்படி ஜனநாயகத்தினுடைய குரல்வளையை நசுக்குகிற வகையிலே பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிற இந்தக் காலகட்டத்தில் வேலை கிடைக்குமா என்று ஏங்கிக் கொண்டிருக்கிற இலட்சோப இலட்சம் இளைஞர்களுக்கு மத்தியில், கிடைத்த வேலையிலே நாம் நிம்மதியாக இருக்கலாம் என்ற உணர்வோடு பணியிலே இருந்தார்களே சாலைப் பணியாளர்கள் 10 ஆயிரம் பேர், அவர்களும் வேலை இழந்து, பட்டினிச் சாவின் மூலமாகச் செத்துக்கொண்டிருக்கிற நிலைமை ஒரு பக்கம்.

*முற்பகல் 11-50*

மக்கள் நலப் பணியாளர்கள் 13 ஆயிரம் பேர் வேலை இழந்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறுக்கிட வேண்டாம் என்று இருந்தேன். ஆனால் பட்டினிச் சாவுகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு முறை குறிப்பிட்டுவிட்டார்கள். ஆகவே இதற்கு விளக்கம் அளிப்பது அவசியம் என்று நான் கருதுகிறேன். இதற்கு விளக்கம் அளிக்க வேண்டிய கட்டாயத்திற்கு நான் தள்ளப்பட்டிருக்கிறேன்.

இதுவரை தமிழ்நாட்டில் பட்டினியால் ஒருவர்கூட சாகவில்லை (மேசையைத் தட்டும் ஒலி) என்ற உண்மையை இங்கே தெளிவுபடுத்த நான் விரும்புகிறேன். இதுவரை 13 பேர் இறந்திருக்கிறார்கள். இந்த இறப்புகள் பற்றிய உண்மை நிலையை விளக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

1. திருவாரூர் மாவட்டம், ஆதிச்சபுரம் கிராமத்தைச் சேர்ந்த பிரகாஷ் என்ற சிறுவன் வயிற்றுவலியால் இறந்துள்ளான்.

2. தஞ்சாவூர் மாவட்டம், திருபுவனம் வட்டத்தைச் சேர்ந்த வீரையன் என்பவர் குடும்பத் தகராறு காரணமாகத் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

3. திருவாரூர் மாவட்டம், பாளையங்கோட்டையைச் சேர்ந்த சண்முகம் என்பவர் கடன் தொல்லையாலும், குடும்பப் பிரச்சினையாலும் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.



4. நாகப்பட்டினம் மாவட்டம், கீழவாக்கரை கிராமத்தைச் சேர்ந்த பத்மாவதி என்ற பெண்மணி நெஞ்சுவலியால் இறந்துள்ளார்.

5. திருவாரூர் மாவட்டம், விலாங்காடு கிராமத்தைச் சேர்ந்த தமிழரசன் என்பவர் உடல்நிலை சரியில்லாததால் மாரடைப்பால் மரணம் அடைந்துள்ளார்.

6. திருவாரூர் மாவட்டம், தபோநாயகிபுரத்தைச் சேர்ந்த வேலுசாமி என்பவர் மஞ்சள் காமாலை நோயின்ால் பாதிக்கப்பட்டு, நெஞ்சு வலியால் உயிரிழந்துள்ளார்.

7. விழுப்புரம் மாவட்டம், சித்திரைப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த சொர்ணபுஷ்பம், வயது 75 என்பவர் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டு மரணம் அடைந்துள்ளார்.

8. நாகப்பட்டினம் மாவட்டம், புதுச்சேரியைச் சேர்ந்த கணேசன் என்பவர் இரயில் தண்டவாளத்தில் அடிபட்டு இறந்துள்ளார்.

9. திருவாரூர் மாவட்டம், அம்மலூரைச் சேர்ந்த கணேச தேவர் என்பவர் எலும்பு உருக்கி நோயினால் இறந்துள்ளார்.

10. திருவாரூர் மாவட்டம், இராஜகோபாலபுரம் கிராமத்தைச் சேர்ந்த சம்பந்தம் என்பவர் மாரடைப்பால் இறந்துள்ளார்.

11. தஞ்சாவூர் மாவட்டம், கருப்பூர் கிராமத்தைச் சேர்ந்த யூனூஸ் என்பவர் மாரடைப்பு காரணமாக இறந்துள்ளார்.

12. தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளத்தைச் சேர்ந்த பரமசிவம் என்பவர் குடும்பக் காரணங்களுக்காக விஷம் அருந்தி தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

13. நாகப்பட்டினம் மாவட்டம், சுந்தரபாண்டியம் கிராமத்தைச் சேர்ந்த திரு. காத்தான் என்பவர் டீ கடைக்குச் செல்லும் வழியில் கீழே விழுந்து, அதனால் ஏற்பட்ட தலைக் காயத்தால் இறந்துவிட்டார்.

மேதகு ஆளுநர் அவர்கள் உரையை வாசிக்கத் தொடங்குவதற்கு முன்பாக, 23 ஆம் தேதி அன்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் எழுந்து, 12 பேர் பட்டினியால் செத்துவிட்டார்கள், ஆகவே வெளிநடப்புச் செய்கிறோம், இந்த அரசு தனது கடமையைச் செய்யவில்லை என்று குறிப்பிட்டார்கள். 12 பேர் அல்ல; 13 பேர்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2003 ஜனவரி 28

இறந்திருக்கிறார்கள். அதற்கான விளக்கத்தையும் இங்கே தந்திருக்கிறேன். ஆகவே ஒருவர்கூட பட்டினியால் சாகவில்லை என்பதை இந்த நேரத்திலே நான் ஆதாரங்களோடு தெரிவித்திருக்கிறேன்.

ஒரு மாநிலத்தில் வறட்சி ஏற்படுகின்ற காலத்தில்கூட ஏதோ காரணத்திற்காக ஒருசிலர் மரணம் அடையத்தான் செய்வார்கள். எங்கே மரணம் நிகழும் என்று காத்துக்கொண்டு, பார்த்துகொண்டிருந்து யார் செத்தாலும், பட்டினியால் செத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வறட்சியால் செத்தார்கள், என்று கூறுவது மிகவும் மலிவான அரசியல் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் எத்தனை வகையான வியாதிகள் இருக்கின்றன என்பதையெல்லாம் பட்டியல் போட்டு முதலமைச்சர் காட்டியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, பொதுவாக நீங்கள் பட்டினிச் சாவு என்று சொன்னீர்கள். பட்டினிச் சாவு என்று பத்திரிகைகளில் வந்த செய்திகள், சொல்லப்பட்ட செய்திகளுக்கு முதலமைச்சர் அவர்கள் ஆதாரபூர்வமாக விளக்கம் சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் பட்டினிச் சாவு என்பதற்குக் குறிப்பிட்டு ஏதாவது ஒன்றைச் சொல்லுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** அதைத்தான் சொல்கிறேன். இதோ, அதற்கு வருகிறேன். பட்டினிச் சாவு என்பதற்காக..

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..

**டாக்டர் க. பொன்முடி:** இருங்கள். சண்முகம் அவர்கள் கடிதம் எழுதி வைத்து சட்டமன்ற உறுப்பினருக்கு அந்தக் கடிதம் வந்ததற்குப் பிறகு, இரவு நேரத்திலே அந்தச் சட்டமன்ற உறுப்பினரை, அந்தக் கடிதத்தைப் பிடுங்குவதற்காக காவல் துறையினர் சென்றதாக பத்திரிகைகளில் எல்லாம் செய்தி வந்திருக்கிறதே? அதற்கு என்ன பதில்? சட்டமன்ற உறுப்பினருக்கு அவரே கைப்பட எழுதிக் கொடுத்திருக்கிறாரே? இது ஒரெயொரு உதாரணம், இதுவரை பதில் உண்டா? ஏன் அந்தக் கடிதத்தைக் கைப்பற்ற...



2003 ஜனவரி 28]

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதில் உண்டா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார். பதில் உண்டு. ஆனால், தற்சமயம் என்னிடத்தில் இல்லை. அதைப் பிறகு தெரிவிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் *11-55*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதாரபூர்வமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதை மறுத்திருக்கிறேன் என்று சொன்னார்கள். எந்த ஆதாரமும் இல்லை. அவர் மாரடைப்பால் இறந்தார், அவர் குடும்பப் பிரச்சினையால் தற்கொலை செய்து கொண்டார் என்று சொன்னாரே தவிர எந்த ஆதாரமும் காண்பிக்கவில்லை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நான் தெரிவித்த விவரங்கள் எல்லாம் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாகவும், காவல் துறையினர் மூலமாகவும் பெறப்பட்ட தகவல்கள். இதை விட ஆதாரம் என்ன தேவை என்று எனக்குத் தெரியவில்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதாரங்கள் அந்த அளவுக்கு இருந்திருக்குமேயானால், சிவபுண்ணியம் வீட்டிலே போலீசார் அத்து மீறி நள்ளிரவிலே நுழைய வேண்டிய அவசியம் என்ன வந்தது? ஏன் அச்சுறுத்த வேண்டும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறேன் என்று சொல்லி விட்டார்கள். உட்காருங்கள். பொன்முடி பேசுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** சாவுகள் எத்தகையதாக இருந்தாலும், அந்தச் சாவுகள் எப்படி நிகழ்ந்தன; வயிற்றுவலியால் சாவு என்பது mal-nutrition.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. நீங்கள் பேசும்போது பேசுங்கள். பொன்முடி நீங்கள் பேசுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** எலும்புருக்கி நோய் வந்தால் சாவார்களா?

[2003 ஜனவரி 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஆளுநர் உரையில் பேசும்போது பேசுங்கள். (குறுக்கீடு) எஸ்.ஆர்.பி. ஆளுநர் உரையில் பேசும்போது பேசுங்கள். (குறுக்கீடு) பொன்முடி பேசுங்கள்.

**திரு. துரைமுருகன்:** முதல்வர், தஞ்சை மாவட்டத்தில் இருந்தவர் நோயால் மடிந்தார் என்று சொன்னார். மாவட்ட ஆட்சித் தலைவர் அறிக்கை விட்டவுடன் இறந்தவருடைய மனைவி, என்னுடைய கணவர் பட்டினியால் செத்தாரே தவிர தற்கொலை செய்துகொள்ளவில்லை. இதை தீயிலேகூட இறங்கி நான் நிரூபிக்கத் தயார் என்று அந்தத் தாய் கதறிய காட்சி எல்லாத் தொலைக்காட்சிகளிலும் காட்டப்பட்டது. (குறுக்கீடுகள்) முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். பேரவைத் தலைவருக்கு ஒரு பணிவான வேண்டுகோள். சங்கரலிங்கனார் சாவிற்கும், கீழப்பழுவூர் சின்னசாமி சாவிற்கும் இப்படித்தான் அன்றைக்கு இருந்த ஆளும் கட்சி காரணம் கற்பித்தது என்பதை மட்டும் தாங்கள் அறிவீர்கள் என்று நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி பேசுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தமிழ்நாட்டிலே இருக்கிற கட்சிகள் எல்லாம் ரொம்ப மலிவான அரசியல் நடத்துவதாக ** சொன்னார்கள். மலிவான அரசியல் நாங்கள் நடத்தவில்லை. (குறுக்கீடுகள்). மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு உறுப்பினர் சொன்னது அவருடைய சொந்த வார்த்தைகள். நான் அத்தகைய சொற்களைப் பயன்படுத்தவில்லை.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சர் சொன்னதாக பழனிசாமி சொன்னது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2003 ஜனவரி 28]

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டினிச் சாவு என்று நாங்கள் சொல்லவேயில்லை. இப்போதும் சொல்கிறோம். பட்டினிச் சாவு என்று சொல்லவில்லை. எந்த இடத்திலேயும் கம்யூனிஸ்ட் கட்சி சொல்லவில்லை. பட்டினிச் சாவு என்று சொன்னது ஒரே நபர், ஒரே பையன் ஆதிச்சபுரம் பிரகாஷ் மட்டும்தான். அதை இல்லை என்று மறுக்கவில்லை. அன்றைக்கு அவர் உண்மையாகவே இறந்து போனார். அதற்குப் பின்னால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன அந்த 12 பேரும் இறந்தது நட்டப் பயிரே கருகிப் போய் எதிர்கால குடும்ப வாழ்க்கைக்கு என்ன செய்வது என்ற ஏக்கத்திலேதான் தற்கொலை செய்து கொண்டு செத்தார்களே தவிர...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, நீங்கள் பேசும்போது பேசுங்கள். பொன்முடி, பேசுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களிடம் ஒரு அன்பான வேண்டுகோள். எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் நதி நீர்ப் பிரச்சினை பற்றிப் பேசும்போது, முன்னாள் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசுகிறபோது, கடைசியிலே பேசுங்கள் என்று சொன்னீர்கள். எங்களைப் பேச விட்டுவிட்டு—மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குப் பதில் சொல்கிற நேரம் எல்லாம் நிறைய இருக்கிறது. அப்போதுகூட அவர்கள் இவற்றுக்கெல்லாம் பதில் சொல்லலாம். ஆகவே என்னுடைய கருத்துகளுக்கு நீங்கள் அருள்கூர்ந்து கொஞ்சம் நேரத்தை ஒதுக்கித் தருமாறு முதலிலே கேட்டுக்கொள்கிறேன்.

சாலைப் பணியாளர்கள். அவர்களிலே சிலபேர் கடிதம் எழுதி வைத்துவிட்டு, வேலை கிடைக்காத காரணத்தால் நான் உயிர்நீத்துக் கொள்கிறேன் என்று சொல்லி கடிதம் எழுதி, செத்துவிட்டுச் சென்றார்களே, அவர்களுக்கு என்ன பதில் சொல்லப்போகிறீர்கள் என்று தெரியவில்லை.

மக்கள் நலப் பணியாளர்கள், கூட்டுறவுத் தொழிலாளர்கள்; இப்படி எத்தனையோ பேர் இந்த இரண்டு ஆண்டு காலத்திலே அரசின் நடவடிக்கைகளினால் உயிர் நீத்திருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல் இன்னும்கூட பஞ்சாயத்துகளிலே இருப்பவர்களுக்குக்கூட வேலை போகுமோ என்ற

பயத்திலேயே சுற்றிக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு சூழலில் இலவச வேட்டி-சேலை நிறுத்தப்பட்டுவிட்டது. இதனால், ஏழை எளிய மக்கள் தங்களுக்கு வேட்டி-சேலை கிடைக்கவில்லையே என்று கதறுவது ஒரு பக்கம் இருந்தாலும், செய்த தொழிலும் போய்விட்டதே என்று நெஞ்சுருகி தவித்துக்கொண்டிருக்கிற நெசவாளர்கள் ஒரு பக்கம்.

அதுமட்டுமல்லாமல் கடற்கரையை அழகுபடுத்துவது கூடாது என்பது எங்கள் கொள்கை அல்ல. ஆனால் அந்தக் கடற்கரையிலே நொச்சிக் குப்பம் போன்ற பகுதிகளிலே வாழ்ந்துகொண்டிருக்கிற ஆயிரக்கணக்கான மீனவர்களுடைய குடும்பம் என்ன ஆவது என்பதுதான் எங்களுடைய கேள்வி. அப்படி அங்கே வாழ்ந்துகொண்டிருக்கிற அந்த மக்களுக்கு ஏதாவது இதுவரை புனரமைப்புத் திட்டத்தை இந்த அரசாங்கம் செய்து இருக்கிறதா? செய்துவிட்டுத்தான் இந்தப் பணிகளை தொடங்கியிருக்க வேண்டும், தொடங்க வேண்டும். அதுபோன்று அங்கேயிருக்கிற மீனவர்கள் வீதிக்கு வந்து போராடிக்கொண்டிருப்பது ஒரு பக்கம். வியாபாரிகள் வரிச் சுமையால் தத்தளித்துக்கொண்டிருப்பது மற்றொரு பக்கம். ஒருமுனை வரி போய் பலமுனை வரி வந்துவிட்டதே என்று வீதிகளிலும் அவர்கள் இறங்கிப் போராடியது ஒரு பக்கம். இப்படி எந்தத் தரப்பிலும் எங்கு சென்றாலும் போராடிக்கொண்டிருக்கிற சூழ்நிலை.

*நண்பகல் 12-00*

பவானி ஆற்றிலே தண்ணீர் வருமா, வராதா என்ற ஏக்கப் பெருமூச்சோடு உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கின்ற கோவை விவசாயிகளுடைய துயரம் ஒரு பக்கம். இப்படி எல்லாப் பக்கமும் துயரத்தோடு, எல்லாத் தரப்பினரும் போராட்டக் களத்திலே குதித்துக் கொண்டிருக்கிறபோது, இவர்களுக்கு எல்லாம் பதில் சொல்கிற வகையிலே இந்த ஆளுநர் உரையிலே ஏதாவது இருக்குமா என்று பக்கங்களைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தேன். அது ஒரு பாராட்டுப் பத்திரமாக இருந்தது. தவறு, அது ஒரு தற்புகழ்ச்சி ஆவணமாக இருந்ததே தவிர, இவற்றைச் சுட்டிக்காட்டி விடிவு காணுகின்ற ஓர் ஆவண உரையாக இந்த ஆளுநர் உரை இல்லாதது குறித்து என்னுடைய வருத்தத்தை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் குறுக்கிட வேண்டிய கட்டர்யத்தை மாண்புமிகு உறுப்பினர் ஏற்படுத்திவிட்டார். பவானி ஆற்றின் குறுக்கே





கேரள அரசு அணை கட்டப்போவதாக அறிவித்ததைச் சொல்லி அது பற்றி ஆளுநர் உரையிலே எதுவுமே குறிப்பிடப்படவில்லை என்று இங்கே தெரிவித்தார். மேதகு ஆளுநர் உரையிலே தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கேரள அரசு, பவானி ஆற்றின் குறுக்கே அணை கட்டுவதைத் தடுக்க வேண்டுமென்று காவிரி நதிநீர் தாவா நடுவர் மன்றத்தின் முன்பு தமிழக அரசு புகார் மனுவைத் தாக்கல் செய்துள்ளது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதுமட்டுமல்ல. நானும் இது குறித்து கேரள முதலமைச்சர் அவர்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன். அவரும் இதுபற்றிப் பேசலாம் என்று பதில் அனுப்பியிருக்கிறார். ஆகவே இந்த அரசு தேவையான நடவடிக்கையை எடுத்து வருகிறது. பவானி ஆற்றின் குறுக்கே அணை கட்டுவதைத் தடுக்க இந்த அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்; மேற்கொண்டு வருகிறது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடுவர் நீதிமன்றத்திலே இப்போது நீதிபதியே இல்லாமல் காலியாக இருக்கிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் up to date ஆக இல்லை. பத்திரிகைகளை வாசிக்க வேண்டும். காலியான இடம் நிரப்பப்பட்டுவிட்டது. ஒரு நீதிபதி நியமிக்கப்பட்டுவிட்டார்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரள முதல்வர், பேசுவதற்காக நாள் குறித்து 17 நாட்கள் ஆகிவிட்டன. 17 நாட்களில் இந்த அரசு என்ன முயற்சி எடுத்திருக்கிறது?

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு கேரள முதல்வர் அவர்களுக்குக் கடிதம் அனுப்பிய பிறகு, நீண்ட நாட்களுக்குப் பிறகுதான் அவர் பதில் அனுப்பினார். அதற்குள் இந்த மாநில அரசு காவிரி நதிநீர் தாவா நடுவர் மன்றத்தின் முன்பு புகார் மனுவை தாக்கல் செய்திருக்கிறது. ஆகவே காவிரி நடுவர் மன்றம் Tribunal இதைப்பற்றி விசாரிக்க வேண்டும். காவிரி நடுவர் மன்றம் இந்த விசாரணையை மேற்கொள்வதற்கு முன்பாக கேரள அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தினால் Tribunal முன்பான விசாரணைக்கு இது குந்தகம் விளைவிக்குமா என்பது குறித்து சட்ட வல்லுநர்களைக் கலந்து

ஆலோசித்த பிறகுதான் இந்த அரசு பேச்சுவார்த்தை குறித்து ஒரு முடிவு எடுக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். முன்னாள் அமைச்சராக இருக்கின்ற ஒருவருக்கு இவையெல்லாம் புரிய வேண்டும்; புரியவில்லை என்பது ஆச்சரியமாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு கேரள முதலமைச்சர் அவர்களைச் சந்தித்துப் பேசினால், இந்தப் பிரச்சினையை நமக்குள்ளேகூட தீர்த்துவிடலாம். இது Tribunal-க்குப் போனால் ஆண்டுக் கணக்கிலே ஆகும் என்பது முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியும். எனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேரள முதலமைச்சரைச் சந்தித்தால் பவானி ஆற்றுப் பிரச்சினையை நமக்குள்ளேகூட தீர்த்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கேரள முதலமைச்சரை நான் சந்திக்க மாட்டேன் என்று சொல்லவில்லை; சந்திக்க விரும்பவில்லை என்றும் சொல்லவில்லை. ஆனால் அவரைச் சந்திப்பது குறித்து சட்ட வல்லுநர்களின் ஆலோசனையைப் பெறவேண்டும் என்றுதான் குறிப்பிட்டேன்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் அமைச்சராக இருந்த காரணத்தால்தான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கடிதம் வந்து 17 நாட்களுக்குப் பிறகும் ஒரு நடவடிக்கையும் இல்லை என்ற ஆதங்கத்தில் சுட்டிக்காட்டியிருக்கிறேன். (குறுக்கீடு) சொன்னதையே சொல்லிக் கொண்டிருக்க வேண்டுமா? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மறுபடியும் சொன்னதையே சொல்லிக் கொண்டிருக்க வேண்டுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் மாதிரி கேட்டுக்கொண்டு இருக்கக்கூடாது. (குறுக்கீடு) நீங்கள் கேட்டதற்கு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள்.





**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, அதுமட்டுமல்ல. குறிப்பாக கிருஷ்ணா தண்ணீர் இங்கே கொண்டு வரப்படுகிறபோது இதே அவையிலே முதலமைச்சர் சொன்னார், கிருஷ்ணா தண்ணீரே வரவில்லை என்று. அப்போது முதல்வராக இருந்த கலைஞர், பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு துரைமுருகன் அவர்கள், அன்று அமைச்சராக இருந்த வீராசாமி அவர்கள், நான் குடிநீர் வடிகால் வாரிய அமைச்சராக இருந்தபோது நாங்கள் நால்வரும் அதிகாரிகளோடு சென்று, அப்போது ஆந்திர முதல்வரைச் சந்தித்து கிருஷ்ணா நதி நீருக்காகப் பேசினோம். ஆனால் இதே சட்டமன்றத்தில் கிருஷ்ணா நதி நீரே வரவில்லை என்று சொல்லிவிட்டு, ஆந்திர முதல்வரும் அதற்குத் தகுதியில்லை, அவரும் தவறு செய்தார் என்று சொல்லிவிட்டு, இன்று சந்திரபாபு நாயுடுவோடு நான் பேசினேன், கிருஷ்ணா நீருக்காகச் சொன்னேன், பேசினேன் என்று சொல்கிற முதல்வர் அவர்கள், இங்கேயே முன்கூட்டியே நான் கிருஷ்ணா நதி நீருக்காக அவரைச் சந்திக்கப் போகிறேன் என்று பத்திரிகைகளுக்கு ஒன்றும் சொல்லாமல், அதிகாரிகளையும் அழைத்துச் செல்லாமல், ஆளுநர் உரையிலே சொல்லியிருக்கிறார் நான் அவரோடு பேசினேன் என்று.

பிற்பகல் 12-05

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் ஆந்திர முதலமைச்சர் அவர்களைப் பற்றி நான் சொல்லாதக் கருத்துகளை இங்கே சொன்னதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். அதை நான் மறுக்கிறேன். கடந்த மாதம் நான் ஹைதராபாத் சென்று இருந்தபோது மாண்புமிகு ஆந்திர முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து சென்னைக்கு கிருஷ்ணா நதி நீர் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று அவர்களைக் கேட்டுக்கொண்டது உண்மை. அதிகாரிகள் அன்றையதினம் என்னுடன் வந்து இருந்தார்கள். என்னுடைய செயலாளர்கள் வந்திருந்தார்கள். ஆனால் தலைமைச் செயலாளர் மற்றும் பொதுப் பணித் துறைச் செயலாளர் ஆகியோர் அன்றைய தினம் வரவில்லை. அதிகாரிகளை வைத்துக்கொண்டுதான் இரண்டு முதலமைச்சர்களும் பேச வேண்டுமென்று எந்தச் சட்டமும் இல்லை. இந்தப் பொருளைப் பற்றி ஆந்திர முதலமைச்சர் அவர்களும் நன்கு தெரிந்து வைத்திருக்கிறார். தெலுங்கு-கங்கை திட்டத்தைப்பற்றி முழுமையாக நானும் நன்றாக தெரிந்து வைத்திருக்கிறேன். ஆகவே அன்றைய தினம் இதைப் பற்றி

இரண்டு முதலமைச்சர்களும் பேசிய பின்னர்—ஒரு Liaison Committee என்று ஒன்று ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளது. அதில் இரண்டு மாநிலங்களின் தலைமைச் செயலாளர்களும், சம்பந்தப்பட்ட அரசு உயர் அதிகாரிகளும் இடம் பெற்றிருக்கிறார்கள். இந்த Liaison Committee சந்திப்பதற்கு தேதி குறிக்கவேண்டுமென்று அதையும் விரைவில் குறிக்கவேண்டுமென்று நான் மாண்புமிகு ஆந்திர முதலமைச்சர் அவர்களை கேட்டுக்கொண்டதற்கிணங்க, அதன் பிறகு 10-1-2003 அன்று ஹைதராபாத்தில் இந்த Liaison Committee, அதாவது இரண்டு மாநில அரசு அதிகாரிகளின் கூட்டம் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு மற்றும் ஆந்திர மாநில அரசுகளின் தலைமைச் செயலாளர்களும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் பேச்சுவார்த்தைகள் நடத்தி இருக்கிறார்கள். ஆகவே எல்லாம் முறைப்படி நடந்துகொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2001 ஆம் ஆண்டிலே ஆளுநர் உரை விவாதத்தின்போது பேசியது. சட்டமன்றக் குறிப்பேடுகளிலே, சொல்லப்பட்டிருக்கின்ற கருத்து. நான் எதையும் சொல்லவில்லையென்று சொன்னார்களே, தவறான கருத்தை நான் சொல்வதாகச் சொன்னார்களே, அதையும் நான் இங்கே படித்துக்காட்ட விரும்புகிறேன். "கிருஷ்ணா நதிநீர் சென்னைக்கு வந்துவிட்டது என்று கூறுவது மாபெரும் மோசடியாகும். மக்களை ஏமாற்றுவதற்காக உள்ளாட்சி அமைப்புத் தேர்தலில், வெற்றிபெற வேண்டுமென்பதற்காக, மக்களை ஏமாற்றுவதற்காக ஒரு விழா நடத்தப்பட்டது. அதில் கிருஷ்ணா நதிநீர் வந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது. அந்த விழாவில் ஆந்திர முதலமைச்சர் கலந்துகொண்டார் என்பது உண்மை. இது ஊர் அறிந்த உண்மை. உலகறிந்த உண்மை. ஆகவே, தி.மு.க. செய்த மோசடியில் ஆந்திர முதலமைச்சருக்கும் பங்கு உண்டு என்பதை மறுக்க முடியாது." இது சட்டமன்றக் குறிப்பேட்டிலே ஏறியிருக்கிற கருத்து. என்னுடைய வாதமெல்லாம் கிருஷ்ணா.....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழைய விஷயங்களை இங்கே கிளறுவது என்று சொன்னால் நாங்களும் எவ்வளவோ கிளற முடியும்; சுட்டிக்காட்ட முடியும்; மொத்தத்தில் ஒன்று தெரிகிறது. இப்போது ஆந்திர மாநில முதலமைச்சர் அவர்களுக்கும் எனக்கும் இடையே சுமுகமான உறவு நிலவுகிறது. இப்போது இரண்டு மாநில முதலமைச்சர்களும், இரண்டு



மாநில அரசுகளும் ஒருவரோடொருவர் ஒத்துழைக்கவேண்டும் என்ற நல்லிணக்க உணர்வோடு செயல்பட்டுக்கொண்டிருக்கிறோம். இதைப்பார்த்து திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் அவர்களுக்கும், தி.மு.க. உறுப்பினர்களுக்கும் இருப்பு கொள்ளவில்லை. வயிற்றில் புளி கரைக்கிறது என்பதுதான் தெரிகிறது. இப்படி ஒரு சுமுக உறவு ஏற்பட்டுவிட்டதே என்பதைத் தாங்கிக்கொள்ள முடியாமல் பழைய விஷயங்களையெல்லாம் கிளறிப்பார்க்கிறார்கள். நீங்கள் என்னத்தைக் கிளறினாலும் ஆந்திர மாநில முதலமைச்சர் அவர்களுக்கும் எனக்கும் இருக்கின்ற சுமுக உறவை உங்களால் கெடுக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், ஆந்திர முதலமைச்சர் அவர்களுக்கும் இருக்கிற சுமுக உறவை நான் வரவேற்கிறேன். இந்த சுமுக உறவை வளர்த்துக்கொள்கிற மனப்பான்மை கர்நாடக முதலமைச்சர் அவர்களோடும் இருந்திருக்குமானால் தஞ்சை இன்றைக்கு சஹாராவாக இருந்திருக்காதே.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கருத்தும் அதுதான். அண்டை மாநிலங்களோடு சுமுகமான உறவு இருந்திருக்குமானால் காவிரிப் பிரச்சினையோ, கிருஷ்ணா நதிநீர் பிரச்சினையோ சுமுகமாக தீர்க்கப்பட்டிருக்கும் என்பதுதான் எங்கள் கருத்து.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரிப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் அதைத் தீர்த்து வைப்பதற்கு நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்துவதற்கு காவிரி நதிநீர் ஆணையம், Cauvery River Authority அமைவதற்கு கையெழுத்து போட்டதே தி.மு.க. தலைவர்தான். (மேசையைத் தட்டும் ஒலி). அவர் முதலமைச்சராக இருந்தபோது அவர்தான் இதற்கு ஒப்புதல் அளித்தார் என்பதைச் சுட்டிக்காட்ட நினைவுபடுத்த விரும்புகிறேன். ஆகவே காவிரி நதிநீர் பிரச்சினை என்று சொன்னால் அதிலும் Tribunal-ன் இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்துவது குறித்துப் பேசுவதனால் நதிநீர் ஆணையத்தின் முன்புதான் பேசவேண்டும் என்று உச்ச நீதிமன்றமே உத்தரவிட்டுவிட்டது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[2003 ஜனவரி 28

பிற்பகல் 12-10

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே பழையதை எல்லாம் மறந்துவிட வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிற காரணத்தினால் நானும் பழையதை எல்லாம் மறந்துவிட்டு—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஆளுநர் உரைக்கு வாருங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** அதிலேதான் நானும் பேசுகிறேன். நான் வேறொன்றும் பேசவில்லையே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து 3 நிமிடங்கள்தான் நீங்கள் பேச முடியும்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழையதை எல்லாம் மறந்துவிட்டுக்கூட—நான் இப்போது சுட்டிக்காட்ட விரும்புவதெல்லாம், பழையதை மறக்கிற காரணத்தினால்தான் ** மாண்புமிகு அமைச்சர்கள் இங்கே மானியக் கோரிக்கைகளை......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. பொன்முடி ஏற்கெனவே இதுபற்றித் தீர்ப்பு வழங்கப்பட்டுவிட்டது. அதைப் பற்றிப் பேசக் கூடாது. நீங்கள் பேசியது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. முறையாக ஆளுநர் உரையிலே பேசுவதாக இருந்தால் பேசுங்கள். (குறுக்கீடுகள்) இது சரியில்லை. (குறுக்கீடுகள்) அத்துமீறல்கள் எல்லாம் முடியாது. (குறுக்கீடுகள்) போகிற போக்கிலே எல்லாம் பேசக் கூடாது.

**டாக்டர் க. பொன்முடி:** நீங்கள் தீர்ப்பு வழங்கியதற்குப் பிறகு முதலமைச்சர் அவர்கள் பேசினார்களே, அதை எப்படி அனுமதித்தீர்கள்? எனக்குப் பேச உரிமை இல்லையா? நான் பேசக் கூடாதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்குப் பேசுவதற்கு உரிமை இருக்கிறது. அதை நீக்குவதற்கு எனக்கு உரிமை இருக்கிறது. (குறுக்கீடுகள்) அடுத்து, திரு. ஜெயக்குமார். (குறுக்கீடுகள்) திரு. ஜெயக்குமார்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



2003 ஜனவரி 28]

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அவரைப் பேச விடுங்கள்......

**டாக்டர் க. பொன்முடி:** எப்போது என்னைப் பேசவிட்டீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்) பேசி முடியுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் நேரம் கொடுப்பதும், அவைக் குறிப்பிலேயிருந்து எடுப்பதும் உங்களுடைய அதிகாரம். அதில் நான் தலையிடவில்லை. ஆனால் பொன்முடி அவர்கள் ஒரு விஷயத்தைச் சொல்லி, அது இந்த மன்ற மரபுக்கு உகந்ததாக இல்லை என்றால் தாங்கள் அதை எடுப்பதில் நான் தலையிடவில்லை. ஆனால் அவர் ஆரம்பிக்கவே இல்லை என்கிறபோது அது சபைக் குறிப்பிலே ஏறாது என்றால் எப்படி?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் சொன்ன கருத்தைத்தான் எடுத்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) இங்கே சொல்லப்பட்ட கருத்தைத்தான் நான் எடுத்திருக்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** அவர் என்ன சொன்னார்? எனக்குத் தெரியவில்லை. பணிவுடன் கேட்கிறேன்; அவர் என்ன சொன்னார்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் சொன்னதை நீங்கள் காதிலே வாங்கிக்கொள்ளவில்லை. ** என்று சொன்னார்கள். அதைத்தான் நீக்கியிருக்கிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** அதிலே என்ன தவறு? உண்மை அதுதானே.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்று சொல்லலாம், ஆனால் சொல்வது தவறாக இருந்தால் அதை நீங்கள் நீக்கலாம். ஆனால் அப்படிச் சொல்வதற்கு ஓர் உறுப்பினருக்கு உரிமை இருக்கிறது என்பதை நீங்கள் மறுக்க முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினருக்குச் சொல்வதற்கு உரிமை இருக்கிறது. நீக்குவதற்கு பேரவைத் தலைவருக்கு உரிமை இருக்கிறது. (குறுக்கீடுகள்) பொன்முடி, பேசுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, இப்போது பேசியது அனைத்தும் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. ஏற்கெனவே பேரவைத் தலைவர் வழங்கிய ஒரு தீர்ப்பிற்குப் பிறகு, அவை பற்றிப் பேசுவது முறைகேடானது. உங்கள் நேரம் முடிந்துவிட்டது. அடுத்து, திரு. ஜெயக்குமார். (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, 10 நிமிடம்கூட அவரைப் பேச விடாமல்.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசமாட்டேன் என்கிறார், நீங்கள்கூட வேண்டுமானால் பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. பொன்முடி, அவைக் குறிப்பிலேயிருந்து எடுக்கப்பட்ட கருத்தையே சுற்றிச் சுற்றி வருகிறார். (குறுக்கீடுகள்) அடுத்த உறுப்பினர் பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. பொன்முடி.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆளுநர் உரையிலே பக்கம் 4-லே, 1970 மற்றும் 1980 ஆம் ஆண்டுகளில், நக்சலைட்டுகளின் தீவிர நடவடிக்கைகளுக்குட்பட்ட இடமாக இருந்தன; இந்த அரசு, தனது முந்தைய ஆட்சிக் காலத்தில், அதாவது, 1991-1996 ஆம் ஆண்டுகளில் எடுத்த திடமான, கடுமையான நடவடிக்கைகளினால்தான் நக்சல்பாரிகளின் நடவடிக்கைகள் ஒடுக்கப்பட்டதாகக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். இது உண்மைக்குப் புறம்பான ஒரு செய்தி, வரலாற்றிலே. நீங்கள்கூட அமைச்சராக இருந்திருக்கிறீர்கள். 1980 ஆம் ஆண்டுகளிலே ஆட்சி நடத்தியது யார் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குக்கூடத் தெரியும். இது என்ன, எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சியைக் குறை சொல்ல வேண்டுமென்பதற்காக உருவாக்கப்பட்டதா? 1980-களிலே எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருக்கிற நேரத்தில்தான், எனக்குத் தெரிந்து, தேவாரம் அவர்கள் அங்கே நியமிக்கப்பட்டு அந்தப் பகுதியிலே, தருமபுரியிலே நக்சலைட்டுகள் ஒடுக்கப்பட்டார்கள் என்பதுதான் காவல் துறையிலே இருக்கிற வரலாற்றுக் குறிப்பு. அதைக்கூட மறைத்துவிட்டு, 1980-களிலே அவை இல்லை; 1970-களிலே இல்லை என்று நீங்கள் யாரை குறை சொல்கிறீர்கள்? எந்த ஆட்சியைக் குறை சொல்கிறீர்கள்? 1990-களிலே இல்லை என்று சொன்னால்கூட........





**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யாரைக் குறை சொல்கிறோம் என்று சொன்னால் முந்தைய தி.மு.க. ஆட்சியைத்தான் குறை சொல்கிறோம். 1980 ஆம் ஆண்டுகளில் நக்சலைட்டுகளால் தொல்லைகள் தமிழ்நாட்டில் இருந்தன. அப்போது இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்தில் திடமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வந்தன. நக்சலைட்டுகளின் கொட்டம் அடக்கப்பட்டுவிட்டது. ஆனால் முற்றிலுமாக நக்சலைட்டுகளின் தொல்லை ஒழியவில்லை; அவர்கள் தொடர்ந்து தமிழ்நாட்டில் இருந்துகொண்டுதான் இருந்தார்கள், செயல்பட்டுக்கொண்டுதான் இருந்தார்கள். 1991-ல் நான் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, 1993, 1994 ஆம் ஆண்டு வாக்கில் முற்றிலுமாக நக்சலைட்டுகளின் தொல்லை தமிழ்நாட்டில் இல்லை என்ற நல்ல சூழ்நிலையை உருவாக்கிவிட்டு பின்னர் சென்றோம். ஆனால் 1996-ல் ஆட்சிக்கு வந்த தி.மு.க. அரசின் மெத்தனப் போக்கால் மீண்டும் 1999 ஆம் ஆண்டிலிருந்து நக்சலைட்டுகள் தமிழ்நாட்டில் செயல்படத் தொடங்கினார்கள். அதைத்தான் ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருக்கிறோம். அதன் பின்னர் அண்மையில் நக்சலைட்டுகள் கூடி தருமபுரி மாவட்டத்தில் ஒரு மாநிலம் தழுவிய அவர்களுடைய Activists செயல் வீரர்கள் கூட்டம் நடத்த வேண்டும் என்று திட்டமிட்டபோதுதான் முற்றிலுமாக அதை வெற்றிபெற விடாமல், வெற்றிபெற முடியாமல் ஒழித்துவிட்டோம், ஒடுக்கி விட்டோம், முற்றிலுமாக அவர்களை முறியடித்துவிட்டோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பக்கம் 26-ல் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே—இத்திட்டத்தின்படி ரூபாய் 227.41 கோடி திட்டச் செலவில், 182 வளர்ச்சி வட்டாரங்களில் செயல்படுத்தவிருக்கும் 258 செயற்குறிப்புகள் பரிசீலனையில் உள்ளன என்று சொல்லியிருக்கிறார்கள். சென்ற ஆளுநர் உரையிலே முதலமைச்சர் அவர்கள் பதிலளிக்கிறபோது 'தமிழகத்தின் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் ஒன்றியத்திற்கு ஒரு தொழிற்சாலை வீதம் நிறுவப்பட்டு, ஊரகத் தொழில்கள் மறுமலர்ச்சி பெறுவதற்கு இந்த அரசு போர்க்கால நடவடிக்கைகளை மேற்கொள்ளும்' என்று தெரிவித்தார்கள். ஆக இப்போதுதான் திட்டமே வந்திருக்கின்றது. போர்க்கால நடவடிக்கை

என்பதற்குப் பொருள் இதுதானா? ஓராண்டு காலம் முடிந்திருக்கிறது. வேலையிலே இருப்பவர்கள் பல பேர் வெளியிலே அனுப்பப்பட்டிருக்கிறார்கள். கிராமப்புற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்பதற்காக அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை மாற்றி புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டமாக உருவாக்குகிறோம் என்று சொன்னீர்கள். சொல்லியதற்குப் பிறகு இப்போதுதான் 258 திட்டங்களுக்கு செயற் குறிப்புகள் வந்திருக்கின்றன என்று சொன்னால், இதுதான் போர்க்கால நடவடிக்கையா?

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒரு வழக்கம் இருக்கின்றது. பழைய பட்ஜெட், பழைய ஆளுநர் உரை, இவற்றையெல்லாம் சேகரித்து வைத்துக்கொண்டு அதிலே என்னென்ன கூறப்பட்டிருக்கிறது என்பதை வாசித்துக் காட்டி அதை அப்போது சொன்னீர்களே, அதைச் செய்யவில்லையே என்று கேட்பது அவருடைய வழக்கம். அப்படிப் பார்க்கப்போனால், தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஆளுநர் உரையிலும் பட்ஜெட்டிலும் எத்தனையோ அறிவிப்புகளைச் செய்து அவற்றை செயல்படுத்தவே இல்லை, நடைமுறைக்குக் கொண்டு வரவேயில்லை. நாங்களும் இந்த அவையின் நேரத்தை வீணடிப்பதானால், அவற்றையெல்லாம் சுட்டிக்காட்டி மணிக்கணக்கில் பேச முடியும். நாங்கள் சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு முயற்சியாவது மேற்கொள்கிறோம். அப்போது கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்டபோது, புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் குறைந்தபட்சம் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு பொருளாதார நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று சொன்னோமே தவிர, அந்தப் பணத்தையெல்லாம் அரசே முதலீடு செய்யும் என்று சொல்லவில்லையே! அரசிடம் அவ்வளவு நிதி ஏது? தனியார் துறையிலிருந்து செயற்குறிப்புகளை, கருத்துருக்களை நாங்கள் வரவேற்கிறோம்; அதுதான் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். ஆக மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு நாங்கள் இங்கேயிருந்து instructions சொல்லி, அவர்கள் bids-call for செய்து, இத்தகைய கருத்துருக்கள் தனியார் தொழில் அதிபர்களிடமிருந்து பெறப்பட்டு, அவை இந்த அரசின் பரிசீலனையில் உள்ளன. விரைவிலேயே இந்தத் தொழில்கள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இதெல்லாம் ஒரு process. இன்றைக்குச் சொல்லிவிட்டு, நாளைக்கே நடைமுறைப்படுத்த முடியாது. ஆனால் இந்த அரசு படிப்படியாக systematic-ஆக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை



எடுத்து வருகிறது. இந்தத் தொழில்கள் எல்லாம் வெகு விரைவில் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, 2 நிமிடங்களுக்குள் முடியுங்கள். முதலமைச்சர் பதில் உங்களுக்குத்தான் சொல்லியிருக்கிறார். அதனால் உங்கள் கணக்கில்தான் அவையெல்லாம் வரவு வைக்கப்பட்டிருக்கிறது. இன்னும் 2 மணித்துளிக்குள் முடியுங்கள். (குறுக்கீடு)

**டாக்டர் க. பொன்முடி:** அவர்கள்தான் சொல்லிவிட்டார்கள், பழையதையெல்லாம் மறந்துவிடவேண்டும் என்று .....

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது செல்போன் மாதிரி இருக்கிறது. எப்படி என்றால், உங்களுடைய செல்போனுக்கு நான் பேசினால் நீங்கள் பணம் கட்ட வேண்டும். அதுமாதிரி நீங்கள் பேசினால், அவருடைய கணக்கில் வரவு வைத்துக்கொள்ளப்படும் என்கிறீர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** இதிலேயும் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் up-to-date ஆக இல்லை. அதை மத்திய அரசு இப்போது இரத்து செய்துவிட்டது. (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பழைய நினைவிலேயே ஆழ்ந்து போய் இருக்கிறார்கள். பொன்முடி பேசுங்கள்; பேசி முடியுங்கள். (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** நான் வைத்திருக்கிற செல்போனுக்கு கட்டணம் உண்டு. முதலமைச்சர் வைத்திருப்பதற்கு கட்டணம் இல்லாமல் இருக்கலாம்.

**டாக்டர் க. பொன்முடி:** எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கூட மதிய உணவுத் திட்டத்தைப் பற்றி அடிக்கடி சொன்னார்கள். எல்லாம் up-to-date-ஆக இருக்கிற முதல்வர் அவர்களுக்கு வரலாற்றை நான் சுட்டிக்காட்டுகிறபோது history repeats itself. ஏனென்றால் பேசுகிறவர்கள் அனைவருமே இரண்டு வருடம் ஆன பிறகும்கூட இன்னும் ஏன் இவ்வளவு பிரச்சினை என்று சொன்னால், தி.மு.க. ஆட்சியால்தான் எல்லாம் என்று நீங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். அப்போதிலிருந்தே இதைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்,

இரண்டு வருடம் கழித்தும். இப்போதும் அதைத்தான் சொல்லிக் கொண்டு இருக்கிறீர்கள். அதனால், நீங்களும் பழையதைச் சொல்லிக் கொண்டு இருக்கிறீர்கள்; நாங்களும் நீங்கள் சொன்னதை உங்களுக்கு நினைவுபடுத்திக் கொண்டிருக்கிறோம். ஏனென்றால் நீங்கள் சொல்லவில்லை என்று சொல்லி விடக்கூடாது என்பதற்காக சட்டமன்றத்தினுடைய குறிப்புகளிலிருந்து ஆதாரத்தோடு பேசிக் கொண்டிருக்கிறேனே தவிர வேறு எந்தக் காரணமும் அல்ல; நோக்கமும் அல்ல.

*பிற்பகல் 12-20*

ஆளுநர் உரையினைப் பொறுத்தவரையில் மதிய உணவுத் திட்டத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இந்த மதிய உணவுத் திட்டம் எந்த அளவிற்குச் செயல்படுத்தப்படுகிறது என்பதை பல்வேறு பத்திரிகைகளிலே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். குறிப்பாக பத்திரிகையிலே சொல்லப்பட்டிருக்கிற செய்திகளையெல்லாம் — குறிப்பாக தினமணி பத்திரிகையிலே ஒரு விமர்சனம். 'ஏழை விவசாயிகள் மதிய உணவு பெற மறுப்பு; 212 கிராமங்களில் 12 கிராமங்களில்தான் விவசாயிகள் சென்றார்கள். இது 17 ஆம் தேதி தினமணி பத்திரிகை. ஹிந்து பத்திரிகையிலே 17-1-2003 அன்று ' Poor response in Cuddalore, mixed response in Villupuram' என எழுதியிருக்கிறார்கள். தினகரன் பத்திரிகையிலே 'இன்று உழவர் திருநாளா அல்லது தற்கொலை/ திருவோட்டுத் திருநாளா' என்று தலையங்கமே தீட்டியிருக்கிறார்கள். தினமலர் பத்திரிகையிலே "தமிழக அரசு அறிவித்துள்ள விவசாயிகளுக்கான மதிய உணவுத் திட்டத்திற்கான தகவல்கள் அனைத்தும் அள்ளுபுள்ளிக் கணக்குகளாகவே அரசுக்குத் தெரிவிக்கப்படுகிறது." இது தினமலர் பத்திரிகையிலே சொல்லப்பட்டிருக்கிற செய்தி. துக்ளக் பத்திரிகையிலேகூட இதைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். ' மொத்தத்தில் இத்திட்டம் தமிழக அரசின் வெற்றித் திட்டமாகவோ பலரையும் திருப்திபடுத்துகிற திட்டமாகவோ அமையும் என்று தோன்றவில்லை' என்று துக்ளக் பத்திரிகையிலே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இப்படி பல பத்திரிகைகளிலே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்ட பத்திரிகைகள் எல்லாம் வழக்கமாக இந்த அரசைக் கரித்துக்கொட்டும் பத்திரிகைகள். அவை இப்படி எழுதியிருப்பதில்





எங்களுக்கு ஒன்றும் வியப்பில்லை; ஆச்சரியமில்லை. இந்தப் பத்திரிகைகள் எழுதியிருப்பதை எல்லாம் நாம் உண்மையாக எடுத்துக்கொள்ள முடியாது. இந்தப் பத்திரிகைகள் என்ன எழுதினாலும் எங்களுக்கு அதைப் பற்றிக் கவலையில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஏழையெளிய விவசாயப் பெருமக்கள், பெருங்குடி மக்கள், நிலமற்ற ஏழையெளிய விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காகத்தான் இந்த இலவச மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னும் கொஞ்சம் நேரம்தான் பேச இருப்பதால் நான் விரிவான பதிலை 31 ஆம் தேதி வைத்துக்கொள்கிறேன். ஒரு விவரத்தை மட்டும், ஒரு புள்ளிவிவரத்தை மட்டும் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த மாதம் 31 ஆம் தேதி வரை இந்த இலவச மதிய உணவுத் திட்டத்தின்கீழ் உணவு பெற விரும்புவோர் தங்கள் பெயரைப் பதிவு செய்துகொள்ளலாம் என்று அறிவித்ததால் ஒவ்வொரு நாளும் பயன்பெறுவோரின் எண்ணிக்கை, பதிவு செய்துகொள்வோரின் எண்ணிக்கை கூடிக்கொண்டே வருகிறது. நேற்றைய நிலவரப்படி, அதாவது 27-1-2003 வரை இந்தத் திட்டத்தின்கீழ் இதுவரை 11,33,573 பேர் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். இவர்களில் 9 இலட்சத்து 450 பேர் தினமும் இலவச மதிய உணவு பெற்று வருகிறார்கள். ஆகவே 79 சதவிகிதம் பேர் இந்தத் திட்டத்தின்கீழ் பயனடைந்து வருகிறார்கள். 31 ஆம் தேதி வருவதற்குள் ஏறக்குறைய 12 இலட்சம் பேர் பதிவு செய்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மற்ற விவரங்களை 31 ஆம் தேதி தெரிவிக்கிறேன் என்று மாண்புமிகு பொன்முடி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, பேச்சை முடியுங்கள். தலைப்புச் செய்தி வருகிற மாதிரி ஏதாவது சொல்லி முடியுங்கள். பேச்சை முடியுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைப் பற்றி நடுநிலையாளர்கள்கூட அங்கே சென்று விவசாயிகளிடம் பேசியிருக்கிறபோது, அங்கே விவசாயிகள் சொல்லியிருக்கிறார்கள். பிடி அரிசியாவது கொடுங்கள், உணவு கொடுப்பதற்குப் பதிலாக என்று சொல்லியிருக்கிறார்கள். உதவித் தொகையாகக்கூட கொடுக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இவ்வாறு உணவு கொடுப்பதைவிட, அவர்களுக்கு அரிசியாகவோ,

உதவித் தொகையாகவோ கொடுப்பதற்கு அரசு முன்வருமானால் உண்மையிலேயே பட்டினியால் வாடிக் கொண்டிருக்கிற அந்த விவசாயப் பெருங்குடி மக்களுக்கு—உணவிற்குப் பதிலாக அரிசியை வழங்கினால்—உதவியாக இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அதுமட்டுமல்லாமல் நான் ஏற்கெனவே சுட்டிக்காட்டியதைப் போல இந்த ஆளுநர் உரை என்பது ஒரு பாராட்டுரையாகவே இருக்கிறது என நினைக்கின்றேன். தற்புகழ்ச்சி ஆவணமாக இருக்கின்றதே தவிர நாட்டு மக்களுடைய நிலைமையைச் சுட்டிக்காட்டுவதாக இல்லை. முதலமைச்சருடைய கனவைக்கூட ஆளுநர் உரையிலே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அவர்கள் கனவு காண்பதற்கு, முதலமைச்சருக்கு உரிமை இருக்கிறது. என்னைப் பொறுத்தவரையிலே, என்னுடைய ஆதங்கம் எல்லாம் முதலமைச்சர் காண்கிற கனவு என்பது—

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிற கூற்று சரியாக இல்லை. அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையில் உள்ளதைத்தான் சொல்கிறேன். வேண்டுமென்றால் படிக்கிறேன். தமிழிலே படித்திருந்தால் ரொம்பப் பேருக்குப் புரிந்திருக்கும். தவறாக ஒன்றும் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் 24-வது பக்கத்திலே 'தமிழ்நாட்டு மக்களுக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துணிவுடன் மாபெரும் கனவு கண்டுள்ளார்கள்' என்று இருக்கிறது. அதைப் பற்றித்தான் நான் சுட்டிக்காட்டியிருக்கிறேன். தவறாகச் சொல்லவில்லை. அந்தக் கனவு என்பது நாட்டின் முன்னேற்றத்திற்காகத்தான் கண்டிருப்பார்கள் என்றுதான் கருதுகிறேன். என்னுடைய வருத்தம் எல்லாம் அவர்கள் கண்டிருக்கிற கனவு—The dreams that did not come true என்றுகூட ஒரு கதையில் படித்திருக்கிறோம், அவர்கள் கண்டிருக்கிற கனவு—தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் நான் ஆரம்பப் பள்ளிக்கூடத்திலே படித்த கண்ணாடி வியாபாரியின் கனவாக இல்லாமல்—ஏதோ கனவு கண்டு, கண்ணாடியை எட்டி உதைத்து, இருக்கிற கண்ணாடியையும் காலி ஆக்கி விடாமல் —தமிழகத்தில் முன்னேற்றம் காண வேண்டும் என்று பெரிய அளவில் கனவு கண்டு, இருப்பதும் இல்லாமல் போகும் சூழ்நிலை வராமல்





மேலும் பல முன்னேற்றுகின்ற திட்டங்கள் இதில் இருக்குமானால், அதை நாங்கள் வரவேற்போம். தமிழகத்தில் 28 மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவித்திருக்கிறார்கள் . . .

*பிற்பகல் 12-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்து விடுங்கள். அடுத்து திரு. கு. ஜெயக்குமார்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் உரையில் குறிப்பிடப்பட்டுள்ள, இந்த மாநிலத்தின் வளர்ச்சிக்காக நான் கண்ட கனவு என்று இருக்கிறதே தவிர, என் தனிப்பட்ட கனவு அல்ல. மக்களுக்காக, இதயசுத்தியோடு காணுகின்ற கனவு மக்கள் ஆதரவோடு நிச்சயமாக நினைவாகியே தீரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. ஜெயக்குமார்.

• **திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரை மீது நடக்கும் இந்த விவாதத்திலே பங்கெடுத்துக்கொள்ள நல்லதொரு வாய்ப்பினை எனக்கு அளித்துள்ள எங்கள் கட்சியின் சட்டமன்றத் தலைவர் மாண்புமிகு எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்" என்றும்,
"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்" என்றும்

பொய்யாமொழிப் புலவர், தமிழ்மறை ஆய்ந்த திருவள்ளுவர் அவர்கள் சொல்லிச் சென்றிருக்கிறார். அந்தக் குறள் வழி நின்று இன்றைக்கு இருக்கின்ற இந்த அரசு எத்தகையதொரு நல்ல காரியங்களை மக்களுக்காகச் செய்கின்றதோ, அதை பாராட்டக்கூடியவனாகவும், மக்கள் ஏற்காத எந்த நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்தாலும் அதை இந்த மாமன்றத்திலே எடுத்து வைத்து அந்த காரியங்களைச் செய்ய வேண்டாம்

[திரு. கு. ஜெயக்குமார்] [2003 ஜனவரி 28

என்று கேட்டுக்கொள்கின்ற ஒரு நிலையிலே நான் இங்கே இருக்கின்றேன். ஆளுநர் உரையிலே ஒருசில நல்லவற்றையும் சொல்லியிருக்கிறார்கள்; கடந்த ஆண்டு ஆளுநர் உரையில் சொன்ன பலவற்றை விட்டுவிட்டும் இருக்கிறார்கள்.

இந்த அரசு கந்து வட்டி முறையை ஒழிக்கப் போவதாகவும், கடனிலே தத்தளித்துக் கொண்டிருக்கிற மக்கள் காப்பாற்றப்படுவார்கள் என்றும் அறிவித்திருக்கிறார்கள். இது வரவேற்கத்தக்க ஒரு முறை என்று நான் கருதுகின்றேன். இது ஊரகப் பகுதியைச் சார்ந்தது. இதேபோல நகர்ப்புறங்களில்கூட மீட்டர் வட்டி என்ற முறை இருக்கிறது. அதில் மக்கள் மாட்டிக்கொண்டு தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த மீட்டர் வட்டி முறைக்கும் இந்த அரசு முடிவு கட்டினால் நலமாக இருக்கும் என்று நான் கருதுகின்றேன்.

தமிழகத்தில் 28 மாவட்டங்கள் வறட்சி மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ளதாக கூறியிருக்கிறீர்கள். இது நல்லதொரு முயற்சி. இதை சற்று முன்பாகச் செய்திருக்கலாம். எங்களைப் பொறுத்தவரையில் இது சற்று காலதாமதமாகச் செய்யப்பட்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நீங்கலாக 28 மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக இப்பொழுது அறிவித்து இருக்கிறோம் என்று சொன்னால், இது காலதாமதமாக எடுக்கப்பட்ட நடவடிக்கை அல்ல. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் North-East Monsoon வடகிழக்குப் பருவமழை மூலமாகத்தான் தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய பெரும் பகுதியான மழைநீர் நமக்குக் கிடைக்கிறது. அந்த வடகிழக்குப் பருவமழை எப்படி இருக்கும் என்று முன்கூட்டியே நாம் முடிவு செய்ய முடியாது. அண்மையில்தான் Meteorological Bureau வடகிழக்குப் பருவமழைக் காலம் முடிந்துவிட்டது; இனிமேல் மழையை எதிர்பார்க்க முடியாது என்று அதிகாரபூர்வமாக அறிவித்திருக்கிறது. அதன் பின்னால்தான் நிலைமையை ஆராய்ந்து தமிழகம் முழுவதும் வறட்சிப் பகுதியாக அறிவித்திருக்கிறோம்.

**திரு. கு. ஜெயக்குமார்:** மழை நீர் சேகரிப்பை தீவிரப்படுத்த திட்டங்களும், சட்டங்களும் இயற்றப்போவதாக அறிவித்திருக்கின்றீர்கள்: ஏரிகள் தூர் வாரப்படும் என்றும் சொல்லியிருக்கிறீர்கள். இவை நல்ல



2003 ஜனவரி 28] [திரு. கு. ஜெயக்குமார்]

நடவடிக்கை என்றே நான் கருதுகிறேன். சுற்றுலாத் துறையில் கேளிக்கை வரியைக் குறைப்பது ஒரு நல்ல நடவடிக்கை என்றே நான் கருதுகிறேன். இதை நிச்சயமாக அரசு செய்தால் இந்த அரசினுடைய வருமானத்தையும் கூட்டும் என்றே நான் கருதுகின்றேன். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்களுக்கு கல்விக் கடனை மானியமாக மாற்றவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கும், ஆதிதிராவிட மாணவர்களுக்கும் மாணவர் இல்லங்கள் கட்டிக்கொடுக்கப்படும் என்று அறிவித்திருப்பதும் வரவேற்கத்தக்க ஒன்றாகும். இதை ஆளுநர் உரையிலே அறிவித்திருக்கிறீர்கள். கடந்த ஆண்டு ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்ட பல திட்டங்கள் காணாமல் போய் இருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

கூட்டுறவு நிறுவனங்களுக்கான தேர்தல் விரைவிலே நடத்தப்பட வேண்டும். அதற்குரிய நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்று கடந்த முறை அறிவித்திருந்தீர்கள்.

*பிற்பகல் 12-30*

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் நீதிமன்றத்திலே கூட்டுறவுத் தேர்தலை நடத்துவதற்கு வழக்கு இருப்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியாது என்று நான் கருதுகிறேன். அந்த வழக்கு காரணமாக கூட்டுறவுத் தேர்தல் நடத்துவது தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

**திரு. கு. ஜெயக்குமார்:** அப்படி நீதிமன்றத்திலே அது தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது என்றால், விரைவிலே நீதிமன்றத்திலுள்ள தடையாணையை நீக்கி தேர்தலை நடத்துவதற்கு இந்த அரசு விரைவாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடுமையான நடவடிக்கையை, துரிதமான நடவடிக்கையை அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது.

**திரு. கு. ஜெயக்குமார்:** அடுத்து மாண்புமிகு முதல்வர் அவர்களின் 15 அம்சத் திட்டத்தினைப் பற்றி கடந்த ஆளுநர் உரையிலே விரிவாக எடுத்துரைத்திருக்கிறார்கள். குறிப்பாக . . . (குறுக்கீடு)

[2003 ஜனவரி 28

**திரு. துரைமுருகன்:** Point of order. இவர் பழைய விஷயங்களைப் பற்றிப் பேசுகிறார், சார். *(சிரிப்பு)*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு ஆளுநர் உரையின்போது, முதலமைச்சரின் 15 அம்சத் திட்டம் அறிவிக்கப்பட்டது. அது இப்போது—ஒரு on going programme—நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மீண்டும் இந்த ஆண்டு ஆளுநர் உரையிலே அதைப்பற்றிக் குறிப்பிடவேண்டுமென்று சொன்னால், அது உங்களுடைய உரையைப் போல்தான் இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, துரைமுருகன், பழையன பற்றிப் பேசுவது என்பது உங்களோடு பழக ஆரம்பித்த காரணத்தாலோ, என்னவோ தெரியவில்லை? *(சிரிப்பு)*

**திரு. கு. ஜெயக்குமார்:** நான் பேச ஆரம்பிப்பதற்கு முன்பாகவே, எந்தக் கருத்துகளை நான் இங்கே சொல்ல வருகிறேன் என்பதற்கு முன்பாகவே, இன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதிலளித்துக் கொண்டிருக்கிறார்கள். நான் முன்பு ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருப்பதைத்தான் குறிப்பிட்டேனேயொழிய, முன்பு ஆளுநர் உரையில் குறிப்பிட்டது முறை இல்லை என்றோ, அல்லது அரசு இதைத் தொடர்ந்து செயல்படுத்தாமல் இருக்கிறது என்றோ இன்னும் நான் குறிப்பிடவில்லை. எனவே I think the Hon'ble Chief Minister is trying to pre-empt the situation without realising what I am going to say.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, I am not trying to pre-empt the Hon'ble Member. அவர் தெளிவாகச் சொன்னார். கடந்த முறை ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்ட திட்டங்கள், இந்த முறை இந்த ஆளுநர் உரையில் இடம் பெறவில்லை என்று தெளிவாகச் சொன்னார்.

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய 15 அம்சக் கோரிக்கையிலே, உணவுப் பாதுகாப்பு என்று சொல்லி இருக்கின்றார்கள். இந்த உணவுப் பாதுகாப்பு யாருக்கு, எங்கே, எப்போது என்று இப்போது எனக்குத் தெரியவில்லை. ஏனென்றால், இது ஒரு on going process. தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது என்றே இப்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். இந்த அரசு எப்படி சிறப்பாகச் செயல்படக்கூடும் என்பதையும் நான் கடந்த



2003 ஜனவரி 28] [திரு. கு. ஜெயக்குமார்]

ஆண்டு நடந்த ஒரு நிகழ்ச்சியிலே கண்டேன். சென்னை மாநகரிலே கடந்த ஆண்டு, இதற்கு முன்பு கண்டிராத அளவிற்கு குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டபோது, எந்த அளவிற்கு நெய்வேலியிலிருந்து சரக்கு வண்டிகளின் மூலமாக நீரைக் கொண்டுவந்து, இந்த மாநகரிலே இருக்கின்ற மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்தார்கள், போர்க்கால அடிப்படையில் செயல்பட்டார்கள் என்பதை நான் அறிவேன். ஆனால் இன்றைக்கு தமிழகத்திலே, குறிப்பாக காவிரி டெல்டா பகுதியிலே ஏற்பட்டிருக்கிற இந்த வறட்சி நிலைக்கு — இந்த வறட்சி நிலை வரப் போகிறது என்பது நன்றாகத் தெரியும், திடீரென்று வந்துவிடவில்லை, இந்த வறட்சி நிலை. ஏற்கெனவே காவிரிப் பகுதிகளிலே காவிரி நீர் வரவில்லை — காவிரி நீர் வாராததால் அங்கே விவசாயிகள் சரியாக விவசாயம் செய்ய முடியவில்லை. விவசாயம் செய்யாததால் அங்கே பட்டினிச் சாவுகள் போன்றவை நடைமுறையிலே ஏற்படலாம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்றைக்கு பட்டினிச் சாவு ஏற்படவில்லை என்ற கருத்தை இங்கே அழுத்தமாகச் சொன்னாலும்கூட, இத்தகைய நிலைமைகள் ஏற்படலாம். இது ஒன்றும் புதிதல்ல. ஒரு அரசுக்கு நெருக்கடிகள் ஏற்படுவது இயற்கை. ஆட்சி நடத்துகின்றபோது, இதுபோன்று இயற்கை பொய்த்துவிடுவதும் இயற்கை. அதுபோன்ற நிலைமைகளிலே ஒரு நல்ல அரசானது, ஒரு திறமையான அரசானது, செயல்படுகின்ற ஒரு அரசானது, How efficiently it manages the crisis? How efficiently the crisis management has taken place?

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 31 ஆம் தேதியன்று எனது பதிலுரையை நான் இங்கே அளிக்கும்போது விரிவாகக் கூறுகின்றேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இப்போது சுருக்கமாக பதில் கூற விரும்புகின்றேன். இந்த அரசு அவ்வப்போது எழுகின்ற சூழ்நிலைகளைப் பொறுத்து, தக்க சமயத்தில் மக்களைக் காக்கின்ற நடவடிக்கைகளை எடுத்து வந்திருக்கிறது. ஜூன் மாதத்திலேயே டெல்டா பகுதி விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை உணர்ந்து, நானே தஞ்சாவூர் சென்று, டெல்டா மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தை நடத்தி அப்போதே டெல்டா மாவட்டங்களிலுள்ள விவசாயிகளுக்கும், நிலமற்ற ஏழையெளிய விவசாயத் தொழிலாளர்களுக்கும் நிவாரணம் வழங்குவதற்காக 164 கோடி ரூபாய் அளவிற்குத் திட்டத்தினை அப்போது நான் அறிவித்தேன். அப்போது food for work programme உட்பட பல திட்டங்களை அன்றையதினம் அறிவித்தேன். அதன்பிறகு மீண்டும் ஒரு முறை மாவட்ட ஆட்சித்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2003 ஜனவரி 28

எண்ணிக்கை 82,534. கடலூர் மாவட்டத்தில் பதிவு செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை 13,160; பயன்பெறுபவர்களின் எண்ணிக்கை 11,772. நாகப்பட்டினம் மாவட்டத்தில் பதிவு செய்துகொண்டவர்களின் எண்ணிக்கை 1,42,846; பயன் பெறுபவர்களின் எண்ணிக்கை 1,08,202. திருவாரூர் மாவட்டத்தில் பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை 1,44,238; பயன் பெறுபவர்களின் எண்ணிக்கை 1,08,145.

*பிற்பகல் 12-40*

தஞ்சாவூர் மாவட்டத்தில் பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை 84,238; பயன்பெறுபவர்களின் எண்ணிக்கை 55,359. புதுக்கோட்டை மாவட்டத்தில் பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை 15,443; பயன்பெறுபவர்களின் எண்ணிக்கை 10,566. பெரம்பலூர் மாவட்டத்தில் பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை 16,342; பயன்பெறுபவர்களின் எண்ணிக்கை 12,730. திருச்சி மாவட்டததில் பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை 29,553; பயன்பெறுபவர்களின் எண்ணிக்கை 24,951. கரூர் மாவட்டத்தில் பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை 53,580; பயன்பெறுபவர்களின் எண்ணிக்கை 35,853. திண்டுக்கல் மாவட்டத்தில் பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை 21,566; பயன்பெறுபவர்களின் எண்ணிக்கை 18,051. தேனி மாவட்டத்தில் பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை 38,175 பேர்; பயன்பெறுபவர்களின் எண்ணிக்கை 30,650 பேர். மதுரை மாவட்டத்தில் பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை 14,393 பேர்; பயன்பெற்றவர்களின் எண்ணிக்கை 12,785 பேர். இராமநாதபுரம் மாவட்டத்தில் பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை 2,380; பயன்பெறுபவர்களின் எண்ணிக்கை 2,198 பேர். சிவகங்கை மாவட்டத்தில் பதிவு செய்தவர்கள் 16,125 பேர்; பயன்பெற்றவர்களின் எண்ணிக்கை 14,943 பேர். விருதுநகர் மாவட்டத்தில் பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை 18,320 பேர்; பயன் பெறுபவர்களின் எண்ணிக்கை 13,692 பேர். தூத்துக்குடி மாவட்டத்தில் பதிவு செய்துகொண்டவர்கள் 6,248 பேர்; பயன்பெறுபவர்கள் 3,029 பேர்.

திருநெல்வேலி மாவட்டத்தில் 48,248 பேர் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். 36,439 பேர் பயன்பெற்று வருகிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் பதிவு செய்து கொண்டவர்கள் 10,675; பயன்பெற்றவர்கள் 7,415 பேர். தருமபுரி மாவட்டத்தில் பதிவு செய்து கொண்டவர்கள் 66,298 பேர்; பயன்பெறுபவர்கள் 62,462 பேர். சேலம் மாவட்டத்தில் பதிவு செய்து கொண்டவர்கள் 71,161 பேர், பயன்பெற்றவர்கள் 42,683 பேர். நாமக்கல் மாவட்டத்தில் பதிவு செய்து கொண்டவர்கள் 19,645 பேர்; பயன்பெற்றவர்கள் 18,089 பேர். ஈரோடு மாவட்டத்தில் பதிவு செய்து கொண்டவர்கள் 13,178 பேர்; பயன்பெற்றவர்கள் 12,295 பேர். கோயம்புத்தூர் மாவட்டத்தில் 19,607 பேர் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். 16,800 பேர் பயன்பெற்று வருகிறார்கள். நீலகிரி மாவட்டத்தில் பதிவு செய்து கொண்டவர்கள் 10,487 பேர்; பயன்பெறுபவர்கள் 3,089. ஆகமொத்தம் பதிவு செய்து கொண்டவர்கள் 11,33,573 பேர்; பயன்பெற்றவர்கள் 9,00,450 பேர். உங்களுக்குக் கேட்பதற்குப் பொறுமையிருந்தால், பஞ்சாயத்து வாரியாகவும் நான் புள்ளி விவரங்களைத் தரத் தயார்.



2003 ஜனவரி 28] [செல்வி ஜெ ஜெயலலிதா]

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எல்லா புள்ளிவிவரங்களும் தெரியும் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். இருப்பினும் நானும் ஒருசில புள்ளிவிவரங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு சமர்ப்பிக்க விரும்புகிறேன். இது என்னுடைய தொகுதியைப் பொறுத்த மாத்திரத்தில் - நாமக்கல்லிலேயிருக்கின்ற, நாமக்கல் வட்டாரத்தில் இருக்கின்ற அய்யம்பாளையத்தில் பதிவு செய்து கொண்டவர்கள் 2 பேர்தான். கோனூரிலே பதிவு செய்து கொண்டவர்கள் 9 பேர்தான். முதலைப்பட்டியிலே பதிவு செய்து கொண்டவர்கள் 5 பேர்தான். (மணியடிக்கப்பெற்றது)...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜெயக்குமார், இல்லை, இல்லை. இப்போது அதைப்பற்றியெல்லாம் ஒன்றுமில்லை. 5 நிமிடத்தில் பேசி முடியுங்கள். இன்னும் 7 பேர் பேச வேண்டும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய சட்டமன்றத் தொகுதி வளமிக்கத் தொகுதி. உப தொழில்கள் நிறைந்திருக்கின்ற தொகுதி. விவசாயத் தொழிலையொட்டிய தொழில்கள் மற்றும் லாரி தொழில் நிறைய இருக்கிறது. Unemployment is not an acute problem in his area. எனவே உப தொழில்கள் இருக்கின்ற காரணத்தினால் அந்தப் பகுதி மக்கள் வரவில்லை. இதுதான் உண்மை நிலை.

[2003 ஜனவரி 28

பிற்பகல் 12-45

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மாவட்டத்திலேயிருந்து வந்திருக்கின்றவர்தான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள். நாமக்கல்லைப்பற்றி அவர் சொன்னதை ஓரளவிற்கு நான் ஏற்றுக்கொண்டாலும், பக்கத்திலே இருக்கின்ற எருமைப்பட்டியையும் அவர் நன்கு அறிவார்கள். எருமைப்பட்டியின் வளம் எத்தகையது என்றும் அங்கே இருக்கின்ற மக்களுடைய வாழ்க்கைத் தரம் எத்தகையது என்றும் எந்த அளவுக்கு அங்கே ஏழை மக்கள் இருக்கின்றார்கள் என்பதையும் என்னுடைய மாவட்டத்தைச் சார்ந்த மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நன்றாக அறிவார்கள் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இலவச மதிய உணவுத் திட்டத்தின்கீழ் குறிப்பாக காவிரி டெல்டா மாவட்டங்களில் உணவு வேண்டும் என்று, இந்த சத்துணவு மையங்களுக்கு யார் வந்தாலும் அவர்களைப் பதிவு செய்துகொள்ளவேண்டுமென்று ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்திலுள்ள ஒட்டுமொத்தமான 71 ஆயிரம் சத்துணவு மையங்களில் தற்போது இந்தத் திட்டம் 22,280 சத்துணவு மையங்கள் மூலம் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. இதில் 4,672 மையங்களில் 50-க்கு மேற்பட்டும் 100-க்கு உட்பட்டும் பயனாளிகள் பயன்பெற்று வருகிறார்கள். 1,037 மையங்களில் 100-க்கு மேற்பட்டும் 500-க்கு உட்பட்டும் பயனாளிகள் பயன்பெற்று வருகிறார்கள். 30 மையங்களில் 500-க்கும் மேற்பட்ட பயனாளிகள் பயன்பெற்று வருகிறார்கள். ஆகவே சில மையங்களில் குறைவான நபர்கள் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். சில மையங்களில் அதிகமான பேர் பதிவு செய்து கொண்டு இருக்கிறார்கள் என்று சொன்னால் தேவைக்கு ஏற்ப அவர்கள் வருகிறார்கள். யார் வந்தாலும் உணவில்லை என்று அவர்களை திருப்பிவிடக்கூடாது என்று அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அடுத்ததாக, வாழ்வாதாரப் பாதுகாப்பு. வாழ்வாதாரப் பாதுகாப்பு என்பது அனைவருக்கும் வேலைவாய்ப்பு அளிக்கவேண்டுமென்பதாகும். நான் இந்த மாமன்றத்திலே பேசுகின்றபோது, இந்த அரசு ஒரு நல்ல தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தை அறிவித்தது என்றேன். தரிசு நில



2003 ஜனவரி 28] [திரு. கு. ஜெயக்குமார்]

மேம்பாட்டுத் திட்டம் என்ற ஒன்றை அறிவித்து அதன்மூலம் எந்த அளவுக்கு நாட்டின் பொருளாதாரம் வளரும் என்பதையும் தெளிவாகவே எடுத்துச் சொன்னார்கள். அதன்மீது நான் பேசுகின்றபோது இந்த அவையிலே குறிப்பிட்டேன். 20 இலட்சம் எக்டேர் நிலத்தை நீங்கள் பயன்படுத்தப்போகிறீர்கள். அதில் 10 இலட்சம் எக்டேர் நிலத்தை நிலமற்ற ஏழை விவசாயிகளுக்குக் கொடுத்தீர்களென்றால், ஒரு எக்டேர் ஒரு குடும்பத்திற்கு என்று கொடுத்தால் வேலை வாய்ப்புப் பிரச்சினை குறைக்கப்படும். குறைந்தது ஒரு எக்டேர் நிலத்திலே 3 பேருக்கு வருடம் முழுவதும் வேலை கிடைக்கும் என்ற அளவிற்கு இருக்கும். இவ்வாறு செய்வதன் மூலம் 10 இலட்சம் பேருக்கு நீங்கள் நிலத்தைக் கொடுத்தீர்கள் என்ற நற்பெயர் இந்த அரசுக்கு ஏற்படும். அதோடு 30 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் என்று நான் இந்த அவையிலே மிக அழுத்தமாகவே இந்தக் கருத்தை எடுத்துச் சொன்னேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடத்திலே முடியுங்கள். (குறுக்கீடு) ஒரு மணித் துளியிலே முடியுங்கள். இன்னும் 7 பேர் பேச வேண்டும். (குறுக்கீடு) 7 பேர் பேச வேண்டும்.

**திரு. கு. ஜெயக்குமார்:** ஆகவே இந்தத் திட்டத்தை இந்த அரசு சற்று மாற்றியமைத்து ஒருவருக்கு ஒரு எக்டேர் நிலம் என்று கொடுத்தால் வேலைவாய்ப்பும் பெருகும். அதே நேரத்திலே . . (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இந்தத் திட்டத்தைப்பற்றி சரியாகப் புரிந்துகொள்ளாமல் பேசுகிறார் என்று கருதுகிறேன். தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் என்று சொன்னால், தரிசாக விடப்பட்ட நிலங்களை சாகுபடியின்கீழ் கொண்டு வருவதாகும்; பயனுள்ள நிலங்களாக மாற்றுவதாகும். இந்த நிலங்கள் ஏன் தரிசு நிலங்களாக விடப்பட்டுள்ளன? அவற்றிற்குத் தேவையான முதலீடுகளைப் போடும் சக்தி அந்த நிலத்தின் உரிமையாளர்களுக்கு இல்லாததால்தான் பெரும்பாலும் தரிசு நிலங்களாக விடப்பட்டுள்ளன. ஆகவே பெரிய Corporate Houses என்று மட்டுமல்லாமல் சுய உதவிக் குழுக்கள்கூட இந்த நிலங்களை குத்தகைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று அறிவித்து இருக்கிறோம்: ஆகவே ஏழையெளிய மக்கள், கிராமப்புறங்களில் வசிப்பவர்கள், விவசாயிகள்கூட ஒன்று சேர்ந்து சுய உதவிக் குழுக்களை அமைத்து அவர்களும் இந்தத் தரிசு நிலங்களை எடுத்துக்கொள்ள



184533

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதுபோல, இந்த நிலத்தை இலவசமாக, தானமாகக் கொடுத்தால் அதற்கான முதலீட்டை யார் போடுவது? அரசிடம் எந்த நிதியும் இல்லை. அதற்கு Inputs வேண்டும், Agricultural inputs வேண்டும். அந்தத் தரிசு நிலத்தில் போதுமான நீர்வளங்கள் இல்லாததால்தான் தரிசு நிலங்களாக விடப்பட்டு இருக்கின்றன. அதற்கான செலவுகள் செய்யவேண்டும். அதற்கு யார் செலவு செய்வது? Agricultural inputs-க்கு யார் செலவு செய்வது? அதற்கெல்லாம் அரசு செலவு செய்ய முடியாது. ஆகவே அரசைப் பொறுத்தவரையில் நிலத்தைக் கொடுக்கத் தயாராக இருக்கிறது. அதை யார் குத்தகைக்கு எடுத்துக்கொள்கிறார்களோ அவர்கள்தான் செலவு செய்து அந்த நிலத்தை மேம்படுத்த வேண்டும். ஆகவே செலவு செய்கின்ற சக்தியுள்ளவர்கள் வந்து இந்த நிலங்களை குத்தகைக்கு எடுத்துக்கொண்டால்தான் இந்தத் திட்டத்தின் நோக்கம் நிறைவேறும் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-50*

**திரு. கு. ஜெயக்குமார்:** அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நன்றாகவே இந்தக் கருத்துகளை எடுத்துச் சொன்னார்கள். இன்றைக்கு நான் இந்த மாமன்றத்திலே சொல்கிறேன். ஒரு எக்டேர் நிலத்தை நீங்கள் கொடுங்கள். மத்திய அரசானது இந்த நிலங்களை மேம்படுத்துவதற்காக பணம் கொடுக்கிற திட்டத்தை வைத்திருக்கிறது. அந்தத் திட்டத்தின்படி, மத்திய அரசானது 25 சதவிகிதத்தை மானியமாகவும், 25 சதவிகிதத்தை அந்த மக்கள் தருகின்ற உழைப்பின் மூலமாகவும் - பணமாக அல்ல - உழைப்பின் மூலமாகக் கொடுத்தால், மீதி 50 சதவிகிதத்தை வங்கியிடமிருந்து கடனாகப் பெற முடியும். மத்திய அரசு Waste Land Development திட்டம் மூலமாக இந்தத் திட்டத்தைச் செயலாக்கிக் கொண்டிருக்கிறது. எனவே மீண்டும் நான் இந்த அவையிலே அழுத்தமாகச் சொல்வது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குச் சமர்ப்பித்துக்கொள்வது, 10 இலட்சம் நில உரிமையாளர்களை நீங்கள் ஏற்படுத்துங்கள். நிலத்தை நீங்கள் ஒதுக்கிக் கொடுங்கள். மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்கள்கூட — செய்தித் தாளில் படித்தேன் — இந்த நிலங்கள் எல்லாம் புறம்போக்கு நிலங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தப் புறம்போக்கு நிலத்தை . . .





**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் புறம்போக்கு நிலம் என்பது, மிகவும் குறைவான நிலப் பரப்பு உடையது. பெரும்பாலான நிலங்கள், இவற்றில் தனியாருடைய பட்டா நிலங்கள்தான். அவர்களுக்கு வசதி இல்லாததால்தான், தரிசு நிலங்களாக விட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர், மத்திய அரசு Waste Land Development-க்காக நிதி கொடுக்கிறது என்று சொல்கிறார். அதை நாங்களும் அறிவோம். அந்த நிதியைப் பெற்று பயன்படுத்திக்கொள்ளத்தான் போகிறோம். பயன்படுத்திக்கொண்டுதான் வருகிறோம். ஆனால் 20 இலட்சம் எக்டேர் நிலங்களை develop செய்வதற்கு மத்திய அரசு நிதி கொடுக்கும் என்று எதிர்பார்ப்பது தவறான ஒன்று. அந்த அளவுக்கு நிதி மத்திய அரசிடமிருந்து கிடைக்காது. தனியார் துறையின் முதலீடு இருந்தால்தான் இந்தத் திட்டம் வெற்றியடையும் என்பதை மீண்டும் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார், முடித்துவிடுங்கள்.

**திரு. கு. ஜெயக்குமார்:** அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையிலே ஒன்றைக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். 2010 ஆம் ஆண்டுக்குள்ளாக, தமிழ்நாட்டிலே வறுமைக் கோட்டிற்குக் கீழாக யாரும் இருக்க மாட்டார்கள் என்றும், 8 சதவிகிதம் வளர்ச்சியை எய்தப் போவதாகவும் சொல்லியிருக்கிறார்கள். நல்லதொரு முயற்சி; வரவேற்கிறேன். ஆனால் இது எந்த அளவுக்குச் சாத்தியமாகும் என்பதை தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்றைக்கு தென்னிந்தியாவிலே இருக்கிற அனைத்து மாநிலங்களிலும், தமிழகத்தில்தான் அதிகமான மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழாக இருக்கிறார்கள். குறைவாக கேரளத்திலும், தமிழகத்திலே அதிகமாகவும் இருக்கிற இந்த ஒரு சூழ்நிலையிலே, சுமார் 130 இலட்சம் மக்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. கு. ஜெயக்குமார்:** வறுமைக்கோட்டிற்கு மேலாக அவர்களை எடுத்துச் செல்லவேண்டும். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்கூட ஒத்துக்கொள்வார்கள். கடந்த இரண்டு ஆண்டுகளாக, நம்முடைய தமிழகத்திலே பொருளாதார வளர்ச்சியானது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடித்துவிடுங்கள்.

[2003 ஜனவரி 28

**திரு. கு. ஜெயக்குமார்:** 4 சதவிகிதத்தில் இருக்கிறது என்றும், குறிப்பாக, Primary sector -ல negative registration, negative growth-ஐ, நாம் அடைந்து கொண்டிருக்கிறோம் என்பதைக் கூறி, ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லி நான் விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள். திரு. சிவசாமி, (குறுக்கீடு) போதும், போதும், (குறுக்கீடு)

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைமீது நடைபெறுகிற இந்த விவாதத்தில் பங்குகொண்டு பேசுகின்ற வாய்ப்பை எனக்கு (குறுக்கீடு) உருவாக்கிக் கொடுத்த எங்களின் இதய தெய்வம், இந்திய மக்களின் நம்பிக்கை நட்சத்திரம், மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின்....... (குறுக்கீடு)

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் உறுப்பினருக்கு ஒரு கருத்தை மட்டும் சொல்ல விடுங்கள்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்:** ஒரே ஒரு நிமிடம் அவருக்குக் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, திரு. ஜெயக்குமார்.

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, கடந்த முறை இந்த அவையில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் உரையாற்றுகிறபோது, இதற்கு முன்பாக S.C.P.,T.S.P என்ற நிதி தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களுக்குச் சரியாக ஒதுக்கப்படவில்லை என்றும், அதை இந்த அரசு செய்யும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். என்னுடைய புள்ளிவிவரப்படி சொல்கிறேன். இன்றைக்குக்கூட மத்திய அரசிடமிருந்து வந்திருக்கிற சுமார் 50 கோடி ரூபாய், தாழ்த்தப்பட்ட மக்களுக்காக வந்திருக்கிற பணத்தை இன்னும் P.D.Account-லே வைத்துக்கொண்டு, தாட்கோ போன்ற நிறுவனங்கள் மூலம் அங்கே நாம் கடன் கொடுக்க முடியாமல், வருகின்ற பயனாளிகளைத் திருப்பி அனுப்புகின்ற ஓர் அவலமான நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த S.C.P., T.S.P. Fund-ஐ தயவுசெய்து நீங்கள் S.C./S.T. மக்களுக்குச் சரியான முறையிலே ஒதுக்கவேண்டும். இதுநாள் வரையில் அது ஒதுக்கப்படாமல் இருக்கிறது. தாழ்த்தப்பட்ட



2003 ஜனவரி 28] [திரு. கு. ஜெயக்குமார்]

பழங்குடி மக்கள் இதனால் புறக்கணிக்கப்பட்டு இருக்கிறார்கள். இதை தயவுசெய்து இந்த அரசு கருத்தில் கொண்டு, வருகிற காலங்களிலாவது அவர்களுக்கு வேண்டிய இந்தப் பங்கைக் கொடுத்துவிடுங்கள்.(குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பழங்குடி மக்களுக்கும், தாட்கோ மூலம் எத்தனை மனுக்கள் பெறப்படுகின்றனவோ, அத்தனைக்கும் நடவடிக்கை எடுத்து, தகுதியின் அடிப்படையில் அவர்களுக்கு, அந்தத் தொழிலுக்கு நிதி தரப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவசாமி, ஆரம்பியுங்கள்.

***திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின்மீது நடைபெறுகிற இந்த விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகின்ற ஒரு வாய்ப்பை எனக்கு உருவாக்கிக் கொடுத்த, எங்களின் இதயதெய்வம், இந்திய மக்களின் நம்பிக்கை நட்சத்திரம், மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

பிற்பகல் *12-55*

மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையில், மாண்புமிகு அம்மா அவர்கள், தமிழக மக்கள் அனைவருக்கும் நல்வாய்ப்புகளையும், மேம்பட்ட வாழ்க்கைத் தரத்தையும், ஏராளமான வளங்களையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்ற இலட்சியம் தெளிவாகத் தெரிகிறது. அதை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக தொலைநோக்குப் பார்வையோடு பல்வேறு துறைகளிலும் விழிப்புணர்வை ஏற்படுத்தி, பல்வேறு செயல் திட்டங்களை உருவாக்கி, தமிழகத்தை இந்தியாவிலேயே முதல் மாநிலமாக உருவாக்க வேண்டும் என்ற முயற்சிக்கு அடித்தளம் அமைத்து இருப்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது.

ஆளுநர் உரையில் எண்ணற்ற அம்சங்கள்—போற்றப்பட வேண்டிய விஷயங்கள் போற்றப்பட வேண்டிய விதத்திலும், வரவேற்கப்பட வேண்டியவை வரவேற்கப்பட வேண்டிய விதத்திலும், பாராட்டப்பட வேண்டியவை பாராட்டப்பட வேண்டிய விதத்திலும் இருக்கின்றன. அப்படி இருந்தாலும்கூட இன்றைக்கு இந்த விவாதத்தைத் தொடங்குகின்றபோது, இங்கே இருக்கின்ற எதிர்க்கட்சி நண்பர்கள் வெளிநடப்புச் செய்தார்கள். என்ன காரணம் என்று கேட்கின்றபோது, தமிழில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் உரையாற்றவில்லை என்று கூறி வெளிநடப்புச் செய்தார்கள். நான் கேட்டுக்கொள்கிறேன், இங்கே எதிர்க்கட்சியிலே இருக்கின்ற உறுப்பினர்கள் எல்லாம் தமிழ் மீது இவ்வளவு பற்று வைத்து இருக்கிறீர்களே உங்களைப் பார்த்துக் கேட்கிறேன்; உங்களுடைய வாரிசுகள், உங்களுடைய மகன்கள், உங்களுடைய மகள்கள் எத்தனை பேர் English Convent-ல் படித்துக் கொண்டிருக்கிறார்கள்? நீங்கள் எல்லாம் தமிழ் பள்ளிக்கூடங்களிலேயா உங்கள் குழந்தைகளை படிக்க வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? நீங்கள் எல்லாம் தமிழுக்காக குரல் கொடுக்கிறீர்கள் என்றால், உங்கள் குழந்தைகள் எல்லாம் English Convent-ல் படித்துக் கொண்டிருக்கிறதே, இது எதைக் காட்டுகிறது என்று நான் உங்களைக் கேட்க விரும்புகிறேன்.

இன்றைக்கு தமிழகத்தினுடைய ஒப்பற்றத் தலைவியாக விளங்குகின்ற மாண்புமிகு அம்மா அவர்கள், ஏழைக் குழந்தைகள் கல்வி அறிவு பெற வேண்டும், தமிழ்க் கல்வி வளர்ச்சி பெறவேண்டும் என்பதற்காக, எஸ்.எஸ்.ஐ. திட்டத்தின் மூலம் 756 தொடக்கப் பள்ளிகளை உருவாக்கி இருக்கின்றார்கள். அதேபோல 676 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்தி இருக்கின்றார்கள். எனது திருப்பூர் தொகுதியில்கூட 27 புதிய தொடக்கப் பள்ளிகளும், 23 நடுநிலைப் பள்ளிகளும் தொடங்கப்பட்டு இருக்கின்றன. இது எதைக் காட்டுகிறது? தமிழ் மொழி மீது எங்களுக்கு அக்கறை இல்லை என்பதையா காட்டுகிறது?

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி பேசும்போது குறிப்பிட்டார்கள். கைத்தறி நெசவாளர்களுக்காக அவர் நீலிக் கண்ணீர் வடித்தார். கைத்தறி நெசவாளர்களுடைய உண்மை நிலை என்ன என்பது தெரியுமா? கடந்த கால தி.மு.க. ஆட்சியில் சுமார் 400 கோடி ரூபாய் மதிப்புள்ள பட்டு மற்றும் பருத்தித் துணிகள்





தேங்கிக் கிடந்தன. அதற்குப் பிறகு ஆட்சிப் பொறுப்புக்கு வந்த மாண்புமிகு அம்மா அவர்கள், புதிய பல்வேறு திட்டங்களை அறிவித்ததன் மூலம் சுமார் 80 கோடி ரூபாய் மதிப்புள்ள, தேங்கிக் கிடந்த துணிகள் எல்லாம் விற்கப்பட்டு, இன்றைக்கு தமிழகத்தில் எங்கு நோக்கினும், கல்லூரி மாணவிகள் முதல் கடைக்கோடியிலே இருக்கின்ற தாய்மார்கள் வரை அனைவரும் கைத்தறி சேலையைக் கேட்டு வாங்கி உடுத்துகின்ற அளவுக்கு, ஓர் உயர்ந்த நிலையை உருவாக்கி இருக்கின்றார்கள் என்றால், கைத்தறி நெசவாளர்களுக்காக இந்த அரசு எந்த அளவுக்கு பாடுபட்டுக் கொண்டிருக்கிறது என்பதை, மரியாதைக்குரிய உறுப்பினர் பொன்முடி அவர்களுக்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த ஆளுநர் உரையில் 35-வது பக்கத்தில் குறிப்பிட்டு இருப்பது அவருக்குத் தெரியவில்லையா என்பதை நான் வினவ விரும்புகிறேன்.

அதேபோல நெசவாளர்களுக்காக, கைத்தறி நெசவாளர்கள் சங்கங்களினுடைய நிலைமையை சீரமைக்க வேண்டும் என்பதற்காக 30 கோடி ரூபாயை வாரி வழங்கி, கைத்தறி நெசவாளர்களுடைய குடும்பங்களில் ஒளி விளக்கு ஏற்றி இருப்பவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதோடுமட்டுமல்ல, நெசவாளர்கள் சிரமப்பட்ட காலங்களில் மாதத்திற்கு 20 கிலோ அரிசி என்று 3 மாதங்களுக்குத் தொடர்ந்து வழங்கியது இந்த அரசு அல்லவா? நெசவாளர்களுடைய உண்மையான அரசு இது என்பதை நான் உங்கள் மத்தியிலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு கந்து வட்டி என்பது ஏழை எளிய மக்களைக் கடுமையாக உறிஞ்சக்கூடிய, கடுமையான விஷமாக இருந்த காரணத்தினால், அந்த கந்து வட்டியை ஒழிப்பதற்கு முயற்சி எடுத்து இருக்கின்றார்கள். லாட்டரிச் சீட்டுகள் விற்பனையைத் தடை செய்து இருக்கிறார்கள். இப்படி பல்வேறு சட்டங்களை ஏழை எளிய மக்களுக்காக இன்றைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அறிவித்திருப்பதை மக்கள் பாராட்டி நன்றி தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ESMA சட்டத்தைப் பற்றி உறுப்பினர் பொன்முடி அவர்கள் இங்கே பேசினார்கள். இந்த கண்ணியமிக்க மன்றத்திலே நான் கேட்டுக்கொள்வதெல்லாம், தமிழகத்திலே வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய மக்களில் 2 சதவீத அரசு அலுவலர்களுக்காக தமிழகத்தின் ஒட்டுமொத்த வருமானத்தில் 96 சதவீதத்தை

அவர்களுக்காக பயன்படுத்திக் கொண்டால், மீதி இருக்கக்கூடிய 98 சதவீத சமுதாய மக்களுடைய வாழ்க்கை என்பது கேள்விக்குறி ஆகிவிடாதா? அவர்களைப் பாதுகாக்க வேண்டியது இந்த அரசின் கடமை அல்லவா? இந்த 2 சதவீத மக்களுக்காக மட்டும் நாம் பாதுகாப்பு கொடுத்தால் போதுமா? எனவே மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள், இந்த அரசைத் தேர்ந்தெடுத்த அனைத்துப் பகுதி மக்களுக்கும் சேவை செய்ய வேண்டியது, ஒரு மக்கள் அரசின் கடமை என்று தெரிந்து கொண்டு அதற்காக தக்க நடவடிக்கைகளை எடுத்தார்கள். இன்றைக்கு அந்த 2 சதவீத மக்களுடைய வாக்குகளுக்காக, அவர்களுக்காக பரிதவித்து அரசியல் நடத்தலாம் என்று நினைத்திருந்த எதிர்க் கட்சியினர் ஏமாந்து போயினர். இதுதானே உண்மையான நிலைமை.

*பிற்பகல் 1-00*

இப்போது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு கடுமையான நிதி நெருக்கடியிலே தள்ளாடிக் கொண்டிருக்கிறது என்றால், கடந்த காலத்திலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே நடைபெற்ற நிர்வாகச் சீர்கேடுதான் காரணம் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பார்கள். அவர்கள் பாலங்கள் கட்டியதிலே, பல்வேறு பாலங்களினுடைய பணிகளை ஒப்பிட்டுப் பார்த்தால், ஒவ்வொரு பாலத்தினுடைய அந்த மதிப்பீட்டை பிரித்துப் பார்த்தால் ஒரு ரன்னிங் மீட்டருக்கு ரூ.96 ஆயிரம். இன்னொரு பாலத்திற்கு போய் பார்த்தால் ரூ.1-1/2 இலட்சம். இன்னொரு பாலத்திற்கு ஒப்பிட்டுப் பார்த்தால் ரூ.1-3/4 இலட்சம். இன்னொரு பாலத்திற்குப் பார்த்தால் 2 இலட்சம் ரூபாய். உதாரணத்திற்கு ஒருசிலவற்றை மட்டும் நான் இப்போது சொல்ல விரும்புகிறேன். திருச்சி மாவட்டம். திருச்சி மாவட்டத்திலே கோப்புமேளப்பட்டி என்ற இடத்தில் 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு பாலம் கட்டப்படுகிறது. அந்தப் பாலத்தினுடைய அகலம் 7-1/2 மீட்டர்; உயரம் 4-1/2 மீட்டர். அதற்கு ரன்னிங் மீட்டருக்கு எஸ்டிமேட் ரூ.96 ஆயிரம். ஆனால் புள்ளம்பாடி விடுதலைபுரம் என்கிற இடத்தில் கட்டப்பட்ட பாலத்தினுடைய எஸ்டிமேட் ரூ.21 இலட்சத்து 30 ஆயிரம்; அதே 7-1/2 மீட்டர் அகலம், 3 மீட்டர் உயரம்; அதைவிட உயரம் குறைவு. ஆனால் இதற்கு மதிப்பீடு என்ன வந்திருக்கிறது என்றால், ஒரு ரன்னிங் மீட்டருக்கு ரூ.2 இலட்சத்து 8 ஆயிரம். 96 ஆயிரம் ரூபாயில் ஒரு





பாலத்தைக் கட்டுகிறீர்கள். இன்னொரு பாலத்திற்கு மதிப்பீடு 2 இலட்சத்து 8 ஆயிரம் ரூபாய் என்றால் 100 சதவிகிதம் மிகைப்படுத்தப்பட்ட மதிப்பீடாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்படி பல்வேறு பாலங்கள் கட்டியதில் மிகைப்படுத்தப்பட்ட மதிப்பீடுகள் இருக்கின்றன. கடந்த 5 ஆண்டு கால தி.மு.க. ஆட்சியில் பாலங்கள் கட்டியதை தனிப்பட்ட முறையில் நாம் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது எத்தனை கோடி ரூபாய் இந்த அரசாங்கத்திற்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை கட்டாயமாக தனிப்பட்ட முறையிலே ஒரு கமிஷனை அமைத்து விசாரிக்க வேண்டுமென்று இந்த மன்றத்தின் வாயிலாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே வணிக வரியைப் பற்றி உறுப்பினர் பொன்முடி அவர்கள் பேசுகிறபோது சொன்னார்கள் ஒருமுனை வரி, பலமுனை வரி என்று. திருப்பூர் பனியன் தொழில் நகரம். அந்தப் பின்னலாடைத் தொழிலுக்கு 1 சதவிகிதம் வரி இருந்தது. கடந்த தி.மு.க ஆட்சியில் என்ன செய்தார்கள் தெரியுமா? ஒரு சதவிகித வரியை எடுக்கிறோம் என்று சொல்லிவிட்டு சமச்சீர் வரிக் கொள்கையிலே 4 சதவிகித வரியைப் போட்டுவிட்டு நாங்கள் 1 சதவிகித வரியை எடுத்து விட்டோம் என்று சொல்லி காலி பண்ணி விட்டார்கள். கொஞ்சநாள் கழிந்தபிறகு சமச்சீர் வரியை அமல்படுத்துகிறபோது, automatic-ஆக 4 சதவிகித வரி வந்திருக்கிறது. ஆக மறைமுகமாக 4 சதவிகித வரியைப் போட்டுவிட்டு—ஒரு சதவிகித வரியை எடுத்து—பனியன் தொழில் அதிபர்களுக்கும், பனியன் தொழிலாளர்களுக்கும் பாதகம் செய்தவர்கள்தான் நீங்கள். இன்றைக்கு ஒருமுனை வரியைப் பற்றிப் பலமுனை வரியைப் பற்றிப் பேசுவதற்கு உங்களுக்கு எல்லாம் எந்தவிதமான நியாயமும் கிடையாது என்பதை நான் இங்கே ஆணித்தரமாக சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. சி. சிவசாமி:** நான் பேசி முடித்ததற்குப் பிறகு நீங்கள் பேசுங்கள், உட்காருங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவர்களுக்கு எப்போது பார்த்தாலும் வெளிநடப்புதான். என்னப்பா வெளிநடப்பு என்று கேட்டால், ஏன் வெளிநடப்பு என்று கேட்டால்...

**திரு. ஜி. பழனிசாமி:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பழனிசாமி, ஒரு நட்பு ரீதியில்தான் அவர் சொல்கிறார். வேறு ஒன்றும் இல்லை.

**திரு. ஜி. பழனிசாமி:** நாங்களும்தான் சட்டமன்றத்தில் உரையாற்றினோம். அப்போதிருந்த அரசு அதை நீக்கியது. இப்போது மறைமுகமாக 4 சதவிகித வரியை அரசு விதித்திருப்பதாகச் சொல்கிறார்கள். அந்த 4 சதவிகித வரியையும் நீக்கிவிட்டு அந்த பின்னலாடைத், தொழிலுக்கு ஊக்கம் அளிப்பதற்கு, உயிரோட்டமாக நடப்பதற்கு நீங்கள் தயாராக இருக்கிறீர்களா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

**திரு. சி. சிவசாமி:** 1 சதவிகிதம் வரிக்கு விதிவிலக்கு கொடுத்து மாண்புமிகு அம்மா அவர்கள், அந்த பனியனுக்கு, உற்பத்தி செய்கின்ற நூலுக்கு உண்டான வரியை இரத்து செய்திருக்கிறார்கள் என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இருக்கக்கூடிய எதிர்க்கட்சி நண்பர்கள் எல்லாம் எதற்காக வெளிநடப்புச் செய்கிறார்கள் தெரியுமா? இங்கே இந்த அவையில் நடக்கக்கூடிய நிகழ்ச்சி, இந்த ஆட்சியின் சாதனைகள் எல்லாம் அடுத்த நாள் காலையிலே செய்தித்தாளிலே வருகிறபோது இவர்களால் தாங்கிக்கொள்ள முடியாது. அதை ஏற்றுக்கொள்ள முடியாது, எங்கே தங்களை இந்த மக்கள் மறந்துவிடுவார்களோ என்று வெளிநடப்பு என்கிற ஒரு முயற்சியின் மூலமாக, அடுத்தநாள் எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு என்ற தலைப்புச் செய்திக்காக ஏங்கி, ஏங்கித்தான் இவர்கள் நித்தம் நித்தம் வெளிநடப்புச் செய்து கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் இவர்களுக்குத் தெரியாது, நாளைய தலைப்புச் செய்தி ஒரு கடைசிச் செய்தி என்று. ஏனென்றால் நள்ளிரவு 11 மணிக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் என்ன கருத்தை இந்த நாட்டிற்குத் தெரிவிக்கிறார்கள் என்று தொலைக்காட்சியின் வாயிலாக செய்தியை மக்கள் பார்த்து விடுவதால் அந்த தலைப்புச் செய்திகூட பழைய செய்தியாகி விட்ட உண்மை இவர்களுக்குத் தெரியவில்லைத் தெரியவில்லை.

இங்கே வெளிநடப்புச் செய்வதற்கு காரணத்தைக் கூறினார்கள். என்ன காரணம்? காவிரி நீர்ப் பிரச்சினை. நிவாரணம் வேண்டுமென்று பல்வேறு பிரச்சினைகளை இங்கே முன்வைத்து





வெளிநடப்புச் செய்தார்கள். நான் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், ஒரே ஒரு கருத்துதான். இப்போது ஒருவருக்கு Bus ஓட்டுவதற்கு ஓர் உரிமை கொடுக்கிறோம். அந்த Bus-க்கு பெர்மிட் வழங்குகிறோம். இன்றைக்கு Bus உரிமையாளருக்கு உரிமை கொடுக்கிறோம் என்றால், 5 வருடத்திற்கு பெர்மிட் கொடுக்கிறோம். 5 வருடங்கள் முடிந்த பிறகு அதை புதுப்பித்துக் கொள்ள வேண்டும். ஒரு தொழில் செய்வதற்கு ஆர்.சி. வழங்குகிறோம். ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர் ஆர்.சி.யை புதுப்பித்துக் கொள்ள வேண்டும். தியேட்டர் ஓட்டுவதற்கு உரிமையாளருக்கு அனுமதி கொடுக்கிறோம். 5 வருடம் கழித்து அதைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டும். அதைப்போலத்தான் காவிரி நீர் ஒப்பந்தம் என்பதும். 1924 ஆம் ஆண்டு தமிழக அரசுக்கும், கர்நாடக அரசுக்கும் இருக்கக்கூடிய நீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகவே ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம். இது 1974 வரை செயல் திறனாக இருக்கும் என்பது அதனுடைய ஷரத்து. அன்றைய முன்னாள் முதல்வர் கருணாநிதி அவர்கள் என்ன சொல்கிறார்? 1968-ல், 26-8-1968 அன்று சட்டப் பேரவையில் பேசுகிறபோது, அவர், இந்த ஒப்பந்தம் 1974 ஆம் ஆண்டு வரை செயல்திறன் உள்ளது என்று பேசுகிறார். இதற்குமேல் செயல்திறன் இல்லை என்பதை அவரே ஒப்புக் கொள்கிறார். அதற்குப் பிறகு என்ன செய்கிறார் என்றால் 4-8-1971-ல் சுப்ரீம் கோர்ட்டில் ஒரு case போடுகிறார். அதற்குப் பிறகு என்ன செய்கிறார்? 7-7-1972-ல் அந்த case-ஐ வாபஸ் வாங்கிக் கொள்கிறார். அப்போது அதற்கு என்ன அர்த்தம்?

1974ஆம் வருடத்துடன் அந்த ஒப்பந்தம் காலாவதியாகிவிட்டது என்று இவரே ஒப்புக்கொள்கிறார். சாதாரண ஒரு Bus-சினுடைய உரிமையாளர் தனது Bus-க்கு கிடைத்த பெர்மிட்டுக்குக் கூட 5 வருடத்திற்கு ஒரு முறை புதுப்பித்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தோடு அவர்கள் இருக்கிறபோது (மேசையைத் தட்டும் ஒலி) 50 வருடம் கழித்து இதை மறு பரிசீலனை செய்து புதுப்பித்துக்கொள்ள வேண்டும் என்கிற எண்ணம் அன்றைய முதல்வருக்கு வந்து இருந்தால் இன்றைக்குக் கூக்குரலிடுகிறீர்களே நீங்கள், அது தேவையா? இந்த வெளிநடப்பு எல்லாம் தேவையா? சாதாரண Bus உரிமையாளருக்கு இருக்கக்கூடிய ஓர் அனுபவம்கூட ஒரு நாட்டினுடைய முன்னாள் முதலமைச்சருக்குத் தெரியாதபோது - நீங்கள் வெளிநடப்புச் செய்கிறீர்கள் என்றால் இன்றைக்கு (குறுக்கீடு) காவிரி நிலைமைக்கு முன்னாள் முதல்வர்

கருணாநிதிதான் காரணம் என்று கூறுகிறேன். (குறுக்கீடு) நான் சொல்வது என்னவென்றால் இன்றைய....

*பிற்பகல் 1-05*

**திரு. துரைமுருகன்:** பேரவையில் செய்தியைச் சொல்கிறபோது முதலில் இங்கே வெளி நடப்புச் செய்தது, காவிரி நீருக்கு வெளிநடப்புச் செய்தது என்று சொன்னார். அதுவே தப்பு. அதை விட்டுவிடுங்கள். இரண்டாவது 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம் 1974-ல் முடிவடைந்துவிட்டது என்று சொன்னது திராவிட முன்னேற்றக் கழகம் அல்ல** இந்த விவகாரம் பெரிய விவகாரம். மாண்புமிகு உறுப்பினருக்கு விவரம் அவ்வளவு போதாது. அதனாலே இதிலே குழப்ப வேண்டாம். மற்ற பகுதிகளில் பேசச் சொல்லுங்கள். முதலமைச்சர் உட்கார்ந்து இருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மன்னிக்க வேண்டுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள், அவர்களுடைய இயக்கத்தினுடைய தலைவருடைய செயலை நியாயப்படுத்தும் முறையில் தொடர்ந்து அவையிலே பேசிக்கொண்டு இருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. துரைமுருகன் அவர்கள் சொன்னது, ** மாதிரி சொல்லக்கூடாது. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நீங்கள் சொன்னது அது பெரிய விவகாரம் ** பொதுப் பிரச்சினை. எனவே அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

(திரு. எ.வ. வேலு, டாக்டர் க. பொன்முடி எழுந்து நிற்கிறார்கள்) (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தப் பிரச்சினையைப் பேசாதீர்கள். (குறுக்கீடு) அந்தப் பிரச்சினையைப் பேசாதீர்கள் என்று சொன்னேன். மறுபடியும் இந்தப் பிரச்சினைக்கு உள்ளே போனால், பதில் சொல்ல வேண்டிய நிலைமை வரும் அவர்களுக்கு.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.





**திரு. துரைமுருகன்:** ஏற்கெனவே இந்த அவையில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பேசி, நாங்கள் பேசி, முதலமைச்சரும் பேசி இந்தப் பிரச்சினை முடிந்துபோன ஒன்று. ஆனால் மீண்டும் இந்தப் பிரச்சினையை அவர்கள் எடுத்துப் பேசிய காரணத்தினால்தான் நான் பதில் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பதில் சொல்ல வேண்டியது இருக்கட்டும்.

**திரு. துரைமுருகன்:** நீங்கள் அதைச் சொல்கிறபோது முன்னாள் முதல்வர் கலைஞருக்கே இதுபற்றித் தெரியாது. அவரால் செய்த தவறு என்று சொல்கிறபோது, இல்லை இதிலே யார் நிலை தடுமாறி இருக்கிறார்கள் என்று சொல்வது எங்கள் கடமை. நான் இந்தப் பிரச்சினையை இன்னும் சொல்லப் போனால், காவிரிப் பிரச்சினையைப் பற்றி அல்லது Inter -State மற்ற மாநிலங்களோடு இருக்கிற பிரச்சினை பற்றி கூடுமான வரையில், இந்த அவையில் நீ யோக்கியனா, நான் யோக்கியனா என்று பேசி மாற்றானுக்கு இடம் கொடுக்கக் கூடாது என்பதை ஆயிரம் முறை நான் இந்த அவையில் சொல்லியிருக்கிறேன். ஆனால் அதே முறையைத் திருப்பி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது நாங்கள் திருப்பிச் சொல்ல வேண்டிய ஒரு கட்டாயத்திற்கு ஆட்படுகிறோம் என்பதை மட்டும் தங்களின் மேலான கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் சொன்ன அந்தப் பகுதி மட்டும் நீக்கப்படுகிறது என்று சொன்னேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர், அவர்களுடைய இயக்கத்தினுடைய தலைவர் திரு. கருணாநிதி அவர்களோ காவிரியில் இருந்து இன்று தண்ணீர் வரவில்லை. பஞ்சம் ஏற்பட்டுவிட்டது. அதற்கு அ.தி.மு.க. ஆட்சிதான் காரணம் என்று பத்திரிகையிலே எழுதுவது, பொது மேடைகளில் பேசுவது, அவையிலே கூறுவது, உண்மைக்கு மாறான ஒன்று என்பதற்கும் (குறுக்கீடு) நான் பேசி முடித்துவிடுகிறேன் (குறுக்கீடு) இல்லை, இல்லை, நான் பேசி முடித்துவிடுகிறேன்.

[2003 ஜனவரி 28

*பிற்பகல் 1-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அவர் சொல்லி முடித்து விடட்டும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நான் சொல்லி முடித்து விடுகிறேன்.

**THIRU DURAIMURUGAN:** He is giving wrong information.

**HON' THIRU C. PONNAIYAN:** No. No. (Interruption) Let me conclude. (interruption) Let me conclude. (Interruption) No.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதியமைச்சர் பேசி முடித்து விடட்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, தற்போது சொல்லியிருக்கிறார். பட்டினி என நீங்கள் கூறுவது...... (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், அவர் சொல்லி முடித்து விடட்டும்.

**திரு. துரைமுருகன்:** சி.ஆர்.ஏ.-வை விட்டு வெளியே வந்தபோது நாங்கள் பாராட்டினோம். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** அதை நான் கூறவில்லை. (குறுக்கீடு) அதை நான் சொல்லவில்லை. (குறுக்கீடு) No. I am not referring to that issue at all. (interruption) No. I am not referring to that issue.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், அவர் சொல்லி முடித்து விடட்டும், அவை முன்னவர் சொல்லி முடித்து விடட்டும்.

**திரு. துரைமுருகன்:** அதற்குப் பதில் சொல்லி முடித்துவிட்டு..

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நான் அதைச் சொல்லவில்லை. (குறுக்கீடு) என்னுடைய பேச்சை கவனமாகக் கேட்கும்படி கேட்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) இல்லை, இல்லை. திரு. துரைமுருகன் அவர்களே, நான் அதைச் சொல்லவில்லை. (குறுக்கீடு) I am not telling that.



2003 ஜனவரி 28] [திரு. சி. பொன்னையன்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பட்டினிச் சாவு என்றும், தமிழகத்தினுடைய பஞ்சத்திற்குக் காவிரிப் பிரச்சினைதான் காரணம் என்றும், இதிலே தமிழக அரசு மேற்கொண்டிருக்கிற முறை சரியில்லை என்றுதான் நேற்று வெளிநடப்புச் செய்தபோது பேராசிரியர் அவர்கள் மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். அதை நான் சுட்டிக்காட்டுகின்றேன். ஆனால் 1968 ஆம் ஆண்டு, ஆகஸ்டு 24-ல் இதே சட்டப் பேரவையில், உங்களது தலைவர் கூறிய கூற்று பதிவாகி இருக்கிறது. இது சட்டப் பேரவையிலே உள்ள ஏடு. இதிலே என்ன சொல்லியிருக்கிறார்? ஹேமாவதி நீர்த்தேக்கத் திட்டம் குறித்த பேச்சுவார்த்தைகள். மாண்புமிகு திரு. மு. கருணாநிதி, அவர் சொல்கிறார், 'தமிழகத்தினுடைய தலையாய பாசன ஆதாரம் காவிரி. 1924 ஆம் ஆண்டு மைசூருக்கும், தமிழகத்திற்கும் காவிரிப் பாசனம் சம்பந்தமான ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. அது சம்பந்தப்பட்ட சில முக்கியக் கூறுகள் மேட்டூர் நீர்த் தேக்கத் திட்டத்தை நிறைவேற்றவும், தமிழகத்திற்கு நிலையாக உரிய நீரை கணக்கிடவும் வேண்டும். அவ்வாறு கணக்கிடப்பட்ட அளவு நீரை காவிரி ஆற்றின் வழி விடுத்த பின்னரே, மைசூர் அரசு கிருஷ்ணராஜ சாகரில் நீரைத் தேக்கலாம்.' ஆனால், அவர் கூறுகிறார் இறுதியிலே, இந்த ஒப்பந்தம் 1974-வது ஆண்டு வரை செயல்திறன் உடையதாக இருக்கும்.'

What does it mean? This agreement will be having life and validity only upto 1974. என்று தெளிவாக சட்டப் பேரவையிலே கூறி, அதன் மூலமாக 1974-லே காவிரி ஒப்பந்தம் முடிந்து விட்டது என்பதை அவையிலே கூறியிருக்கிறார். இதைப் படித்துப் பாருங்கள். (குறுக்கீடு) இதைப் படித்துப் பாருங்கள். இப்படி அவர் (குறுக்கீடு) நான் பேசி முடித்து விடுகிறேன். Let me conclude. (interruption) இல்லை, பேசி முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்து விடட்டும். (குறுக்கீடு) துரைமுருகன், அவர் பேசி முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** 1974-லே இந்த ஒப்பந்தம் முடிந்து விட்டது என்று சொல்லி, நீதிமன்றம் சென்றால் வெற்றி பெறமுடியாது, ஒப்பந்தம் முடிந்துவிட்டது, சட்ட ரீதியாக நாம் ஜெயிக்க

முடியாது என்று தப்புக் கணக்குப் போட்டுத்தான், 1968-லிருந்து 2001 ஆட்சியிலே இருந்தவரை தமிழகத்தை பேச்சுவார்த்தை, பேச்சுவார்த்தை என்று சொல்லி, திரு. கருணாநிதி ஏமாற்றிய காரணத்தால், உச்ச நீதிமன்றம் செல்லாத காரணத்தால், உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கைக்கூடத் திரும்பப் பெற்ற காரணத்தால், பேச்சுவார்த்தையினுடைய இறுதிப் பலன் என்ன? 3½ இலட்சம் ஏக்கராக 1924-லே விவசாயம் செய்து கொண்டிருந்த கர்நாடக மாநிலத்தில், தற்போது 18 இலட்சம் ஏக்கருக்கு அவர்கள் நமக்குரிய தண்ணீரைத் திருப்பி அங்கு பயிர் செய்கிறார்கள். நமது உழவர்கள் வறட்சியால் வாடுகிறார்கள். பாதிப்பில் துடிக்கிறார்கள். இதற்குக் காரணம் திரு. கருணாநிதி அன்று எடுத்த முடிவு. 1968-லே காவிரி ஒப்பந்தம் செல்லாது என்று கர்நாடக அரசு சொல்கிறது. அதிலே திரு. கருணாநிதி என்ன சொன்னார், கர்நாடகத்திற்கு வக்கீலாக வாதாடினார். கர்நாடக அரசுக்கு வாதாடினார். அந்த கர்நாடக விவசாய மக்களுக்கு அவர் வாதாடி, அவர் தமிழக விவசாய மக்களுக்குத் துரோகம் செய்த காரணத்தால்தான் இன்று காவிரிப் பிரச்சினை; தமிழகத்தில் பஞ்சம், தமிழகத்தில் பட்டினி என்று நீங்கள் கூறுவதற்கு உங்கள் தலைவரின் அன்றைய செயல்தான் காரணம். இதைத்தான் சட்டப் பேரவை உறுப்பினர் சொல்கிறார்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தேவையில்லாத ஒரு பிரச்சினையை இங்கே கிளப்பி இருக்கிறார். (குறுக்கீடு) நீர் பேசும்போது நான் பேசாமல் இருக்கவில்லையா! (குறுக்கீடுகள்) நீங்கள் பேசினீர்களே, என்ன அர்த்தம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன்...

**திரு. துரைமுருகன்:** மன்னிக்க வேண்டும் பேரவைத் தலைவர் அவர்களே, நான் உங்களைச் சொல்லவில்லை. தேவையில்லாத பிரச்சினையைக் கிளப்பி (குறுக்கீடு) திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் சட்டசபைக் குறிப்பேட்டிலே இருக்கிற ஒரு செய்தியைச் சொல்கிறார். (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** நான் ஒரே ஒரு கேள்வி கேட்கிறேன். (குறுக்கீடு)





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசுகிறார் அல்லவா? (குறுக்கீடு) துரைமுருகன்தான் பேசுகிறாரே, கட்சியை விட்டு அவரை விலக்கி விட்டீர்களா?

**திரு. துரைமுருகன்:** 1924 ஆம் ஆண்டு போடப்பட்ட ஒப்பந்தம் 1974 ஆம் ஆண்டில் மீண்டும் மறுபரிசீலனை செய்து, சில ஷரத்துக்களை அதிலே மாற்றியமைத்துக் கொள்ளுங்கள் என்று வழி வகுக்கிறது. நீரை எப்படி பங்கிட்டுக்கொள்வது, உபரி நீரை எப்படி பங்கிட்டுக் கொள்வது என்று. வருகிற தண்ணீரை, அதாவது கிருஷ்ணராஜசாகரில் எவ்வளவு விட்டு, எவ்வளவு தேக்க வேண்டுமென்று விதிகள் இருக்கின்றன. இந்த விதிகளின்படி உபரி நீரை எப்படி மறுபடியும் பங்கிட்டுக் கொள்வது என்பதற்கு ஷரத்துக்கள் இருக்கின்றன என்பதைத்தான் அன்றைக்கு அவர் எடுத்துச் சொல்லியிருக்கிறாரே தவிர, 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம், 1974 ஆம் ஆண்டோடு முடிந்து விட்டது என்று கலைஞர் எங்குமே சொல்லவில்லை. (குறுக்கீடு) மன்னிக்கவும், ஒரே ஒரு விஷயம். ஆனால் நீங்கள் இதை அனுமதிக்கிறீர்கள். இந்தச் சபையில்....

பிற்பகல் 1-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், நான் என்ன சொல்கிறேன் என்றால், சட்டசபையில்....

**திரு. துரைமுருகன்:** என்னைப் பேச விடுங்கள் சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் இருங்கள். நான் சொல்லிவிடுகிறேன். சட்டசபைக் குறிப்பேட்டிலிருந்து முன்னாள் முதல்வர் பேசியதை அவர் வாசித்துக் காண்பித்தார். நீங்கள் அதற்கு விளக்கம் சொல்வதில் எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. அவர் இந்தக் கருத்தைத்தான் சொல்வார் என்று நீங்கள் பதில் சொல்லுங்கள்; அதில் எனக்கு ஒன்றும் இல்லை.

**திரு. துரைமுருகன்:** அவர் இருப்பதை வாசித்திருக்கிறார். அதுபோன்றுதான் நான் இதே அவையில், அவைக் குறிப்பில் இருப்பதைத்தான் நான் சொன்னேன். என்ன சொன்னேன், திராவிட முன்னேற்றக் கழகமோ, கலைஞரோ எந்த இடத்திலும் 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம், 1974 ஆம் ஆண்டோடு முடிந்துவிட்டது என்று சொல்லவில்லை. ஆனால் **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2003 ஜனவரி 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், இது பொதுப் பிரச்சினை. (குறுக்கீடு) இல்லை, நான் என்ன சொல்கிறேன் என்றால், சட்டசபைக் குறிப்பில் உள்ளதை மாண்புமிகு அவை முன்னவர் வாசித்தார். நீங்களும் அதுபோல ஓர் ஆவணத்தைக் கொண்டு வந்து என்னிடத்திலே காட்டி ஒப்புதல் வாங்கிக் கொண்டு, நீங்கள் வாசிப்பதில் எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. ஒட்டுமொத்தமாக ஒரு பொதுப் பிரச்சினையில் அதுவும் நீங்கள் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தவர், நீங்கள் இந்த அடி அடிப்பது சரியல்ல. அது முறையல்ல. கடைசியாக நீங்கள் சொன்ன அந்த வாக்கியம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அவர் சொன்னதற்கான விளக்கத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். அந்த விளக்கத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். (குறுக்கீடு) முன்னாள் முதல்வர் சொல்வது அந்தப் பொருளில் அல்ல, வேறு பொருளில் சொன்னார் என்று சொன்ன விளக்கத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதற்குத் திருப்பி தாக்க வேண்டுமென்பதற்காக இப்படி ** என்று பொத்தாம் பொதுவாகச் சொல்கிற அந்தக் கருத்து அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) அது நீக்கப்படுகின்றது. நீக்கப்படுகிறது. திரு. சிவசாமி பேசுங்கள்.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு அம்மா அவர்கள் சுப்ரீம் கோர்ட்டுக்குச் சென்றார்கள், வென்றார்கள், தண்ணீரைப் பெற்றார்கள். இன்று காவிரி மக்களுக்காக அயராது பாடுபட்டுக் கொண்டு இருக்கிறார்கள். நாட்டிலே கன்னம் இடுகிறவர்கள் சிலர் உள்ளனர். ஆனால் மாண்புமிகு அம்மா அவர்கள் ஏழை எளிய விவசாயிகளுக்கு அன்னம் இடுகிறார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவசாமி, கொஞ்சம் இருங்கள். திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றையதினம் அப்படி ஒரு மனு கொடுக்கப்பட்டது உண்மை. சட்டப் பேரவையிலே அதுகுறித்து அன்றைய முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் எழுப்பி, நான் அதை defence செய்ய முயற்சித்தேன். அதிலிருந்த முதல் வாக்கியமே, ஆங்கிலத்தில் இருந்தது. பிழையுள்ள வாக்கியமாக இருந்தது. அவசர கோலத்தில், யாரோ எழுதியிருந்தார்கள். **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



2003 ஜனவரி 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி., நான் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டேன். நீங்கள் அதற்கு இப்போது விளக்கம் சொல்ல வேண்டிய அவசியமில்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதுதான் பிரச்சினையே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீக்கப்பட்டுவிட்டது. திரு. சிவசாமி, பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** கருணாநிதி துரோகம் செய்துவிட்டார் என்று சொல்லியதை நீக்கவேண்டுமா, வேண்டாமா?

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டிலே கன்னம் இடுகிறவர்கள் சிலர் உள்ளனர். ஆனால் அம்மா அவர்கள் ஏழை விவசாயிகளுக்கு அன்னமிட்டுக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) தமிழகத்தில் இருக்கக்கூடிய விவசாயிகளுக்காக மாண்புமிகு அம்மா அவர்கள் 21 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தீபாவளிப் பரிசை வழங்கியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தங்களுடைய இருக்கைகளை விட்டு முன் வரிசைக்கு வந்து பேசிக் கொண்டிருந்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் இடத்தை விட்டு வந்து தகராறு செய்வது முறையல்ல. முதலில் அவரவர்கள் இடத்திற்குச் செல்லுங்கள்.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரில் கடந்த காலத்தில். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் இடத்திற்கு முதலில் செல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரில் ஒரு முறை 1,300 கோடி தந்த வள்ளலின் வாரிசே வருக வருக என்று வரவேற்பு தட்டி கட்டி வைத்தார்கள். தட்டி வைத்ததோடு சரி, அந்த 1,300 கோடி ரூபாயும்...

*பிற்பகல் 1-20*

*(திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் எழுந்து நின்றுகொண்டு கோஷமிட்டுக்கொண்டிருந்தனர்.)*

[2003 ஜனவரி 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவசாமி, பேசி முடியுங்கள்.

**திரு. சி. சிவசாமி:** 1974-லே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள், பேசுங்கள்.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரிலே 1974-லே...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் 1989 ஆம் ஆண்டு அன்றைய பிரதமரிடத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொடுத்த மகஜரைப் பற்றி இங்கே பேசிக்கொண்டிருக்கிறார். இப்போது அதுவல்ல பிரச்சினை. 1974 ஆம் ஆண்டில் கர்நாடகத்திற்கும் தமிழகத்திற்கும் இடையே புதுப்பிக்கப்படவேண்டிய ஒப்பந்தம் (குறுக்கீடு) அன்றையதினம் முதலமைச்சராக இருந்தவர் திரு. கருணாநிதி. 1974க்குள்ளேயே அந்த ஒப்பந்தத்தை ஏன் புதுப்பிக்கவில்லை என்பதுதான் இங்கே கேள்வி. இதற்குப் பதில் சொல்லுங்கள். அதைவிட்டுவிட்டு 15 ஆண்டுகள் கழித்து 1989-லே அதி.மு.க. எம்பிக்கள் அன்றைய பிரதமரிடம் மகஜர் கொடுத்தார்கள் என்று, 15 ஆண்டுகள் கழித்து நடந்த ஒன்றைப் பற்றி இங்கே பேசுவதில் அர்த்தம் இல்லை. (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1974 ஆம் ஆண்டு ஏன் புதுப்பிக்கப்படவில்லை என்று முதலமைச்சர் கேட்கிறார்கள். புதுப்பிப்பதற்காகத்தான் பல கட்டங்களில் பேச்சுவார்த்தை நடத்தி, (குறுக்கீடு) அதிலே பேச்சுவார்த்தை நடத்தி (குறுக்கீடு) அதிலே முடியாத காரணத்தால்தான் இறுதியிலே இந்த மன்றத்தில் ஒரு தீர்மானம்...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், துரைமுருகன், உங்களுடைய உறுப்பினர்கள் அவர்களுடைய இடத்திற்குப் போனதற்குப் பிறகு நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) உறுப்பினர்கள் அவர்களுடைய இடத்திற்குப் போனதற்குப் பிறகு நீங்கள் பேசுங்கள். அதுவரைக்கும் நீங்கள் பேசுவது முடியாது. உறுப்பினர்கள் அவர்களுடைய இடத்திற்குப் போங்கள். உங்கள் தலைவர் பேசுகிறார். உங்கள் தலைவர் பேசுவதை நான் ஏற்றுக்கொள்கிறேன். உங்கள் இடத்திற்குப் போங்கள் முதலிலே. (குறுக்கீடு) துரைமுருகன், உங்களுடைய உறுப்பினர்களை



2003 ஜனவரி 28] [பேரவைத் தலைவர்]

அவரவர்களுடைய இடத்திற்குப் போகச் சொல்லிவிட்டு நீங்கள் பேசுங்கள்.

**திரு. துரைமுருகன்:** சபாநாயகர் அவர்களுக்கு ஒரு பணிவான வேண்டுகோள். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, திரு. துரைமுருகன், இது என்ன கட்டைப் பஞ்சாயத்தா? (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். முதலில் நீங்கள் இடத்திற்குப் போங்கள். தி.மு.க. உறுப்பினர்கள் அவரவர்களுடைய இடத்திற்குப் போனதற்குப் பிறகுதான் உங்களை நான் பேசுவதற்கு அனுமதிக்க முடியும் என்பதைப் பணிவோடு, கனிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு) திரு. சிவசாமி, பேசி முடியுங்கள்.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. கருணாநிதி ஆட்சியில் திருப்பூர் நகரில் 1,300 கோடி தந்த வள்ளலே, வருக வருக என்று தட்டி கட்டி வைத்தார்கள். (குறுக்கீடு) அடுத்த நிலை என்னவென்றால், 1,300 கோடி ரூபாய் எங்கு சென்றது என்று தெரியவில்லை. ஆனால், வருவதாக இருந்த அந்தத் திட்டமும் என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. (குறுக்கீடு) வருவதாக இருந்த அந்தத் திட்டமும் என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** மன்னிக்கவும், சபாநாயகர் அவர்களே, இதை எடுக்காமல் நாங்கள் இருக்கைக்குப் போக மாட்டோம்.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் திருப்பூர் நகருக்கு வருகை தந்து 686 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மூன்றாவது கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். திரு. துரைமுருகன் அவர்களே...(குறுக்கீடு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** அமைதியாக இருங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளும் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் இங்கே எழுப்பிய கேள்வியைப் பொறுத்து நான் இப்போது ஒரு கேள்வியை எழுப்புகிறேன். 1974 ஆம் ஆண்டில்...(குறுக்கீடு)

[2003 ஜனவரி 28

**THIRU DURAIMURUGAN:** We do not want any discussion.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லி முடித்துவிடட்டும்.

**HON. SELVI J JAYALALITHAA:** (குறுக்கீடு) Discussion இல்லை. (குறுக்கீடு) Discussion. இல்லை. (குறுக்கீடு) இந்த மாதிரி நீங்கள் பொறுமை இழந்து சத்தம் போடக்கூடாது. It is not a discussion. I am asking a question. (குறுக்கீடு) இல்லை, இல்லை.

46. I am confident that under the strong and dynamic leadership of the Hon'ble Chief Minister, this Government would succeed in securing the very best for the people of Tamil Nadu. (Thumbing of desks) I convey my best wishes to all of you in the service of the people of this State.

Vanakkam.



2003 ஜனவரி 28]

**மதிப்பிற்குரிய சட்டப் பேரவை உறுப்பினர்களே,**

*2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டப் பேரவையின் முதல் கூட்டத் தொடரில் உங்களிடையே உரையாற்றுவதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். உங்கள் அனைவருக்கும் என் உளம்கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அனைவருக்கும் நல்வாய்ப்புகளையும் மேம்பட்ட வாழ்க்கைத் தரத்தையும் அளவற்ற வளங்கள் அனைத்தும் வாய்க்கப்பெறும் தனது உன்னத இலட்சியத்தை நோக்கி இந்த 2003 ஆம் ஆண்டில் தமிழ்நாடு வீறுநடைபோடும் என்று நான் உறுதிபட நம்புகிறேன்.*

*2. அண்மையில் நிறைவுற்ற ஆண்டு பல கொந்தளிப்பான சம்பவங்கள் நம் நாட்டில் நடந்துள்ளதைக் கண்டது. மும்பை மற்றும் ஹைதராபாத் வரை பரவியதோடல்லாமல் கோயம்புத்தூரிலும் எதிரொலித்த பயங்கரவாதத்திற்கு பாகிஸ்தான் அளித்துவரும் தொடர் ஆதரவினால், 2002 ஆம் ஆண்டில், இந்தியா, பாகிஸ்தானுடன் கிட்டத்தட்ட போரிட வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டது. பயங்கரவாதம் வளர்த்துவிடும் வன்முறையின் கோரம், தற்போதைய உண்மை நிலையை உணர்த்துவது மட்டுமின்றி அனைத்து மாநிலங்களிடையேயும் பரந்தோடியுள்ளது. இத்தகைய அச்சுறுத்தலை எதிர்த்து சமாளிக்க மாநில அரசுகளின் ஒருங்கிணைந்த அணுகுமுறையும், அனைவருடைய நிலையான விழிப்புணர்வுகளும் அவசியமாகின்றன. பகைவர்களின் தாக்குதல்களிலிருந்தும் உள்நாட்டுக் கிளர்ச்சிகளிலிருந்தும் நாட்டைக் காப்பாற்ற தங்களின் இன்னுயிரை ஈந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த பாதுகாப்புப் படைவீரர்களின் குடும்பங்களுக்கு மாநில அரசின் உதவியையும், ஆதரவையும் அளிக்க இந்த அரசு நிலையான உறுதிபூண்டுள்ளது. இத்தகைய உன்னதப் பணிக்காகத் தங்களின் உயிரை அர்ப்பணித்தவர்களுக்கு நாம் வீரவணக்கம் செலுத்துகிறோம்.*

*3. பயங்கரவாதம் மற்றும் தீவிரவாதத்தின் கொடி நிழல், தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கையை அண்டவிடக்கூடாது என்று இந்த அரசு உறுதியுடன் தீர்மானித்துள்ளது. நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தின்மூலம், பயங்கரவாத தடுப்பு* (POTA) *சட்டத்தை இயற்றுவதில் இந்த அரசு மத்திய அரசுக்குத் தன்னுடைய முழு ஆதரவை அளித்தது. தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் அமைப்பு* (LTTE) *மீதான தடை, தொடர்ந்து நீட்டிக்கப்பட்டுள்ளது. தமிழ் தேசிய மீட்புப் படை* (TNRT) *மற்றும் தமிழ்நாடு விடுதலைப்படை* (TNLA)

ஆகிய அமைப்புகள், இந்த அரசினால் 1908 ஆம் ஆண்டு குற்றவியல் திருத்தச் சட்டத்தின் கீழும், அதைத் தொடர்ந்து மத்திய அரசினால், 2002 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட பயங்கரவாத தடுப்புச் (POTA) சட்டத்தின் கீழும் தடைசெய்யப்பட்டுள்ளன. நாட்டின் இறையாண்மையையும் ஒருமைப்பாட்டையும் பாதுகாக்க, மத்திய அரசு எடுக்கக்கூடிய அனைத்து நடவடிக்கைகளுக்கும், இந்த அரசு தன்னுடைய முழு ஆதரவைத் தொடர்ந்து அளிக்கும்.

4. 2002 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில், சட்டம் ஒழுங்கு திறமையாகப் பராமரிக்கப்பட்டு வந்துள்ளது என்பதை நான் மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன். சிறுபான்மையினரின் சமய விழாக்கள் உள்பட அனைத்து சமய விழாக்களும் அமைதியான முறையில் நடைபெற்றன. பல ஆண்டுகளுக்குப் பிறகு, சிவகங்கை மாவட்டத்தில், கண்டதேவி தேர்த் திருவிழா வெற்றிகரமாக நடத்தப்பட்டது என்பது இந்த அரசு நிலைமையை எவ்வாறு திறமையாகக் கையாண்டுள்ளது என்பதற்கு ஒரு சான்றாகும். தருமபுரி மற்றும் வேலூர் மாவட்டங்கள், 1970 மற்றும் 1980 ஆம் ஆண்டுகளில் நக்சலைட்டுகளின் தீவிர நடவடிக்கைகளுக்குட்பட்ட இடமாக இருந்தன. இந்த அரசு, தனது முந்தைய ஆட்சிக் காலத்தில், அதாவது, 1991-1996 ஆம் ஆண்டுகளில் எடுத்த திடமான, கடுமையான நடவடிக்கைகளினால்தான் மாநிலத்தின் இப் பின்தங்கிய பகுதிகளில் அமைதி மீண்டும் திரும்பியது. 1999ஆம் ஆண்டில், ஆட்சிப் பொறுப்பில் இருந்த அரசு, இக்கண்காணிப்புப் பணியில் காட்டிய தொய்வின் காரணமாக, இப்பிரச்சினை மீண்டும் தலைதூக்கியது. தருமபுரி மாவட்டத்தில், ஒரு ரகசிய இடத்தில் நக்ஸலைட்டு கும்பல் கூடியபோது, சேதம் எதனையும் அந்தக் கும்பல் விளைவிப்பதற்கு முன் அந்தக் கும்பலை இந்த அரசு செயலிழக்கச் செய்தது. இத்தகைய கும்பல்கள் மாவட்டத்தில் நிலவிவரும் சமூகப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைச் சாதகமாக்கிக் கொண்டு குழப்பங்களை விளைவிப்பதைக் கருத்தில் கொண்டு, முன்னெச்சரிக்கையுடன்கூடிய தயார் நிலையைத் தொடர்ந்து பேணுவதோடு, இத்தகைய ஏற்றத்தாழ்வுகளைச் சீரமைக்கும் வகையில் தருமபுரி மாவட்டத்திற்கான ஒட்டுமொத்த வளர்ச்சித் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு வருகிறது. ஊரகப் பகுதிகளில் பரவலாக நடைமுறையில் உள்ள கந்துவட்டி முறையை ஒழிக்க புதிய சட்டத்தைக் கொண்டு வருவதற்கான இந்த அரசின் முடிவை முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே தெரிவித்துள்ளார்கள். சமூக அளவில் நிலவும் பதட்டத்தைத் தீர்க்க





இது பெரிதும் உதவும். உரிய நேரத்தில் தடுப்பு நடவடிக்கை எடுத்ததன் மூலம், கோயம்புத்தூரில் தவறாக வழிநடத்தப்பட்ட மதவெறியர்களின் வகுப்புவாத மோதல் முயற்சிகள் தகர்க்கப்பட்டன. தீவிரவாதம், பிரிவினைவாதம், மற்றும் சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள்மீது கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும் என்ற தனது தீர்மானத்தை இந்த அரசு மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

5. காவல் துறையை நவீனமயமாக்குவது, சட்டம்-ஒழுங்கை திறமையாகப் பராமரிப்பதற்கு இன்றியமையாத தேவையாகும். இவ்வரசு, இரண்டாண்டுகளில், ரூபாய் 272 கோடி செலவில் காவல் படையை நவீனமயமாக்குவதற்கான திட்டம் ஒன்றைச் செயல்படுத்தி வருகிறது. ஒப்பற்றதும், முன்னெப்போதும் இருந்திராத புதிய நடவடிக்கையாக காவல் துறையினரின் குறைகளைத் தீர்ப்பதற்காக, தமிழ்நாடு காவல் துறை அதிகாரிகள், காவலர்கள் மற்றும் பிற பதவித் தரங்களைச் சார்ந்தவர்களுடன் முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஐந்து நாட்களில் ஐந்து விரிவான கூட்டங்களை நடத்தினார்கள். காவல்படையின் மனஉறுதியைப் பேணுவதில் உள்ள சிக்கல்களை நான் நன்கு அறிந்துள்ளதால், நாட்டில் இதற்குமுன் எந்தவொரு முதலமைச்சரும் எடுத்திராத, மனஉறுதியூட்டும் இந்த நடவடிக்கையை மேற்கொண்டதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் பாராட்ட விழைகிறேன். தமிழ்நாட்டில் முதன் முறையாக அனைத்து மகளிர் காவல் படை ஒன்றை உருவாக்க அரசு திட்டமிட்டுள்ளது. இது வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு முன்னோடித் திட்டமாகும். பயங்கரவாதத்தை எதிர்கொள்வதற்காக, அனைத்து மகளிர் அதிரடிப் படைப்பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு காவல் துறை, நாட்டிலேயே சட்டத்தை நிலைநாட்டுவதில் மிக ஆயத்தப்படுத்தப்பட்ட உரிய பயிற்சி பெற்ற அமைப்பாகத் திகழ அனைத்து மகளிர் காவல் நிலையங்களை வலுப்படுத்துதல், காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புதல் மற்றும் நவீன ஆயுதங்கள், வாகனங்கள் மற்றும் தளவாடங்கள் வழங்குதல் ஆகியவற்றில் சிறப்பு கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

6. இவ்வரசு கருநாடக அரசின் முன்னாள் அமைச்சரான திரு. ஹெச். நாகப்பா அவர்கள், சந்தனமரக் கடத்தல் வீரப்பனால் கொடுமையான முறையில படுகொலை செய்யப்பட்டதைக் கண்டிக்கிறது. அவருடைய பிரிவால் வாடுகின்ற அன்னாரின்

[2003 ஜனவரி 28

குடும்பத்தினருக்கு தமிழ்நாடு அரசு மற்றும் தமிழ்நாட்டு மக்களின் ஆழ்ந்த வருத்தத்தை நான் தெரிவிக்க விழைகிறேன். வீரப்பனைப் பிடிப்பதற்காக, இரு மாநிலங்களின் சிறப்பு பணிப் படையினரும், விரைவான மற்றும் தொடர் முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிந்துரைத்தார்கள். ஆனால் திரு. நாகப்பா கடத்தப்பட்டதையடுத்து, கருநாடக அரசு, அனைத்து தேடுதல் பணிகளையும் காலவரையறையின்றி நிறுத்திவைத்தது. தமிழ்நாட்டின் சிறப்புப் பணிப்படையின் அனைத்து தேடுதல் நடவடிக்கைகளையும் நிறுத்திவைக்குமாறும் கருநாடக வனப் பகுதியிலிருந்து அவற்றைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுமாறும் கருநாடக அரசு, தமிழ்நாடு சிறப்புப் பணிப்படையை அதிகாரபூர்வமாகக் கேட்டுக்கொண்டது. இவையனைத்தும் பயனளிக்கவில்லை என்பது திரு. நாகப்பா கொலையுண்டதிலிருந்து தெரியவருகிறது. சந்தனமரக் கடத்தல் வீரப்பனின் கொடுமையான நடவடிக்கைகளுக்கு விரைவில் முடிவுகட்டப்பட வேண்டும். தமிழ்நாடு சிறப்புப் பணிப் படையினர், கருநாடக சிறப்புப் பணிப் படையினருடன் நெருங்கி ஒத்துழைத்து தமிழ்நாடு சிறப்புப் பணிப்படையினரின் நடவடிக்கைகள் மேலும் தீவிரமாக்கப்படும். தேவையான அனைத்து உதவிகளையும் அளிக்கும்படி மத்திய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. பயங்கர கொள்ளைக்காரனான வீரப்பனின் கொடுஞ்செயல்களுக்கு இறுதியாக ஒரு முற்றுப்புள்ளி வைக்க, கடுமையான தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

7. தமிழ்நாடு விவசாயிகளுக்கு காவிரி நீரைப் பெற்றுத் தருவதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மேற்கொண்ட இடையறா முயற்சிகளின் பயனாக, தமிழ்நாட்டுக்கு, நாளொன்றுக்கு 1.25 டி.எம்.கன அடி நீரைத் திறந்துவிட வேண்டுமென்று உச்சநீதிமன்றம் கருநாடக மாநிலத்திற்கு உத்தரவிட்டது. ஆனால் துரதிருஷ்டவசமாக இந்த உத்தரவையோ, விநாடிக்கு 9,000 கன அடி நீரைத் திறந்து விட வேண்டும் என்ற காவிரி நதிநீர் ஆணையம் தொடர்ந்து பிறப்பித்த உத்தரவையோ, கருநாடகம் மதித்து நடக்கவில்லை. உத்தரவுகளைத் தொடர்ந்து மீறும் கருநாடக அரசின் இத்தகைய செயல்பாடுகள், அரசமைப்புச் சட்டத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்ட மாநிலங்களுக்கிடையேயான சச்சரவுகளைத் தீர்த்துவைக்கும் கூட்டாட்சி அமைப்புகளின் சாரத்தையும், வலிமையையும் கேள்விக் குறியாக மாற்றும் வண்ணம் அமைந்துள்ளன. அதன் விளைவாக, நீர் பற்றாக்குறை ஏற்படும் காலங்களில் நீரைப் பங்கிட்டுக்கொள்ளும் கோட்பாட்டின் அடிப்படையிலும்கூட, 2002 டிசம்பர் திங்கள்



2003 ஜனவரி 28]

இறுதியில் உள்ள நிலவரப்படி 60.22 டி.எம். கன அடி அளவுக்கு நீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 13-1-2003 அன்று மாண்புமிகு பிரதமர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். மாண்பமை உச்ச நீதிமன்றத்தின் ஆணையின்படி, 4-9-2002-லிருந்து பற்றாக்குறையாக உள்ள 18.80 டி.எம். கன அடி தண்ணீரைக் கூட திறந்துவிட கருநாடகம் தற்போது தயாராக இல்லை. அதன் விளைவாக, காவிரி டெல்டா பகுதியில் இலட்சக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் பயரிடப்பட்டு உள்ள நடப்பு நெற் பயிர் நம் கண்களுக்கு எதிரிலேயே வாடிக் கருகி வருகின்ற அவலமான நிலை உருவாகியுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொடர் முயற்சியால், கருநாடகம் தற்போது சிறிதளவு நீரைத் திறந்துவிட்டுள்ளது. துரதிருஷ்டவசமாக, இந்த சொற்ப அளவு நீர், காவிரி டெல்டா பகுதியிலுள்ள நடப்பு சம்பா பயிருக்கு ஒரு தடவை பாசனம் அளிப்பதற்குக்கூட போதுமானதாக இராது. நிலைமையை உணர்ந்து, நல்லெண்ணத்துடன் நடப்புப் பயிர்களுக்கு மேலும் ஒரு தடவை பாசனம் அளிப்பதற்கு ஏதுவாக, போதுமான அளவுக்கு நீர் திறந்துவிடப்படும் என்று நாங்கள் நம்புகிறோம்.

8. காவிரி நதிநீர் தாவாவினால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள இடர்பாடுகளைக் களையவும், காவிரி டெல்டா பகுதியில் முன் எப்போதும் காணாத அளவுக்கு வறட்சியினால் ஏற்பட்ட பாதகமான விளைவுகளைத் தணிக்கவும், இவ்வரசு பெருமளவிலான நிவாரணப் பணிகளை மேற்கொண்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 2002, ஜூன் திங்களில் தஞ்சைக்கு நேரில் சென்று பார்வையிட்டு, மூன்று டெல்டா மாவட்டங்களிலும் ரூபாய் 164.18 கோடி செலவில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள அனுமதியளித்தார்கள். இந்த நிவாரணத் திட்டம், நன்கு வரவேற்கப்பட்டது. டெல்டா மாவட்டங்களிலுள்ள சுமார் 10 இலட்சம் நிலமற்ற வேளாண் தொழிலாளர்களுக்கு ரூபாய் 21 கோடி செலவில் தீபாவளி பரிசுப் பொருட்கள் அடங்கிய பைகள் விநியோகிக்கப்பட்டன. நடவு செய்த சம்பா பயிர்களில் 40 சதவீத அளவிற்கு மட்டுமே தற்போது காப்பற்றப்படலாம் என்பது தெளிவாகியுள்ளது. இது பேரிடராகும். மத்திய அரசு, இதை, முன் எப்போதும் ஏற்பட்டிராத தேசிய அளவிலான இயற்கைச் சீற்றமாகக் கருத வேண்டும். டெல்டா பகுதி விவசாயிகள் எந்த அளவிற்கு பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பது மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு விரிவாக விளக்கிக் கூறப்பட்டுள்ளது. விளைச்சலை இழந்துள்ள விவசாயிகளுக்கு

[2003 ஜனவரி 28

இழப்பீடாக ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 5,000 வீதம், ரூபாய் 400 கோடி அளவுக்கு நிவாரண உதவி வழங்குமாறு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலுவாக எடுத்துரைத்துள்ளார்கள். டெல்டா பகுதியிலுள்ள பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, அசல் தொகையை கடன் கணக்கிலிருந்து தள்ளுபடி செய்வது உள்ளிட்ட கடன் நிவாரணத் திட்டம் ஒன்றையும், விவசாயிகள், நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பங்களுக்கான மதிய உணவுத் திட்டத்திற்காக 2 இலட்சம் டன் அரிசியும் வழங்க வேண்டுமென்ற கோரிக்கை ஒன்றினையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள். கோரப்பட்டுள்ள நிவாரணம், மத்திய அரசினால் உடனே வழங்கப்படும் என்று நம்பப்படுகிறது.

9. தமிழ்நாடு, தண்ணீர் பற்றாக்குறையுள்ள ஒரு மாநிலமாகும். பல நூற்றாண்டுகளாகப் பெற்றுவந்த தண்ணீரின் அளவைத் தற்போது பெறுவதற்குக்கூட அது கடுமையாகப் போராட வேண்டியுள்ளது. கேரள அரசு, பவானி ஆற்றின் குறுக்கே சிற்றணை ஒன்றைக் கட்டி, அதன் நீரைத் திருப்பிவிட மேற்கொண்டுள்ள நடவடிக்கை, தமிழ்நாட்டின் மீது விழுந்துள்ள மற்றுமொரு அடியாகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இப்பிரச்சினையை கேரள முதலமைச்சரின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, சிற்றணை கட்டுவதைக் கைவிடும்படி கேட்டுக்கொண்டுள்ளார். மேலும் இவ்வரசு, இந்தப் பிரச்சினை தொடர்பாக, காவிரி நீர் தாவா நடுவர் மன்றத்தை அணுகி, சிற்றணை கட்டுவதற்கு எதிராகத் தடையாணை பிறப்பிக்கும்படி கேட்டுக்கொண்டுள்ளது.

10. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் காலம் முதற்கொண்டு, அனைத்து பெரிய நதிகளையும் நாட்டுடைமை ஆக்குவதன்மூலம், நீர்வள வாயில்களை நிருவகித்து, நீர் வளத்தினைச் சமமாகப் பங்கிட்டுக்கொள்ள, ஒரு தேசிய தொலைநோக்கு பின்பற்றப்பட வேண்டுமென்று இந்த அரசு வற்புறுத்தி வருகிறது. முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 1984 ஆம் ஆண்டிலேயே, மாநிலங்கள் அவையில் உரையாற்றியபோது, கங்கை காவிரி இணைப்புத் திட்டத்தை உடனடியாக செயல்படுத்த வேண்டுமென்ற தனது உணர்ச்சிமிகுந்த கோரிக்கையை வலியுறுத்தினார்கள். நதிகளை இணைப்பதற்கான பணிக் குழுவை மத்திய அரசு அமைத்துள்ளதை இந்த அரசு வரவேற்கிறது. முதலமைச்சர் அவர்கள், 2002 ஆம் ஆண்டு டிசம்பரில், புதுடில்லியில் நடைபெற்ற ஐம்பதாவது தேசிய வளர்ச்சிக் குழு கூட்டத்தில் உரையாற்றுகையில், பத்தாவது திட்டகாலத்திலேயே, மகா நதி



2003 ஜனவரி 28]

மற்றும் காவிரி நதிகளை இணைக்கும் வகையில் நதிகளை இணைக்கும் இத்தொடர் பணியை முடிக்க வேண்டுமென மாண்புமிகு பிரதமர் அவர்களிடம் வலியுறுத்தினார்கள். அவ்வாறே, தென்னக தீபகற்பத்தில், மேற்கு நோக்கிப் பாயும், பம்பா அச்சன் கோயில் நதியை, வைப்பாறு நதியுடன் இணைப்பது போன்ற நதிகளை இணைக்கும் பணியையும் பத்தாவது திட்ட காலத்திலேயே மேற்கொண்டு முடிக்க வேண்டுமென மத்திய அரசிடம் முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

11. தமிழ்நாடு, தன்னுடைய வரலாற்றிலேயே, மிகக் கடுமையான வறட்சி நிலையைச் சந்தித்து வருகிறது. தென்மேற்குப் பருவ மழை பொய்த்ததும் கருநாடகம் விடாப்பிடியாக நீரைத் திறந்துவிடாததும் ஆகிய இரண்டும் சேர்ந்து காவிரி டெல்டாப் பகுதியை வறண்ட பூமியாக மாற்றியுள்ளது. இந்த அரசு அளித்த வறட்சி நிலைமை குறித்த புள்ளி விவரங்களின் அடிப்படையில், மத்திய அரசு, சில வறட்சி நிவாரண செலவிற்கு ஒப்புதல் அளித்தது. நடப்பு ஆண்டில், இதுவரை, வறட்சி நிவாரணம் குறித்து செய்யப்பட்ட செலவு ரூபாய் 142.80 கோடி ஆகும். வேலைக்கு உணவு திட்டத்தின்கீழ் 50,000 மெட்ரிக் டன் அரிசி வழங்கப்பட்டு, அப்பணிகள் முழு வேகத்தில் நடைபெற்று வருகின்றன. முந்தைய மதிப்பீடு, தென்மேற்குப் பருவமழை பொய்த்ததன் பின்னணியில் செய்யப்பட்டதாகும். நன்கு தொடங்கிய வடகிழக்குப் பருவ மழையும், நம்மை ஏமாற்றியது. இது நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளது. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின்படி இவ்வரசு சென்னை நீங்கலான அனைத்து 28 மாவட்டங்களையும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக அறிவிக்க முடிவு செய்துள்ளது. 28 மாவட்டங்களிலும் ஒட்டுமொத்த நிவாரணப் பணிகளை மேற்கொள்ள இது உதவும். மேலும் கூடுதலான நிவாரண உதவி அளிக்க வேண்டுமென நாம் மத்திய அரசை மீண்டும் அணுகுவோம். கூடுதல் உணவு தானிய ஒதுக்கீட்டைப் பெற்று, கோடைக்காலம் முழுவதும் ஊரகப்பகுதிகளில் போதுமான அளவிற்கு வேலைவாய்ப்புகள் அளிக்கும் வண்ணம் பணிகள் நடப்பதை உறுதி செய்வோம்.

12. வடகிழக்குப் பருவமழை பொய்த்துப் போனது சென்னைக்குக் குடிநீர் வழங்குவதில் கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. தற்போதுள்ள குடிநீர் வழங்கலை சிக்கனப்படுத்த, அரசு, விரைவாக நடவடிக்கை எடுத்துள்ளது. அண்மையில் ஹைதராபாத் சென்றிருந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஆந்திர முதலமைச்சரைச்

சந்தித்து, சென்னைக்கு, கிருஷ்ணா நதி நீரை விரைவில் திறந்துவிடும்படி கேட்டுக்கொண்டுள்ளார். பருவமழை பொய்த்ததால் ஆந்திரப் பிரதேச நீர்த்தேக்கங்களிலுள்ள நீரின் சேமிப்பு அளவும் மிகவும் குறைவாக உள்ளது. கண்டலேறு நீர்த் தேக்கத்திலிருந்து விரைவில் தண்ணீரைத் திறந்து விடுவதாக மாண்புமிகு ஆந்திர முதலமைச்சரும் உறுதியளித்துள்ளார். அதுவரையில், நாம், இருப்பில் உள்ள நீரை, அறிவார்ந்த முறையில் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டியுள்ளது. புதிய வீராணம் திட்டம் போன்ற நடுத்தரக்கால தீர்வுகளையும் இவ்வரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. அப்போதுதான், இனி வருங்காலத்தில் இம்மாதிரியான கடும் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுவதைத் தடுக்க இயலும்.

*13.* தமிழ்நாட்டை ஊட்டச் சத்து குறைவற்ற மாநிலமாகவும், பசிப்பிணியற்ற மாநிலமாகவும் மாற்றுவது என்பது வெறும் வாய் வார்த்தையாக மட்டுமே இருந்துவிடலாகாது. முன் எப்போதும் ஏற்பட்டிராத வறட்சியும், தண்ணீர் பற்றாக்குறையும் உள்ள இத்தகைய காலகட்டத்தில்தான், இத்தகைய இடர்ப்பாடும், தேவையும், வெளிப்படையாக நமது கவனத்திற்கு வருகின்றன. வறுமையில் வாடுகின்ற சிறு மற்றும் குறுநில விவசாயிகளுக்கும், நிலமற்ற வேளாண் தொழிலாளர்களுக்கும், அவர்களின் குடும்பங்களுக்கும் இலவச மதிய உணவுத் திட்டத்தினை துணிச்சலாகத் தொடங்கியுள்ள முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை நான் பாராட்டியே ஆகவேண்டும். இது, பசிப்பிணியற்ற தமிழ்நாட்டை உருவாக்குதல் என்ற கொள்கைக்கு உண்மையான அர்த்தத்தையும் உட்பொருளையும் அளித்துள்ளது. எவரொருவரும் பசிப்பிணியின் கொடுமைக்கு ஆளாக்கப்படமாட்டார்கள். மக்களின் நலனைப் பேணிக்காக்க உறுதிபூண்டுள்ள, மக்கள் நலனில் அக்கறை கொண்டுள்ள ஒரு மாநிலம் என்பதற்கு இதைவிட ஒரு சிறந்த எடுத்துக்காட்டு வேறு எதுவும் இருக்க இயலாது.

*14.* தமிழ்நாடு போன்ற முன்னணி மாநிலங்களை, அடுத்தடுத்து வந்த நிதிக்குழுக்கள் கடுமையாக தண்டித்துள்ளன. நியாயமான மறுபகிர்வை நிலைநாட்டுவதில் தவறான அணுகுமுறையை இந்த நிதிக்குழுக்கள் தொடர்ந்து கடைப்பிடித்தது, நன்றாகச் செயல்படுகின்ற மாநிலங்களுக்கு நிதிப் பகிர்வில் பாதகமும் பின்தங்கிய மாநிலங்களின் செயலாக்கமின்மை, நிதிக்கட்டுப்பாடின்மை மற்றும் செயல்திறன் இன்மைக்கும் பரிசளிக்கும் வகையிலும் அமைந்துள்ளது. மாநிலங்களின்





பெருகிவரும் அதிக வட்டியுடன் கூடிய கடன் சுமை போன்ற கடுமையான பிரச்சினைகள் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டன. இது, நன்றாகச் செயல்படுகின்ற மாநிலங்களையும் நிதி இடர்ப்பாடு என்ற ஆழமான படுகுழியில் தள்ளியுள்ளது. நன்றாக செயல்படுகின்ற மாநிலங்களுக்கு இத்தகைய இடர்ப்பாடான நிலை முன் ஒருபோதும் ஏற்பட்டதில்லை. பதினோராம் நிதிக் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்தியதன் விளைவாக, *2000-2005* ஆம் ஆண்டு வரையிலான கால அளவிற்கு, தமிழ்நாட்டுக்கு, ரூபாய் *2,946* கோடி அளவுக்கு நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது. கடந்தகால நிதிச் சீர்குலைவாலும், கடன் நிவாரணத்திற்கான யாதொரு திட்டமும் இல்லாததினாலும், கடனில் மூழ்காமல் சமாளிப்பதற்கு, தமிழ்நாடு கடுமையாகப் போராட வேண்டியுள்ளது. புகழ்பெற்ற பொருளாதார வல்லுநரான டாக்டர் சி. ரெங்கராஜன் அவர்களின் தலைமையில் பன்னிரெண்டாவது நிதிக்குழு அமைக்கப்பட்டிருப்பதை நாங்கள் வரவேற்கிறோம். பழைய பாதையிலேயே செல்லாமல், தங்களுடைய நிதிநிலைமையை பேணிக்காத்துள்ள மாநிலங்களுக்குப் பயனளிக்கும் வகையில், பன்னிரெண்டாம் நிதிக்குழுவின் பரிந்துரைகள் அமையும் என்று நம்புகிறோம்.

*15.* முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் ஆற்றிய அவருடைய உரையில், நேரடி வரிகள் குறித்த பணிக்குழுவின் பரிந்துரைகள் சிலவற்றை ஏற்பதில் உள்ள கடுமையான இடர்ப்பாடுகளை கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளார்கள். உயர் சேமிப்பு வீதம், அதிக முதலீட்டிற்கு வழிவகுக்கும் என்ற உள்ளார்ந்த ஊகத்தின் பேரில் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. சிறு சேமிப்புக்கான அனைத்து ஊக்கத் திட்டங்களையும் திரும்பப் பெறும்படி இப்பணிக்குழு பரிந்துரைத்துள்ளது. இப்பரிந்துரை, பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் தொடங்கவே முடியாமல் செய்துவிடும். வீட்டு வசதிக்காகச் செய்யப்படும் முதலீட்டுக்கான ஊக்கத் தொகைகளையும் கணிசமாகக் குறைத்துவிடும்படி இப்பணிக்குழு பரிந்துரைத்துள்ளது. வீட்டுவசதித் துறையில் காணும் முன்னேற்றம், பொருளாதாரத்தின் பல நிலைகளில் பரிணமிக்கிறது என்பதை யாவரும் அறிவர். அத்துறை ஊக்குவிக்கப்பட வேண்டும். பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக, சிறுசேமிப்பு மற்றும் வீட்டுவசதித் துறைக்கான ஊக்குவிப்புத் திட்டங்களைத் தக்க வைக்கும்படி இவ்வரசு, மத்திய அரசை வலியுறுத்துகிறது.

16. இந்த அரசு, 2001 மே திங்களில் ஆட்சிப் பொறுப்பு ஏற்றபோது, என்றும் இல்லாத அளவிற்கு நிதி நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ஒருமுறை மானியமாக ரூ.3,000 கோடி நிதியுதவி வழங்க வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பிரதமர் அவர்களை கேட்டுக் கொண்டார்கள். இது கிடைக்கவில்லை. உடனிகழ்வாக, உலகவங்கி போன்ற வெளிநாட்டு முகவரமைப்புகளும், 2001 ஆம் ஆண்டிற்கு முன், மாநில அரசு நிதி சீர்திருத்தங்களை மேற்கொள்ளாததால், திட்டம் அடிப்படையிலான கடன்களைக் கூட நிறுத்திவைத்தன. எனவே, நிதி சீர்திருத்தங்கள் தவிர்க்க முடியாதவையாக ஆகியுள்ளன. நிதி நெருக்கடி என்பது புதியதொன்றும் அல்ல என்ற ஒரு தவறான கருத்து பரவலாக நிலவுகிறது. துரதிருஷ்டவசமாக, இந்த மாநிலம் சந்தித்துவரும் நிதி இடர்ப்பாடானது, முன்பு எப்போதும் இல்லாத தன்மையுடையதாகும். மிகையான கடன் சுமையாலும், நடப்பு செலவுகளுக்குப் போதாத நடப்பு வருவாயாலும், தமிழ்நாடு தனது, வளர்ச்சிப் பாதையை முற்றிலும் விட்டுவிட்டு தனது கடமைகளை ஆற்றுவதிலிருந்து தவறுகின்ற அபாயகரமான சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது.

17. நமது மாநிலத்தின் நிதி நிலைமையைச் சீரமைக்கவும், நம்பகத் தன்மையை நிலைநாட்ட வேண்டுமென்ற நோக்கத்திலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நிதி சீர்திருத்த நடவடிக்கைகளை மிகத்துணிச்சலுடன் எடுத்துள்ளார்ககள். இந்த மாநில அரசு, நிலை குலைந்துபோகாமல் இருப்பதை உறுதிசெய்ய இந்த நிதி சீர்திருத்தங்கள் அவசியமானதே ஆகும். நாம் நலமுடன் இருக்க வேண்டுமாயின், இத்தகைய கசப்பான மருந்துகளை உட்கொண்டுதான் ஆகவேண்டியுள்ளது. தற்போதுள்ள நிதிச் சீர்குலைவின் தன்மையையும், கடுமையையும் பார்க்கும்போது, இந்த நிதி சீர்திருத்தத் திட்டம், பல்வேறு துறைகளில் பல்வேறு நடவடிக்கைகளைக் கொண்ட நடுத்தர கால திட்டமாக இருக்க வேண்டியது அவசியமாகிறது. மாநிலத்தின் நிதி நிலைமையை மீண்டும் சீர்படுத்த கடும் முயற்சிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்நின்று எடுத்து வருகிறார்கள் என்பதை அறிந்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். நிதிநிலைமையை முழுமையாக சீர்படுத்த மேலும் பல நடவடிக்கைகள் எடுக்க வேண்டியுள்ளன. இது, நிதி மேலாண்மையில் கையாள வேண்டிய பொறுப்புணர்வை முன்னிலைப்படுத்துகிறது. மாநில அளவில், வலுவான நிதி நிலைமையில் எந்தெந்த கோட்பாடுகள் உள்ளடங்கியுள்ளன என்பது பற்றிய பரவலான ஒருமித்த கருத்தை உருவாக்க வேண்டியுள்ளது. இவைகளை, நிதி மேலாண்மையில்





பொறுப்புணர்வு பற்றிய ஒரு சட்டத்தில் வழிகாட்டு கொள்கைகளாக தொகுக்க முடியும். இந்தக் குறிக்கோளை நோக்கி நாம் பணியாற்றவும் இயலும். அப்போதுதான், மாநிலத்தின் நிதி நிலையைப் பாதிக்கக்கூடிய இத்தகைய பிரச்சினைக்குரிய நிலை, மீண்டும் ஏற்படாமல் அமையும்.

18. மாநிலத்தின் நிதி இருப்புகளில் காணும் மோசமான நிலையைக் கருதிப்பார்க்கையில், ஐந்தாண்டு திட்டம் ஒன்றை வகுப்பதற்கான வாய்ப்புகள் கூட எட்டாத கனவாகத் தோன்றலாம். நிதி சீர்திருத்தங்கள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமது ஒருமித்த கவனத்தை செலுத்தியிருப்பதால், இம்மாநிலத்திற்கான பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தை (2002-2007) மாபெரும் அளவில் ரூபாய் 40,000 கோடி ஒதுக்கீடு கொண்டதாக மாநில அரசால் எடுத்துரைக்கப்பட்டு, அதற்கு மத்திய திட்டக் குழுவின் ஒப்புதலையும் பெற முடிந்துள்ளது. சிறப்பானதும், செயலாக்கக்கூடியதுமான வளர்ச்சித் திட்ட பொருள் நிரல் ஒன்றினை வகுத்ததற்காக நான் முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களைப் பாராட்டுகிறேன். இந்த மாநிலத்தில் நிலவும் நிதிப் பிரச்சினைகளின் அளவைப் பார்க்கும்போது இதை ஒரு சாதாரணமான வெற்றியாகக் கருத இயலாது.

19. தமிழ்நாட்டு மக்களுக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துணிவுடன் மாபெரும் கனவு கண்டுள்ளார்கள். பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் 8 சதவீத வளர்ச்சி வீதத்தை எய்த வேண்டுமென்ற இலக்கை இந்த அரசு வகுத்துக் கொண்டுள்ளது. தேசிய இலக்கிற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே, அதாவது 2010 ஆம் ஆண்டிற்குள் மாநிலத்தின் நபர்வாரி வருமானம் இருமடங்காக உயரவேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொலைநோக்குத் திட்டத்தை வகுத்துள்ளார்கள். நான்குவழி அணுகு முறை ஒன்றைப் பின்பற்றுவதன்மூலம், இதனை எய்த இயலும். இதில், புதிய வளர்ச்சித் திட்டங்களை உருவாக்குதல்; சிறப்பான நிருவாகம்; சட்டம் ஒழுங்கைப் பராமரித்தல் மற்றும் நிதி சீர்திருத்தங்கள் ஆகியவை அடங்கும். மாநிலத்தின் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 15 அம்சத் திட்டத்தின் அடிப்படையில் தமிழ்நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சிக் முழுமையையும் உள்ளடக்குகிறது. 2002 டிசம்பரில், தேசிய வளர்ச்சிக் குழுவின் ஒப்புதலுடன் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கப்படுவதானது குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

20. முதன்மைத் துறைகளின் செயல்பாட்டில், குறிப்பாக வேளாண்மைத் துறையின் செயல்பாட்டில் முன்னேற்றம் காண்பது, பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில மாபெரும் இலக்குகளை எய்துவதில் முக்கிய காரணியாக விளங்குகிறது. முதன்மைத் துறைகளில் வளர்ச்சியை அதிகரிப்பதற்கும், புதிய வாய்ப்புகளைப் பெருக்குவதற்கும் அரசு நன்கு வடிவமைக்கப்பட்ட திட்ட அணுகுமுறைகளை வகுத்துள்ளது. நீர்வாத்துப் பகுதி அணுகுமுறை அடிப்படையில் அமைந்த ஒட்டுமொத்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டமொன்று தொடங்கப்பட்டுள்ளது. இது மூன்று கூறுகளைக் கொண்டது. முதலாவதாக, அனைத்துக் கிராமங்களிலும் உள்ள தனிப்பட்ட உழவர்களுக்குச் சொந்தமான நிரந்தரமான மற்றும் நடப்பு நிலவரப்படியான தரிசு நிலங்களை, வேளாண்-ஆய்வு அடிப்படையிலான (Agri-clinical) அணுகுமுறை மூலம் ஆதாயம் தாத்தக்க பொருளாதார நடவடிக்கையின்கீழ் கொண்டுவரவேண்டும். இரண்டாவதாக, தரிசு நில மேம்பாட்டுப் பணிகளிலும், அவற்றுடன் இணைந்த பதப்படுத்தும் தொழில்களிலும், தொழில் கூட்டு நிறுவனங்களை ஈடுபடச் செய்யவேண்டும். இதற்கான துவக்கப் பணிகள் 7 மாவட்டங்களில் தொடங்கப்பட்டுள்ளன. இம்மாநிலத்தைச் சேர்ந்த 385 வளர்ச்சி வட்டாரங்கள் ஒவ்வொன்றிலும் குறைந்தது ரூபாய் ஒரு கோடி முதலீட்டுடன் வேளாண்மை அடிப்படையில் அமைந்த தொழில்கள் மற்றும் உணவு பதப்படுத்தும் தொழில்களை மேம்படுத்துவதற்கு புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் தனிக் கவனம் செலுத்துவது மூன்றாவதாக அமையும். இத்திட்டத்தின்படி ரூபாய் 227.41 கோடி திட்டச் செலவில், 182 வளர்ச்சி வட்டாரங்களில் செயல்படுத்தவிருக்கும் 258 செயற்குறிப்புகள், பரிசீலனையில் உள்ளன. ஒட்டுமொத்த தரிசுநில மேம்பாடு குறித்த இந்த அணுகுமுறை, முதன்மைத் துறைகளில் வளர்ச்சி வேகத்தை மீளக் கொண்டுவரும். மேலும், இது மாநிலத்தின் வறுமை ஒழிப்புத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு ஏற்ற பயனுள்ளவகையில் மதிப்பு கூட்டும் புதிய நடவடிக்கைகளை ஊரகப் பகுதிகளில் ஏற்படுத்தும்.

21. தொடர்ந்து காணப்படும் நீர்ப் பற்றாக்குறைகள், உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் ஆகியவற்றின் மந்தநிலை, முதன்மைத் துறைகளில் வருவாய் தேக்கநிலை ஆகியவை ஊரகப் பொருளாதாரத்தை கடும் நெருக்கடி நிலைக்கு உட்படுத்தியுள்ளன. அரிதாகக் கிடைக்கும் நம்முடைய நீர் ஆதாரங்களைத் திறம்பட நிர்வகிப்பது குறித்து முக்கிய கவனம் செலுத்தப்பட வேண்டும்.





மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பொருத்தமான முறையில் நகரப் பகுதிகளிலும் ஊரகப் பகுதிகளிலும் மழை நீர் சேமிப்புத் திட்டத்திற்கு அதிக முக்கியத்துவம் அளித்துள்ளார்கள். 100 ஏக்கருக்கும் குறைவான ஆயக்கட்டைக் கொண்டுள்ள சிறிய ஏரிகள், கிராமக் குளங்கள், நீர் வரத்துக் கால்வாய்கள் ஆகியவற்றில் தூர் வாரும் பெரும் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டம், வேலைக்கு உணவுத் திட்டத்தின் (Food for Work) ஓர் அங்கமாக இந்த கோடைக்காலத்தில் போர்க்கால அடிப்படையில் செயற்படுத்தப்படும். அதேபோன்று, 100 ஏக்கருக்கும் அதிகமான ஆயக்கட்டினைக் கொண்ட பொதுப் பணித் துறையைச் சேர்ந்த ஏரிகளை தூர்வாரி, நிலை உயர்த்தும் பெரும் திட்டமொன்றும் தொடங்கப்படும். ரூபாய் 2900 கோடி செலவில் செயற்படுத்தப்படவுள்ள நீர் ஆதாரங்கள் தொகுப்புத் திட்டம்-II-ஐத் தொடங்குவதற்கு அனுமதி கோரியும், அனுமதி வழங்கப்படும்வரை தற்போதுள்ள திட்டத்தைத் தொடர அனுமதிக்குமாறும், உலக வங்கியை, இவ்வரசு கேட்டுக்கொண்டுள்ளது.

22. நமது மாநிலம் தொடர்ந்து தண்ணீர் பற்றாக்குறை உடைய மாநிலமாக அமைந்துள்ளது தற்போதுள்ள உண்மை நிலை. எனவே அதிக அளவு நீர் தேவைப்படும் பயிர்களை உழவர்கள் தொடர்ந்து பயிரிட இயலாது. அதிக அளவு நீரைப் பயன்படுத்தும் உழவர்களின் நடைமுறைகளையும் இந்த வகையில் அவர்களிடையே மலிந்துள்ள பழமைவாதக் கருத்துக்களையும் மாற்றி உறுதியான முயற்சிகளை மேற்கொண்டு, கூடுதல் விலை மதிப்புள்ள பயிர்களையும், குறைந்த அளவு நீர் மட்டுமே தேவைப்படும் வணிகப் பயிர்களையும் பயிரிடச் செய்வதற்கும், தோட்டக்கலையை மேம்படுத்துவதற்கும், மூலிகைச் செடிகளைப் பயிரிடச் செய்வதற்கும் தேவையான ஒரு முனைப்பான முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மற்றும் பயிர்காப்பு மேலாண்மையில் அதிநவீனத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல், திறமையான முறையில் நீரைப் பயன்படுத்துதல், சிக்கனமான செலவில் பண்ணைத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துதல் ஆகியவற்றில் உழவர் சமுதாயம் ஊக்குவிக்கப்படும். புன்செய் வேளாண் மண்டலங்களில், செம்மறி ஆடு வளர்ப்பு ஊக்குவிக்கப்படுவதுடன் கூடிய ஒருங்கிணைந்த பண்ணை நிருவாகத்தை ஊக்குவிக்க, பல்வகை கூட்டு முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். அதிக அளவு நீரைப் பயன்படுத்தும்

[2003 ஜனவரி 28

போக்கிலிருந்து உழவர்களைக் காத்து, அவர்களுக்கு துணை வருமானம் ஈட்டுவதற்கு வகை செய்வதன் மூலம், பருவ மழையின் போக்கினால் அவர்களுக்கு ஏற்படக்கூடிய இன்னல்களைத் தவிர்ப்பதே முக்கிய நோக்கமாகும்.

23. முதன்மைத் துறைகளின் செயல்பாடுகளை மேம்படுத்துவதற்கும், புதிய வாய்ப்பு வளங்களைப் பெருக்குவதற்கும், ஒட்டுமொத்தமாக ஊரக அடிப்படை வசதிகளை மேம்படுத்துவது இன்றியமையாத அம்சமாகும். எல்லாப் பருவ நிலைகளுக்கும் ஏற்ற சாலைகளை அமைக்க வகை செய்யும் பொருட்டு, ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் 2003-2004 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படும். ஊரகப் பகுதிகளிலுள்ள ஏழை எளிய மக்களுக்கு வீட்டுவசதி செய்துதரும் பொருட்டு, இந்த ஆண்டில், ரூபாய் 19.14 கோடி செலவில் 19,142 கச்சா வீடுகள் மேம்படுத்தப்படுவதுடன், மொத்தம் ரூபாய் 141.46 கோடி செலவில் 43,580 வீடுகள் கட்டும் பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டம் 2003 ஆம் ஆண்டிலும் தொடரப்படும். அடுத்துவரும் ஐந்தாண்டுகளில், மொத்தம் ரூபாய் 40 கோடி செலவில், பீடித் தொழிலாளர்களுக்கு ஏறக்குறைய 10,000 வீடுகள் கட்டித்தரப்படும். மகளிருக்கான, எஞ்சியுள்ள 6,309 ஒருங்கிணைந்த துப்புரவு வளாகங்கள் கட்டும் பணியை 2003 ஆம் ஆண்டில் அரசு செய்து முடிக்கும். இத்திட்டத்திற்கு அதிக அளவு ஆதரவு இருப்பதைக் கருத்தில் கொண்டு, கன்னியாகுமரி மாவட்டத்தில் முன்னோடி அடிப்படையில், ஆண்களுக்கான ஒருங்கிணைந்த துப்புரவு வளாகம் கட்டும் பணியும் மேற்கொள்ளப்படும்.

24. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டின் பொருளாதாரத்தில் இரண்டாம் வகை துறையைப் பொருத்தவரை ஏற்றுமதி வளர்ச்சி நோக்கில் அமைந்த முன்னேற்றம் என்கின்ற தொலைநோக்குப் பார்வையை வெளிப்படுத்தியுள்ளார்கள். இவ்வரசு, உற்பத்தித் துறையில் நீடித்த வளர்ச்சியைப் பெறுவதற்காக இரண்டாம் நிலை சீர்திருத்தப் பணிகளை நிறைவேற்ற முனைந்துள்ளது. நடைமுறைகளை எளிமைப்படுத்துதல், தொழில் நடத்தலில் தேவையற்ற செலவுகளைக் களைதல், கட்டுப்பாடுகளை அகற்றுதல், துறைமுகங்கள் மற்றும் சுங்கத் துறை ஆகியவற்றில் தொழில்முறை கால விரயத்தைக் குறைத்தல், வட்டி வீதங்களைக் குறைத்தல், தொழிலாளர் துறை சீர்த்திருத்தங்கள், தகுந்த எரிசக்தி விலை நிர்ணயம் முதலியவை இதில் அடங்கும். இம்மாநிலத்தில்



2003 ஜனவரி 28]

அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் பொதுத் துறையுடன் தனியார் துறை இணைந்து செயல்படுவதை எளிதாக்க இயலும் வகையில் சட்டமொன்றை இயற்ற இவ்வரசு கருதியுள்ளது என்று உங்களுக்குத் தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். இவ்வரசின் சிறப்புப் பொருளாதார மண்டலம் (Special Economic Zone) குறித்த புதுமைக் கொள்கை ஒன்று உருவாகும் நிலையில் உள்ளது. அக்கொள்கை, ஏற்றுமதி நோக்கில் அமைந்த தொழில் பிரிவுகளுக்கு தனி ஊக்கம் அளிக்கும் வகையில், எண்ணூர், சென்னை மற்றும் தூத்துக்குடி போன்ற புதிய பகுதிகளுக்குப் பொருந்தியதாக அமையும். சென்னை மற்றும் திருப்பூரில் ஆடை பூங்காக்கள் (Apparels Park) அமைப்பதற்குத் தேவையான அனுமதி பெறப்பட்டுள்ளது. இவை, இம்மாநிலத்தில் துணித் தொழிலுக்கு பெரும் ஊக்கத்தை அளிக்கும்.

25. தேசிய பொருளாதாரக் கொள்கை தாராளமயமாக்கப் பட்டிருப்பதால், தமிழ்நாட்டிலுள்ள சிறு தொழில்கள், உள்நாட்டு அளவிலும், பன்னாட்டு அளவிலுமுள்ள போட்டியாளர்களுக்கிணையாக, தங்களுடைய திறமையை வளர்த்துக் கொள்ளும் பெரும் சவாலை எதிர் நோக்கியிருக்கின்றன. தொழில்நுட்பத்தை நிலையுயர்த்துவதற்கும், சிறுதொழில் துறைகளின் தாத்தை மேம்படுத்துவதற்கும் ஏற்றதொரு புதிய கொள்கைத் திட்டத்தை வகுக்குமாறு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். அரசுக் கொள்முதல் நடவடிக்கைகளில், சிறு தொழில்களுக்கு முன்னுரிமை வழங்கும் கொள்கையை இந்த அரசு ஏற்கனவே அறிவித்துள்ளது. போட்டியாளர்களுக்கு இணையாக அமையும்படி சிறு தொழில்களின் அனுகூலங்களை வலுப்படுத்தி, தாராளமயமாக்கப்பட்ட பொருளாதாரச் சூழ்நிலையில் சிறு தொழில்கள் தமக்கு உரிய இடத்தைப் பெறுவதற்கு உதவும் வகையில் கடும் முயற்சிகளை நாங்கள் மேற்கொள்வோம்.

26. நீலகிரி மாவட்டத்தில், சிறிய அளவில் தேயிலை பயிரிடுவோர்களின் துயரைத் தணிக்கும் நோக்கத்துடன், பொது விநியோக முறையின் மூலம், "ஊட்டி தேயிலை" என்ற பெயரில், தேயிலை விற்பனை செய்யும் திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தியது. சிறிய அளவில் தேயிலை பயிரிடுவோர்களிடமிருந்தும், தேயிலை நுகர்வோரிடமிருந்தும் இத்திட்டத்திற்கு பெருமளவு வரவேற்பு கிடைத்துள்ளது என்பதை இம்மாமன்றத்தில் நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். "ஊட்டி தேயிலை" விற்பனை 4,075 மெட்ரிக் டன் அளவையும் விஞ்சி, ரூபாய் 30.56 கோடி வருமானத்தை

ஈட்டியுள்ளது. சிறிய அளவில் தேயிலை பயிரிடுவோர்களுக்கு நல்ல வருமானம் ஈட்டித்தருவதை உறுதி செய்வதற்கும், ஒளிவு மறைவற்ற விற்பனையை உறுதி செய்யவும், குன்னூரில், "டீசெர்வ்" (Teaserve) என்றழைக்கப்படும் ஏல விற்பனை மையம் விரைவில் செயல்படத் துவங்கும். தேயிலை பயிரிடுவோர்க்கு நியாய விலை கிடைக்க வகை செயயும் பொருட்டு, 'விலை நிலைப்பாட்டுத் திட்டத்தைச்' செயல்படுத்துமாறு, இந்த அரசு, மத்திய அரசை வலியுறுத்தும். தேயிலைத் தோட்டங்களில் விளைச்சலைப் பெருக்கவும், தேயிலை உற்பத்தியை மேம்படுத்தவும், பொருத்தமான ஏனைய ஊடு பயிர்களை மதிப்புக்கூட்டு அம்சங்களாக, பயிரிட வகை செய்யும்படியாகவும் இருமுனை அணுகுமுறை ஒன்று பின்பற்றப்படும்.

*27.* துணிகள் விற்பனை ஆகாமல் தேங்கியிருந்ததன் மூலமும், கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் நிலவிய கடும் நிதி நெருக்கடிப் பிரச்சினைகளினாலும் தமிழ்நாட்டில் கைத்தறித் துறை முன் எப்போதும் இருந்திராத நெருக்கடியைச் சந்தித்தது. இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தை, சந்தை அடிப்படையில் அமைந்த புதிய திட்டமாக முழுமையாக மாற்றி மறுவடிவமைத்ததற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாராட்டப்பட வேண்டியவர் ஆவார்கள். இத்திட்டம், மாநிலத்திற்குள்ளேயும், வெளியேயும் பொது மக்களிடமிருந்து உற்சாகமான வரவேற்பைப் பெற்றுள்ளது. இந்தப் புதிய திட்டத்தின் கீழ் அரசு, வேட்டி, சேலை வாங்கி, விற்பனை செய்வதற்காக இதுவரை, ரூபாய் 79.84 கோடி அனுமதித்துள்ளது. 1998 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களிலிருந்து கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கவேண்டிய ரூபாய் 27.50 கோடி வட்டி நிலுவை உதவித் தொகையை இந்த அரசு கொடுத்துள்ளது. இது, கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாட்டை மேம்படுத்தியுள்ளது. பழைய இருப்புகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. துணிகளின் இருப்பு அளவு குறைந்துள்ளது. விற்பனை வாய்ப்புகளுக்கு ஏற்ற நவீன மயமாக்கும் திட்டம் குறித்த நடவடிக்கைகள் தீவிரமாகச் செயல்படுத்தப்படும்.

*28.* பணிகள் துறையை மேம்படுத்துவதன் மூலம் வேலைவாய்ப்பு இலக்குகள் குறித்த இவ்வரசின் முக்கிய நோக்கங்களை எய்தப் பெறலாம். இவ்வகையில் விரைந்த வளர்ச்சிக்கு தகவல் தொழில்நுட்பவியல் தகுந்ததொரு உந்து விசையாக இருக்கும் என எதிர்பார்க்கிறோம். இம்மாநிலம், கணினி மென்பொருள் மற்றும் வன்பொருள் வளர்ச்சிக்கான ஒரு முக்கியமான மையமாக, தென்கிழக்கு ஆசிய





நாடுகளின் தகவல் தொழில்நுட்பவியல் வாயிலாக உருவாகி வருகிறது. சிறுசேரியில் உள்ள தகவல் தொழில்நுட்பப் பூங்கா, ஓர் அறிவுத் திறன் சார்ந்த தொழில்நகரியமாக (Knowledge Industry Township) விளங்கும் வகையில் விரிவாக்கப்படும். சென்னையில் உள்ள காந்தி மண்டபம் சாலையை சிறுசேரி தகவல் தொழில்நுட்பப் பூங்காவுடனும், கிழக்குக் கடற்கரைச் சாலையுடனும் இணைப்பதற்காக உலகத் தரம் வாய்ந்த நெடுஞ்சாலை ஒன்று, விரைவில் அமைக்கபபடும். இது, புதிதாக உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ள நிருவாக நகரம் வரையிலும் உள்ள ஒட்டுமொத்தப் பகுதியையும் முக்கியமான தகவல் தொழில்நுட்பவியல் மையமாக உருவாக்குவதற்கு ஏதுவாக அமையும். புதிய தகவல் தொழில்நுட்பவியல் கொள்கை ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. இது, தகவல் தொழில்நுட்பவியலைக் கையாளும் பணிகள் (ITES) மற்றும் நிறுவனங்கள் தங்களது தொழில்முறை தேவைகளை, கொள்முதல் வாயிலாகப் பெறுவது (Business - Process outsourcing ) போன்றவற்றிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கும். உலக வங்கி, ஸ்டேண்டர்டு சார்ட்டர்டு வங்கி, "ஏபிஎன்-ஆம்ரோ வங்கி" (ABN-AMRO Bank) போன்ற நிறுவனங்கள், தங்களுடைய உலகளாவிய செயல்பாடுகளை இங்கே மேற்கொள்ள தெரிவு செய்துள்ளது. சென்னை, ஒரு விருப்பத் தேர்வு இடமாக ஆகிவருகிறது என்பதைக் காட்டுகிறது. இந்த வலுவான கொள்கைத் திறன்களின் அடிப்படையில் நாம் மேலும் செயல்படுவோம்.

*29.* உலகத் தரம் வாய்ந்த சாலைகள், குடிநீர் வழங்கல், எரிசக்தி, வீட்டுவசதி, நகரப் பகுதிப் பணிகள், துறைமுகங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய போதிய அளவிலான மற்றும் தரமான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள், இம்மாநிலத்தில் பெருமளவில் தொழில் முதலீடுகளைக் கவருவதற்கான திறவுகோலாக அமைகின்றன. பத்தாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் உலகத் தரம் வாய்ந்த அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த தனிக் கவனம் செலுத்தப்படும். ரூபாய் 1900 கோடி மதிப்பீட்டுச் செலவில், உலக வங்கியின் நிதியுதவியுடன், தமிழ்நாடு சாலைத் துறைத் திட்டம் அனுமதி வழங்கப்படும் இறுதி நிலையில் உள்ளது. இத்திட்டம் விரைவில் செயற்படுத்தப்படும். உலகத் தரம் வாய்ந்த சாலைகளை உருவாக்குவதில் பொதுத் துறையும் தனியார் துறையும் இணைந்து செயல்படும் வகையில் சாலை மேம்பாட்டு நிதி ஒன்று ஏற்படுத்தப்படும். 2001 ஆம் ஆண்டு வரையிலான கால அளவில் சாலைகளைச்

[2003 ஜனவரி 28

சீரமைப்பதில் ஏற்பட்ட பின்னடைவுகளை சரிசெய்வதற்காக, 2003 ஆம் ஆண்டு மார்ச் திங்களுக்கு முன்னர், ரூபாய் 90 கோடி செலவில் 2500 கிலோ மீட்டர் நீளச் சாலைகளைச் சீரமைக்கும் திட்டமொன்றையும், 2003—2004 ஆம் நிதியாண்டில் ரூபாய் 180 கோடி செலவில் மேலும் 5000 கிலோ மீட்டர் நீளச் சாலைகளைச் சீரமைக்கும் திட்டத்தையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். சேதுசமுத்திரம் திட்டப் பணிகளை விரைந்து நிறைவேற்றுமாறு மத்திய அரசை நாம் வலியுறுத்துவோம்.

30. பருவமழைகள் பொய்த்ததால், புனல் மின் நிலையங்களுக்கு நீர் வழங்கும் நீர்த்தேக்கங்களிலுள்ள நீரின் அளவு மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. எனினும், அனைத்து வகையைச் சேர்ந்த நுகர்வோருக்கும் மின்சக்தி சீராக வழங்கப்பட்டு வருகிறது. மின்சாரம் வழங்கும் தாமும் குறிப்பிடத்தக்க வகையில் மேம்படுத்தப்பட்டுள்ளது. பத்தாம் ஐந்தாண்டு திட்டக் காலத்தில், மின் ஏற்பாட்டு முறையை மேம்படுத்துவதற்கும், மின்சக்தி வழங்கும் தரத்தை உயர்த்துவதற்கும் ரூபாய் 8000 கோடி மூல தனச் செலவில், தமிழ்நாடு மின்வாரியம், திட்டம் ஒன்றைச் செயல்படுத்தும். பெருகிவரும் மின் தேவையை நிறைவு செய்யும் வகையில், தனியார் துறையில், புதிய மின் உற்பத்தித் திறன்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. தனியார் துறையில் 250 மெகாவாட் திறன் கொண்ட புதிய மின் உற்பத்தி நிலையம், 2002 ஆம் ஆண்டு டிசம்பரில் செயல்படத் தொடங்கியுள்ளது. எரிவாயுவை அடிப்படையாகக் கொண்ட மற்றொரு 100 மெகாவாட் திறனுடைய தமிழ்நாடு மின்வாரியத்தின் புதிய மின் உற்பத்தி நிலையம், 2003ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களிலிருந்து செயல்படவுள்ளது.

31. இந்த ஆண்டு, தமிழ்நாட்டில் சுற்றுலாத் துறை வளர்ச்சிக்கு, தனி கவனம் செலுத்தப்படும். பணிகள்சார் துறைகளில் சுற்றுலாத் துறையை ஒரு முக்கிய உந்துசக்தியாக நாம் கருதுகிறோம். முக்கிய சுற்றுலாப் பாதைகளில் தகுந்த அடிப்படை வசதிகள் செய்தல், பொதுத் துறையோடு தனியார் துறையைப் பங்கேற்கச் செய்வதன் மூலம் வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் நிலையான விளம்பர உத்திகளைக் கையாளுதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தி சுற்றுலாத் தொழில் மேம்படுத்தப்படும். ஓட்டல்கள், தங்கும் விடுதிகள் மீதான ஆடம்பர வரிகளையும், கேளிக்கையுடன் இணைந்த அறிவுப் பூங்காக்கள் (Amusement and Theme Parks) மீதான கேளிக்கை



2003 ஜனவரி 28]

வரியையும் குறைக்க அண்மைக் காலத்தில் அரசு எடுத்த முடிவு, மாநிலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாவினை ஊக்குவிப்பதாக அமைகிறது.

32. சென்னைப் பெருநகர்ப் பகுதியை அனைத்து வகையிலும் மேம்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளதைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். புதியதொரு நிருவாக நகர் உருவாக்கத் திட்டம், மெரினா நகர்ப் பகுதி புதுப்பிக்கும் திட்டம் ஆகியவற்றிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டிருப்பது இவ்வகையில் ஒரு முக்கிய திருப்புமுனையாகும். ஓராண்டு, மூவாண்டு மற்றும் பத்தாண்டு கால அட்டவணை கொண்ட சென்னை அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டத்தை தயாரிக்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டிருப்பது அறிந்து நான் பெரும் மகிழ்ச்சியடைகிறேன். இந்த ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படும் இத்திட்டம், சென்னை மாநகரம் தென் மாநிலத்தின் முன்னோடி நகரம் என்ற நிலையை மீண்டும் எய்தச் செய்யும். இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, பருவமழைக் காலத்தில் கடந்த ஆண்டு இந்நகரம் எதிர்நோக்கிய எல்லாப் பிரச்சினைகளுக்கும், குறைபாடுகளுக்கும் முழுத் தீர்வு கிடைக்கும்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த அவைக்குத் தெரிவிப்பதில் நான் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

33. சுற்றுச்சூழல் வளம் காக்கும் அதே நேரத்தில் வளர்ச்சிப் பணிகளுக்கான அத்தியாவசியத் தேவைகளையும் அடையும் ஒருங்கிணைந்த உத்தி ஒன்றை இவ்வரசு உருவாக்கி வருகிறது. நீடித்த வகையிலான மேம்பாடு, நமது கோட்பாடாக இருக்கவேண்டும். மழைநீர் சேமிப்பு பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துவரும் முயற்சிகள் நகரப் பகுதிகளில் ஒரு சமூக இயக்கமாகவே உருவாக்கியுள்ளது. நீரை மறுசுழற்சி முறையில் மீண்டும் பயன்படுத்தும் வகையில், அதிக அளவில் நீரைப் பயன்படுத்தும் பொதுக் கட்டடங்கள் அனைத்திலும் சவ்வூட்டின் மூலம் நீரைச் செறிவூட்டும் செயல்முறைக் கலன்களை (reverse osmosis plants) அமைப்பதையும் இவ்வரசு ஊக்குவிக்கும். நமது நகர மற்றும் ஊரகப் பகுதிகளின் இயற்கை வனப்பைக் கெடுக்கின்ற வகையிலும், சுகாதாரத்திற்குக் கேடு ஏற்படுத்தும் வகையிலும் பயன்படுத்தப்பட்ட பிளாஸ்டிக் பைகளையும், ஏனைய பொருட்களையும் வெளியே தூக்கி எறிவதைத் தடுப்பதற்காக எளிய அம்சங்களுடன் வடிவமைக்கப்பட்ட சட்டம் ஒன்று நிறைவேற்றப்படும்.

[2003 ஜனவரி 28

இம்மாநிலத்தில் அரிதாகக் கிடைக்கின்ற நீர் ஆதாரங்களைப் பாதுகாப்பதற்கும், சுற்றுச்சூழலை மேம்படுத்துவதற்கும், அரசு தொடங்கிய இந்த இயக்கத்தில் பங்கேற்குமாறு நான் பொதுமக்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

*34.* சீர்திருத்த நடைமுறைகளினாலும், நிதி மற்றும் நிர்வாக மேலாண்மையில் மாறுதல் நடவடிக்கைகளினாலும், ஏற்படக்கூடிய கடுமையான பாதிப்புகளிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கு, முனைப்பானதொரு சமூகப் பாதுகாப்புத் திட்டம் அவசியமாகும். இம்மாநில அரசின் சமூகப் பாதுகாப்புத் திட்டம், வாழ்க்கையில் ஏற்படும் சவால்களை கண்ணியத்துடன் சமாளிக்க, தரமான சுகாதார வசதி, கல்வி வசதி ஆகியவற்றை அனைவருக்கும் கிடைக்கச் செய்து, பாதிக்கப்பட்ட, ஏலாமையுற்ற, வயது முதிர்ந்த மற்றும் முதியோருக்குப் பாதுகாப்பு அளிக்க ஊட்டச்சத்து மற்றும் உதவித் தொகை வழங்கல் திட்டம் போன்ற மனித வாழ்க்கைக்குத் தேவையான அனைத்துக் கூறுகளையும் கொண்டுள்ளது. நம்மை எதிர்நோக்கியுள்ள கடுமையான நிதித் தட்டுப்பாடுகளையும் பொருட்படுத்தாமல், சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை வலுவுடன் செயல்படுத்த, இந்த அரசு நிலைமாறாத வகையில் முடிவு எடுத்துள்ளது என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன்.

*35. 2001* ஆம் ஆண்டிற்கு முன்னர் பிறப்பு வீதம், சிசு இறப்பு வீதம், பேறுகால இறப்பு வீதம் போன்ற முக்கிய சுகாதாரக் குறியீட்டு அளவுகள் தேக்கநிலையை அடைந்துள்ளது குறித்து இம்மாநில அரசு, அதிக கவலை கொண்டுள்ளது. இப்போக்கு சரி செய்யப்பட்டு விரைவான முன்னேற்றம் உறுதிசெய்யப்பட வேண்டியுள்ளது. உலக வங்கி நிதியுதவியுடன் ரூபாய் *650* கோடி செலவில் மேற்கொள்ளப்படவுள்ள சுகாதார அமைப்புகள் மேம்பாட்டுத் திட்டம், விரிவான பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டம், வரும் ஆண்டில் செயல்படுத்தப்படும். தரமான அடிப்படை வசதிகளை வழங்குவதன் மூலம் தற்போதுள்ள சுகாதாரத் துணை மையங்கள் நிலையுயர்த்தப்படும். ஊரகப் பகுதிகளில், பயன்தரும் வகையில் சுகாதார நலப் பணிகளை மேற்கொள்ளும் வகையில், கிராம சுகாதார செவிலியர்களுக்கு முறையான பயிற்சி அளிக்கப்படும். தொடக்கச் சுகாதார மையங்களை நிலையுயர்த்துவதற்குரிய திட்டம், படிப்படியாக செயல்படுத்தப்பட்டு இந்த ஆண்டில் இத்தகைய *58* மையங்கள் நிலையுயர்த்தும் பொருட்டு, எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. தேனி, வேலூர் மற்றும் கன்னியாகுமரி



2003 ஜனவரி 28]

ஆகிய இடங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகள் கட்டும் பணி தொடங்கப்பட்டுள்ளது. தொலைசாதன மருத்துவச் சிகிச்சைத் திட்டம் என்ற புதிய திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. இது, தொலைதூர மையங்களிலுள்ள நோயாளிகள் தரமான மருத்துவ ஆலோசனைகளையும், சிகிச்சைகளையும் பெற உதவும்.

*36.* ஒரே சமயத்தில் தலைமைச் செயலாளர் மற்றும் மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவர், வஃக்ப் வாரியத் தலைவர், சிறுபான்மை வகுப்பினர் நல ஆணையத் தலைவர், ஆகிய முக்கிய பதவிகளில் பெண்கள் நியமிக்கப்பட்டிருப்பது முன் எப்போதும் இல்லாதது. மேலும், உண்மையான இருபாலினர் நேர்மை நெறியை நிலைநிறுத்துவதிலும் மகளிருக்கு அதிகாரம் வழங்குவதிலும் அரசு கொண்டுள்ள உறுதிப்பாட்டினை எடுத்துரைப்பதற்கு இது ஒரு மாபெரும் சான்றாகும். திருக்கோயில்களில் பெண்கள் நிருவாக அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். நாட்டில் முதல் முறையாக அனைத்து மகளிர் அதிரடிப்படைப் பிரிவு ஒன்று இந்த மாநிலத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் நீண்ட காலமாக நிலுவையில் உள்ள, நர்டாளுமன்றம் மற்றும் மாநிலச் சட்டமன்றங்களில் பெண்களுக்கு *33* சதவீத இட ஒதுக்கீடு வழங்கும் சட்டமுன்வடிவை, விரைவில் நிறைவேற்ற இந்த அரசு மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தும்.

*37.* தமிழ்நாட்டில், மகளிருக்கு அதிகாரம் அளிப்பது என்பது அரசின் உயர் பதவிக்கு நியமனம் செய்தல் என்பதோடு மட்டும் நின்றுவிடவில்லை. சுமார் *20* இலட்சம் மகளிரைக் கொண்ட, *1.15* இலட்சத்திற்கும் அதிகமான மகளிர் சுய உதவிக் குழுக்களின் திறம்பட்ட செயல்பாடும், நிதி நடவடிக்கைகளில் நம்பகத்தன்மையும், நாம் மேற்கொண்ட மகளிர் மேம்பாட்டுத் திட்டங்களின் மகத்தான வெற்றிக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. மகளிருக்கான தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம், சென்னைக்கு அருகில் முதன்முதலாக ஏற்படுத்தப்பட்ட, மகளிர் உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா, திண்டுக்கல் மாவட்டத்தில் தொடங்கக் கருதியுள்ள சுற்றுச்சூழலுடன் இணைந்த தொழில் நிறுவனங்களடங்கிய பூங்கா ஆகியவை மகளிர் தொழில் முனைவோருக்கு புதிய வாய்ப்புகளை அளிக்கும். மகளிர் உதவி அமைப்புகளைத் தொடங்குதல், நடமாடும் ஆலோசனை மையங்களைத் தொடங்குதல், மகளிர் நீதிமன்றங்கள் அமைத்தல் போன்ற நடவடிக்கைகள் மகளிரிடையே சமூக மற்றும் சட்டப்படிக்கான பாதுகாப்பை அதிகரிப்பதில் பேருதவியாக

அமையும். தமிழ்நாட்டில் மகளிருக்கு அதிகாரம் அளிப்பது என்பது உண்மையிலேயே நிறைவேறியுள்ளது என்று இங்கே குறிப்பிடுவது சரியாகும்.

38. குழந்தைகள் பிழைத்திருப்பதை உறுதி செய்வதுடன் அவர்கள் வலுவான, ஆரோக்கியமான மனநிலையுடன், உடல் வளர்ச்சியடைவதையும் உறுதிசெய்வதில் தமிழ்நாடு பீடுநடைபோடும் தயார்நிலையில் உள்ளது. நிதி நெருக்கடிகள் சுமையாக இருந்தபோதிலும், ஆண்டொன்றுக்கு ரூபாய் 20.98 கோடி கூடுதல் செலவில், காய்கறிகள், சுவையூட்டும் பொருட்கள் ஆகியவற்றிற்கான நிதி ஒதுக்கீட்டை, பயனீட்டாளர் ஒருவருக்கு 23 பைசாவிலிருந்து 35 பைசாவாக அதிகரித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளதோடு, அதைச் செயற்படுத்தியும் உள்ளார்கள். சமூகநலத் துறைகள் குறித்த நடப்பு ஒதுக்கீடுகளைக்கூட குறைக்க வேண்டிய தவிர்க்க இயலாத சூழ்நிலை உள்ளபோதும், ஊட்டச்சத்துமிகுந்த உணவு அளிப்பதற்கான நிதியொதுக்கத்தை அதிகரித்துள்ளதன் மூலம் இவ்வரசு தன் அரிய துணிவை வெளிப்படுத்தியுள்ளது. பெண் சிசுக்கொலை எனும் கொடிய பழக்கத்திற்கு எதிராக சமூக உணர்வைத் தட்டி எழுப்புவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருகிறது. தொட்டில் குழந்தைத் திட்டம், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் போன்ற ஒப்பற்றத் திட்டங்கள் மூலம் பெண் குழந்தைகளுக்கு சிறந்ததொரு வாழ்க்கை அமைய வாய்ப்பை அளிப்பதில் அரசின் முயற்சிகள் சரித்திரத்தில் சிறப்பு முத்திரைகளாக அனைவராலும் பாராட்டப்பட்டுள்ளன.

39. அனைவருக்கும் தொடக்கக் கல்வி என்கிற இலக்கை எய்துவதற்காக, 1994 ஆம் ஆண்டு கட்டாயத் தொடக்கக் கல்விச் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 33/1995) இயற்றிய பெருமை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையே சாரும். இன்று, தமிழ்நாடு, மக்கள்தொகை வளர்ச்சியில் நிலையான தன்மையை நோக்கி முன்னேறுங்கால், புதிய பள்ளிகளைத் தொடங்குதல் என்பதிலுள்ள முக்கியத்துவம் மாறி, 100 சதவீதக் குழந்தைகள் பள்ளியில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கும் அக்குழந்தைகளை தொடர்ந்து பள்ளிகளில் தக்கவைத்துக் கொள்வதற்குமாக முக்கியத்துவம் மாறி அளிக்கப்பட்டுள்ளது. சிறப்பான முறையில் தொடர்ந்து செயல்படும் பள்ளி மதிய உணவுத் திட்டம், பள்ளிப் படிப்பில் குழந்தைகளைத் தக்கவைப்பதை உறுதிசெய்கிறது. பாலர்பள்ளி சிறார்கள் மற்றும் பள்ளி செல்லும் வயதுடைய சிறார்களுக்குச் சத்துணவு அளிக்கும்



திட்டத்திற்கான மொத்த முதலீடு நடப்பாண்டில் ரூபாய் 645.76 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. மதிய உணவுத் திட்டம் முழுவதையும் தேசிய திட்டமாகக் கருதி 100 சதவீத நிதியுதவியை மானியமாக அளிக்குமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு பிரதமர் அவர்களைக் கேட்டுக்கொண்டுள்ளார். அனைவருக்கும் கல்வி (சர்வ சிக்ஷா அபியான்) திட்டத்தின்கீழ், இம்மாநிலத்தில் தரமான கல்வி அளிக்கப்படுவதை உறுதி செய்ய, இவ்வரசு, ஒரு பெருந்திட்டத்தை வகுத்துள்ளது.

40. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த பெண்களுக்கு பட்ட மேற்படிப்பு வரை இலவசக் கல்வி அளிக்க இந்த அரசு, தான் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றியுள்ளது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு அளிக்கப்பட்டுவந்த கல்விக் கடன் உதவியை 2002-2003 ஆம் ஆண்டிலிருந்து மானியமாக மாற்றுவது என்ற அரசின் முடிவு அனைவரின் வரவேற்பையும் பெற்றுள்ளது. பதினோராம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவிகளுக்கு இலவச மிதி வண்டி வழங்கும் திட்டம் அனைவரின் பாராட்டையும் பெற்றுள்ளது என்பது பெரும் மன நிறைவை அளிக்கக்கூடிய ஒன்றாகும். அவர்களுக்கு தரமான கல்வி அளிப்பதற்கான ஏற்பாடுகளை மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன், ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு மாணவரில்லங்கள் கட்டுவதற்கான பெருந்திட்டம் ஒன்றை இந்த அரசு மேற்கொண்டுள்ளது. இது, 2003 ஆம் ஆண்டிலும் தொடரும்.

41. இவ்வரசு, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் ஆகியவற்றைச் சேர்ந்த பெண் தொழில் முனைவோர் மேம்பாட்டுக்கான திட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ளது. இந்த பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 5,000 பயனீட்டாளர் ஒவ்வொருவருக்கும் ரூபாய் 10,000 வீதம் மொத்தம் ரூபாய் 5 கோடி அளவிற்கு நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. இந்த பிரிவுகளைச் சேர்ந்த ஒரு இலட்சம் பெண்களுக்கு, சிறு வியாபாரம் தொடங்குவதற்காக, சிறுகடனாக ரூபாய் 20 கோடி வழங்கப்பட்டு வருகிறது. சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த 1,000 இளைஞர்களைத் தொழில் முனைவோர்களாக மேம்படுத்த ரூபாய் 2.50 கோடி நிதியுதவியும் அளிக்கப்பட்டு வருகிறது.

[2003 ஜனவரி 28

*42.* வளர்ச்சித் திட்டங்களின் செயல்திறனை மேம்படுத்துவதிலும், அவைகள் பரவலாக்கப்படுவதற்கும், சிறந்த நிருவாக நடைமுறைகள் பெரிதும் பயனளிக்கும் என்று இவ்வரசு உறுதியாக நம்புகிறது. தூய்மையான, ஒளிவு மறைவற்ற பங்கேற்பு ரீதியிலான நிருவாகத்தை ஏற்படுத்த, தகவல் தொழில்நுட்பவியலின் அளப்பரிய வாய்ப்புகள் பயன்படுத்திக்கொள்ளப்படும். 2003 ஆம் ஆண்டில் அனைத்து வட்ட அலுவலகங்களிலும் தொடுதிரை தகவல் மையங்கள் (Touch Screen Kiosks) ஏற்படுத்தப்படும். இவ்வரசு, ஊழலுக்கு எதிரியாக தன்னை உருவாக்கிக் கொண்டுள்ளதுடன், தவறிழைக்கின்ற அதிகாரிகளுக்கு இடமளிக்காது செயல்படும். வெளிப்படையான மற்றும் பங்கேற்பு ரீதியிலான நிருவாகத்தை நிலைநாட்ட வழிசெய்யும். புதியதொரு, தகவல் பெறும் உரிமை சட்ட முன்வடிவு பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

*43.* தமிழ்மொழி, கலை, பண்பாடு ஆகியவற்றின் மேம்பாடு குறித்து அரசு உரிய கவனம் செலுத்தும். மாண்புமிகு முதலமைச்சர், 1008 ஏழை தம்பதியினரின் திருமணத்தை முன்னின்று நடத்திவைத்து, அவர்களுக்கு அடிப்படை வீட்டு உபயோகப் பொருட்களையும் வழங்கினார்கள். திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள பல நூற்றாண்டுகள் பழமைவாய்ந்த அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயிலை, இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறை எடுத்துக்கொள்ள மேற்கொண்ட முயற்சிகள், மாநில அரசு உரியகாலத்தில் தலையிட்டதால் கைவிடப்பட்டன. திருக்கோயில்களில் பக்தர்களுக்கு இலவசமாக மதிய உணவு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த அன்னதானத் திட்டம், மக்களால் பெரிதும் பாராட்டப்பட்டுள்ளது. இத்திட்டம், தற்பொழுது 144 திருக்கோயில்களில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இந்த அன்னதான திட்டத்தை, மேலும் பல திருக்கோயில்களுக்குப் படிப்படியாக நீட்டிக்க இவ்வரசு திட்டமிட்டு வருகிறது.

*44.* 2002 அக்டோபர் திங்களில் அரசுப் பணியாளர்களும், ஆசிரியர்களும் மேற்கொண்ட வேலைநிறுத்தத்தை, முறையாகவும் மதிநுட்பத்துடனும் கையாண்டதற்காக இவ்வரசைப் பாராட்ட வேண்டும். மாநில அரசு எதிர்த்துப் போராட வேண்டியுள்ள கடுமையான நிதி இடர்ப்பாட்டினைச் சமாளிப்பதில் தங்களுடைய முழு ஒத்துழைப்பை நல்குமாறு அனைத்துப் பணியாளர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.



2003 ஜனவரி 28]

*45.* இந்த அரசு, *2001* மே திங்களில், ஆட்சிப் பொறுப்பு ஏற்றதிலிருந்து, பல்வேறு பிரம்மாண்டமான பிரச்சினைகளையும், நெருக்கடிகளையும் எதிர்கொண்டு வந்துள்ளது. நிதிப் பிரச்சினையில் ஏற்பட்டுள்ள கடும் இடர்ப்பாடு, தொடர்ந்து இரு பருவமழை பொய்த்ததாலும், கருநாடக மாநிலம் காவிரி நீரில் நமக்கு உரிமை உள்ள பங்கைத் தர மறுத்ததாலும் ஏற்பட்டுள்ள பெரும் பாதிப்பு ஆகியவை, எந்த அரசின் உறுதிப்பாட்டையும் குலைத்து, வளர்ச்சிப் பணிகள் அனைத்தையும் நிலைகுலையச் செய்திருக்கும். மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் எஃகினையொத்த உறுதியும், கடும் இடர்ப்பாடுகளை எதிர்கொண்ட நிலையிலும், அவரின் அயர்ந்து தளர்ந்துவிடாத தன்மையும், மாநிலத்தில் வளர்ச்சி நிருவாகம் சீரழியாமல் தடுத்துள்ளன.

*46.* மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வலுவான. செயல்துடிப்புமிக்க தலைமையின்கீழ் இந்த அரசு, தமிழ்நாட்டு மக்களுக்கு மிகச் சிறந்தவைகள் அனைத்தும் கிடைக்கச் செய்வதில், வெற்றிபெறும் என்று நான் உறுதிபட நம்புகிறேன். இம்மாநில மக்களின் நலனுக்காகப் பணியாற்றும் உங்கள் அனைவருக்கும் என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

தமிழ்நாடு ... காப்பகம்
184533
... 00 008
...லகம்